32 / 28

# உதயன்

பதிப்பு: யாழ் | சுடர் 28 | வள்ளுவர் ஆண்டு 2044
விலை:ரூ | கதிர் 139 | சித்திரை 1, ஞாயிறு 14.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

உதயன் வாசகர்கள்
விளம்பரதாரர்கள்
அபிமானிகள்
அனைவருக்கும்
எமது
விஜய புதுவருட
நல்வாழ்த்துக்கள்

# மீண்டும் மீண்டும் தாக்கப்படும் உதயன்



## வேட்டுக்களைத் தீர்த்து இனந்தெரியாதோர் வெறியாட்டம்





யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

மீண்டும் ஒருமுறை மிகமிக மோசமாக 'உதயன்' தாக்கப்பட்டுள்ளான். 'உதயன்' வெளிவரக்கூடாது என்ற நோக்கத்துடன் நேற்று அதிகாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஏகே-47 ரக தன்னியக்க துப்பாக்கி மற்றும் பிஸ்ரல்களுடன் 'உதயன்' தலைமை அலுவலகத்துக்குள் நுழைந்த மூன்று ஆயுததாரிகள் ஊழியர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துடன் பிரதான அச்சு இயந்திரத்தையும் அச்சுத் தாள்களையும் தீயிட்டு எரித்து கோரத் தாண்டவம் ஆடியுள்ளனர். அச்சிட்டு வைக்கப்பட்டிருந்த 'சூரியகாந்தி' இதழ்களும் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

பார்க்க பக்கம் 02

**2006**
**மே-2**



உதயன் அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் இரு பணியாளர்களை சுட்டுக் கொன்றதுடன் ஆறுபேரைக் காயப்படுத்தினர்.

**2007**
**ஏப்-29**



உதயன் அலுவலகச் செய்தியாளர் எஸ்.இரஜீவர்மன் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**2009**
**மார்ச்-24**



உதயன் பிரதம ஆசிரியரின் வாசஸ்தலத்துக்கு அருகில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

**2011**
**ஜூலை-29**



உதயன் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மீது இனந்தெரியாதோர் கொலை வெறித் தாக்குதல்.

**2013**
**ஏப்.-3**



உதயன் கிளிநொச்சி அலுவலகம் மீது இனந்தெரியாத காடையர்கள் தாக்குதல்

## 'உதயன்' தாக்குதலுக்கு அரசே பொறுப்பு

### ஐ.தே.க. கடும் கண்டனம்

கொழும்பு,ஏப்.14

'உதயன்' பத்திரிகை மீதான தொடர் தாக்குதல்களுக்கு மஹிந்த அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

'உதயன்' அலுவலகத்தினுள் நேற்றுக்காலை துப்பாக்கிகள் சகிதம் நுழைந்த ஆயுததாரிகள் பிரதான அச்சு இயந்திரத்தைச் சுட்டும், பெற்றோல் ஊற்றி எரித்தும் அழித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்

பார்க்க பக்கம் 02

## தமிழக மீனவர்கள் 7 பேருக்கு நடுக் கடலில் கோடரி வெட்டு

சென்னை, ஏப்.14

தமிழக மீனவர்கள் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவும் மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலாளிகள் கோடரியால் வெட்டித் தாக்குதல் நடத்தியதில் காரைக்காலைச் சேரந்த 7 மீனவர்கள் படுகாயமடைந்துள்ளனர் என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காரைக்கால், கிளிஞ்சமேட்டையைச்சேர்ந்த மீனவர்கள் வழமைபோல் நேற்று முன்தினம் இரவு, கோடியக்

பார்க்க பக்கம் 12

## உள் விவகாரமே காரணமாம்

### அரசின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு,ஏப்.14

'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் அச்சு இயந்திரம் மீது இனந்தெரியாத ஆயுததாரிகளால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமை, அது எரியூட்டப்பட்டமை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையில் உள்விவகாரமே தாக்குதலுக்குக் காரணம் என கண்டறியப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இது 'உதயன்' குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் எனத் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹலுகல்ல தெரிவித்துள்ளார்.

'உதயன்' தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்.பொலிஸார் உதயன் அலுவலகத்தில் செய்து முடிப்பதற்கு முன்னரே லக்ஸ்மன் ஹலுகல்ல இந்தக் கண்டுபிடிப்பை வெளியிட்டுவிட்டார்.

'உதயன்' மீதான நேற்றைய தாக்குதல் குறித்து 'உதயன்' அலுவலகத்துக்கு வந்து விசாரணைகளைச் செய்துகொண்டிருந்தவேளை தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலை

பார்க்க பக்கம் 12




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2006
**ஜன.-24**



உதயன் திருகோணமலைச் செய்தியாளர் எஸ்.சுகிர்தராஜன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

## 2006
**ஓக.-15**



உதயன் விநியோகப் பணியாளரான எஸ்.பாஸ்கரன் விநியோகப் பணியின்போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

## 2006
**ஓக.-18**



இராச பாதையிலுள்ள உதயன் களஞ்சியம் இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

## 2006
**செப்.-10**

உதயன் அலுவலகத்தினுள் அத்துமீறி மதிலேறிக் குதித்த ஆயுததாரிகள் ஆசிரியர் பீடத்தினரையும், காவலுக்கு இருந்த பொலிஸாரையும் துப்பாக்கி முனையில் மிரட்டினர்.

## 2007
**நவ.-17**



உதயன் ஆசிரியர்பீட உதவியாளர் வி.நிமலராஜ் நாவலர் வீதியிலுள்ள இராணுவக் காவலரண் அருகில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

## 2009
**பெப்.-26**

உதயன் - சுடர் ஒளி ஆசிரியர் ந.வித்தியாதரன் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டார். பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு இரண்டு மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

## 2009
**ஜூன்-25**

உதயன் பத்திரிகை ஆனைப்பந்தி சந்தியில் வைத்து இனந்தெரியாதோரால் கொளுத்தப்பட்டது.

## 2011
**மே-28**

உதயன் அலுவலகச் செய்தியாளர் எஸ்.கவிதான் இனந்தெரியாதோரால் யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் அருகே வைத்து தாக்கப்பட்டார்.

## 2011
**ஜூன்-16**

உதயன் அலுவலகப் படப்பிடிப்பாளர் எஸ்.ரட்ணம், அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டார்.

## 2011
**ஜூலை-05**

உதயன் நிர்வாகப் பணிப்பாளர் ஈ.சரவணபவனுக்கு இனந்தெரியாதோர் தொலைபேசி மூலமாக மிரட்டல் விடுத்தனர்.

## 2012
**நவ.-27**

உதயன் ஆசிரியர் ரி.பிரேமானந்த் மீது யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டார்.

## 2012
**நவ.-28**

உதயன் நிர்வாகப் பணிப்பாளர் ஈ.சரவணபவனின் வாகனம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் முன்னிலையில் தாக்கப்பட்டது.

## 2013
**ஜன.-10**



உதயன் பத்திரிகை விநியோகஸ்தர் என்.பிரதீபன் வடமராட்சியில் வைத்து இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதுடன், பத்திரிகைப் பிரதிகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

## 2013
**பெப்.-15**



உதயன் ஒன்லைன் ஊடகவியலாளரின் ஒளிப்படக் கமெரா தெல்லிப்பழையில் இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தின்போது இராணுவத்தினரால் அடித்து நொறுக்கப்பட்டது.

# உதயன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சாந்தி, சமாதானம் ஏற்படுத்தும் தமிழ்-சிங்கள புதுவருடம் பிறக்கவுள்ள நிலையில், 'உதயன்' அலுவலகத்தினுள் நுழைந்த சிலர் அதன் அச்சு இயந்திரத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அதனைத் தீயிட்டு எரித்துள்ளனர்.

சிறு குணம் படைத்தவர்களின் ஈனச் செயல் இது. இது நாட்டின் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் கண்டிக்கின்றோம்.

இந்தத் தாக்குதலுக்கான முழுப்பொறுப்பையும் மஹிந்த அரசே ஏற்கவேண்டும். மக்கள் அரச தீவிர வாதத்தை தோற்கடிக்கும் நேரம் வெகு தொலைவில் இல்லை.

'உதயன்' பத்திரிகை மீது குறுகிய காலத்தில் நடத்தப்பட்ட நாலாவது தாக்குதல் சம்பவம் இது -என்றுள்ளது. (த-5)

# உதயன் மீதான தாக்குதலுக்கு தமிழகத் தலைவர்கள் கண்டனம்

சென்னை, ஏப்.14

'உதயன்' அலுவலகத்தின் மீது ஆயுததாரிகள் நேற்று நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் வடக்கு, கிழக்கில் வன்முறைகள் குறையவில்லை.

எஞ்சியிருக்கும் தமிழர்களையும், அவர்களது குரல்களாக ஒலித்துக் கொண்டிருக்கும் ஊடகங்களையும் பாதுகாக்க வேண்டியது ஐ.நா. சபையினதும், சர்வதேசத்தினதும் பொறுப்பாகும். அதனை அவர்கள் காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என அவர்களது கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 'உதயன்' அலுவலகத்தில் எமது பிரதான அச்சு இயந்திரம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு, எரியூட்டப்பட்டமையால் உதயனின் இன்றைய பதிப்பின் பக்கங்களை முழுமையாக அச்சிட முடியவில்லை. இதன் காரணமாக செய்திகளையும் முழுமையாக வெளியிட முடியவில்லை.

உதயனின் பிரதான அச்சுக்கூடம் பொலிஸ் விசாரணைகளுக்காக மூடப்பட்டுள்ளது.

ஆயினும் இன்றைய உதயன் பத்திரிகை வெளிவருவதற்கு வெளியில் இருந்து உதவிய நலன்விரும்பிகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

உதயன்

# மீண்டும் மீண்டும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நேற்று அதிகாலை 4.50 மணியளவில் யாழ். நகரில் அமைந்துள்ள 'உதயன்' தலைமை அலுவலகத்தின் மீது இடம்பெற்ற தாக்குதல் காரணமாக பெருமளவு பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

வழமை போன்று 'உதயன்' பத்திரிகை விநியோகப் பணிகள் நேற்று அதிகாலை இடம்பெற்றுக் கொண்டிருந்தன. இதன்போது பிரதான வாயிலூடாக உள்ளே மூன்று பேர் நுழைந்தனர்.

அவர்களில் இருவர் தலைக்கவசம் மற்றும் ஜக்கெட் அணிந்திருந்ததுடன் ஒருவர் சாதாரணமாக வந்திருந்தார். வாயிலில் கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழியரை, 'தூஷணை' வார்த்தைகளால் தமிழில் பேசியதுடன் துப்பாக்கியைத் தூக்கி 'லோட்' செய்து ஊழியர்களை ஓடுமாறு விரட்டிவிட்டு அவர்கள் உள்ளே சென்றனர்.

அங்கு நின்றிருந்த விநியோகப் பணியாளர்களையும் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி ஓடுமாறு பணித்துவிட்டு, 'உதயன்' அச்சு இயந்திரப் பகுதியை நோக்கி மூன்று பேரும் முன்னேறினர்.

ஒருவர் 'ஏ.கே-47' தானியக்க துப்பாக்கியுடன் வெளியில் காவல் நிற்க எஞ்சிய இருவரும் அச்சு இயந்திரப் பகுதியினுள் நுழைந்தனர்.

உள்ளே நுழைந்தவர்கள் அங்கிருந்த அச்சகப் பணியாளர்களை வெளியே போகுமாறு தமிழில் எச்சரித்துள்ளனர். அவர்கள் அதனை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் தொடர்ந்தும் தமது பணிகளைத் தொடர, அவர்கள் இருவரும் தமது பையினுள் இருந்து 'பிஸ்ரல்' துப்பாக்கிகளை எடுத்துள்ளனர்.

பணியாளர்களை நோக்கி சட சடவென சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனையடுத்து பணியாளர்கள் அச்சகப் பகுதியை விட்டு வெளியேறி ஓடி விட்டனர்.

பணியாளர்கள் வெளியேறிய பின்னர் அச்சு இயந்திரத்தின் மீது வேட்டுக்களைத் தீர்த்த ஆயுததாரிகள் ஒயில் ஊற்றி இயந்திரத்தை எரித்துச் சாம்பராக்கியுள்ளனர். அத்துடன் அங்கு அச்சிடப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெரும் தொகையான ஞாயிறு 'சூரியகாந்தி' இதழ்களையும் தாங்கள் எடுத்து வந்திருந்த டீசலை ஊற்றி எரித்தனர். அதன் பின்னர் அவர்கள் அங்கிருந்து வெளியேறி விட்டனர்.

### தாமதித்து வந்தனர் பொலிஸார்

ஆயுததாரிகள் வெளியேறிய பின்னர் பணியாளர்கள் தீயை அணைத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கமான 119 என்ற இலக்கத்துடன் 'உதயன்' அலுவலகத் தொலைபேசி இலக்கத்திலிருந்து தொடர்பு கொண்ட போதும் பொலிஸார் பதிலளிக்கவில்லை. இதன் பின்னர் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேராவின் கைத் தொலைபேசி இலக்கத்துக்கு கொழும்பு உதயன் அலுவலகத்தினூடாக தொடர்புகொண்டு தெரிவித்ததையடுத்தே பொலிஸார் அலுவலகத்துக்கு வருகை தந்தனர்.

பொலிஸார் தடயங்களை ஆய்வு செய்ததுடன், வழமை போன்று மோப்பநாய் சகிதம் தேடுதலில் ஈடுபட்டனர். எனினும் குற்றவாளிகள் எவரையும் நெருங்கக்கூட முடியவில்லை.

இதேவேளை- தாக்குதல் தொடர்பில் கேள்வியுற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உதயன் தலைமையகத்துக்கு வந்து பார்வையிட்டனர்.

'உதயன்' கிளிநொச்சி அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு மூன்று பணியாளர்கள் காயப்படுத்தப்பட்ட பத்து நாள்களுக்குள் அடுத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் 'உதயன்' மீது மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது மிக மோசமான தாக்குதல் சம்பவம் இதுவாகும். (த-5)

# வழமைபோன்று நேற்றும் விசாரணைகள்








எரிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்



மூடப்பட்டுள்ள உதயனின் பிரதான அச்சுக்கூடம்



எரிக்கப்பட்டுள்ள உதயன் அச்சுக்கூடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## அர்த்தமுள்ள புத்தாண்டுச் சிந்தனைக்கு அரசு மனம் கொள்ளுமா...?

ஆண்டாண்டு காலமாக இந்துத் தமிழ் மக்களால் புனிதமாகக் கொண்டாடப்பட்டு வரும் புத்தாண்டு வரிசையில் இன்று 'விஜய' புத்தாண்டு பிறக்கிறது. அதேபோன்று பௌத்த சிங்கள மக்களால் 'பக்மஹ' மாதத் தொடக்கம் எனக் கருதப்படும் புத்தாண்டின் ஆரம்பமும் இன்றேயாகும்.

அந்த வகையில் இன்றைய புதுவருடப் பிறப்பு நாட்டின் பிரதான இரு இனத்தவர்களால் கொண்டாடப்படுகிறது. இலங்கைத் தீவில் வாழும் மிகப்பெரும் எண்ணிக்கையானோர் இந்த ஆண்டில் தமக்கு நல்லன கிட்ட வேண்டுதல் மேற்கொள்ளும் சிறப்பையும் இன்றைய புத்தாண்டு கொண்டிருத்தல் தனிச்சிறப்பு.

சித்திரை மாதம் இயற்கை ரீதியில், கலாசார ரீதியில் ஏனைய மாதங்களை விட ஒரு படி மேலானதாகக் கொள்ளப்படுகிறது.

பல்வகைச் சிறப்புக்கள் மிக்க சித்திரை-பக்மஹ மாதத்தில், இந்நாட்டில் வாழும் தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் இனநல்லுறவையும், சமாதான சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்கு இருபக்க அரசியல் தலைவர்கள், மிகக் குறிப்பாக ஆட்சி அதிகாரத்தை தம்வசம் கொண்டுள்ளோர் ஆழ்ந்து, உய்த்துணர்ந்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

இனம், மொழி, மதம், கலாசாரப் பண்பாடுகளால் வேறுபட்ட மக்கள் வாழும் ஒரு நாட்டில், அந்நாட்டின் சகல மக்களும் சம உரிமைகளுடனும், சமத்துவமும் மற்றும் சகலவித சுதந்திரங்களையும் கொண்டு வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும். அனைத்துலக மட்டத்தில் அந்த நிலைமை பல நாடுகளில் மிளிர்வதைக் காண்கிறோம்.

இலங்கையைப் பொறுத்தவரை, நாடு அந்நியர் ஆட்சியினின்றும் சுதந்திரம் அடைந்து சுமார் 65 ஆண்டுகள் கடந்துவிட்டன.

ஆனால் பெரும்பான்மை இன ஆட்சியாளர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், நாட்டின் சிறுபான்மை இனத்தவரான தமிழ், முஸ்லிம் மக்களுக்கான நியாயமான அடிப்படை உரிமைகளைத் தானும் வழங்க மனம் இசையவில்லை.

சிங்களப் பெரும்பான்மை வாதத்தின் நிலை நின்று இந்நாட்டின் தமிழ் இனத்தவரை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன், புறக்கணித்து நடத்தியதன் விளைவாக நாடு மூன்று தசாப்த கால போர் அனுபவங்களைச் சந்திக்க நேர்ந்தது.

போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் கழியும் நிலையிலும் இன்னமும் தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய நியாயமான உரிமைகளை முழுமையாக வழங்க முன்வராது முரண்டுபிடித்து வருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நம்பகத்தன்மையான, நியாயமான நடவடிக்கை எதனையும் மிகத் தூரத்திலேனும் காணோம். சிங்கள ஆட்சித் தலைமைகள் முன்வராத நிலையில், அரசின் நியாயமற்ற ஆட்சி நடைமுறை சர்வதேச சமூகத்தின் கண்டனத்துக்கும் உள்ளாகியுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இந்த ஆண்டில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட இரண்டாவது தீர்மானத்தையும் ஏறெடுத்துப் பார்க்கக்கூட மறுக்கிறது இலங்கை அரசு.

எது என்னவாக இருந்தாலும், இலங்கை அரசு தான் வீழ்ந்துள்ள சர்வதேசப் பொறிக்குள் இருந்து தப்புவதற்கு, தமிழர் பிரச்சினைக்கு, இனப்பிரச்சினைக்கு உகந்த, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை முன்வைக்க வேண்டும். அதில் உள்ளார்ந்த ரீதியில் மனம் கொள்வது மிகமிக அவசியம்; பிரதானமும் கூட. நாடுகளை அணி சேர்த்து தான் நினைத்ததை செய்துமுடிக்க இயலும் என்ற பலவீனமான நிலைப்பாட்டை களைந்தெறிய வேண்டும்.

தமிழ் மக்களுடன் நல்லிணக்கம் கொள்வதற்கு, வெளியார் வந்து எங்களுக்குப் புத்திமதி சொல்ல வேண்டும், வழிகாட்ட வேண்டும் எனக் கூறி அள்ளிவீசி தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அரசியல் அடிமைகளாக வைத்திருக்க முனைவது ஏற்புடையதல்ல.

இந்து-பௌத்த புத்தாண்டின் பொதுமைத்துவத்தை உணர வேண்டிய இந்த நன்னாளிலேனும், தெற்கின் அரசியல் தலைவர்கள், கடந்த கால வன்மப் போக்கையும், தாம் பெரும்பான்மையினர் என்பதால் சிறுபான்மையினரைக் காலால் மிதித்து நசுக்கி விடலாம் என்பதை மறந்துவிடுவதே நல்லது.

பிறக்கும் புத்தாண்டிலாவது அவர்கள் அர்த்தமுள்ள சமாதானத்தையும், சக வாழ்வையும் மலரச் செய்ய வேண்டும் என்று மனம்கொள்ளட்டும். அதுவே அர்த்தமுள்ள புத்தாண்டுச் சிந்தனையாகட்டும்.

# எரிபொருள் விலை உயர்வால் வடபகுதி மீனவர் பெரும் துன்பத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.14

பல சந்தர்ப்பங்களில் எரிபொருள்களின் விலை மட்டங்கள் உயர்வடைந்துள்ளமையும் வட கடலில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் தொடர்பாக வழங்கப்படும் எரிபொருள் நிவாரண வழங்கலில் நிகழும் பலவேறு விதமான முறைகேடுகளாலும் வடக்கு மீனவர்கள் பெரும் துன்பம் அடைந்துள்ளனர்.

இதனால் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளனர் என்று மீனவர் கூறினர்.

புத்தாண்டைக் கொண்டாடும் அளவுக்குக்கூட பொருளாதாரம் இன்றி தாம் பெரிதும் அவலப்படுவதாகவும் வடபகுதி மீனவச் சமூகம் தெரிவிக்கிறது.

இதேவேளை, முல்லைத்தீவு பிரதேசத்தின் மீனவர்கள் படும்பாடுகள் பெரும் கவலைக்குரியதாகவே உள்ளது.

போர் முடிவுற்றதன் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ள நாம் மீளவும் எமது மின்பிடிச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு ரூபாவால் தானும் எரிபொருள்களின் விலைகள் அதிகரிப்பதைத் தம்மால் தாங்கிக்கொள்ள இயலாதுள்ளது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். இத்தகைய நிலைப்பாட்டில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதன் காரணமாக மீன் வியாபாரத்தில் இலாபத்தைப் பெற இயலாதுள்ளது என்றும் வங்கிகளில் இருந்து பெறப்பட்டுள்ள கடனை உரிய தவணைகளில் செலுத்த முடியாது உள்ளது எனவும் அவர்கள் கூறுகின்றனர். (ம-22)

## தென்பகுதிச் சந்தைகளில் குடாநாட்டு மரக்கறிகள்

யாழ்ப்பாணம், ஏப்.14

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் அதிகளவானவை தென்பகுதிச் சந்தைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

குடாநாட்டு மரக்கறிகளுக்கு தெற்குச் சந்தைகளில் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ள நிலை யில் பெருமளவான மரக்கறிகள் அங்கு கொண்டு செல்லப்படுகின் றன.

அண்மையில் பெய்த மழையை அடுத்து விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் ஆர்வம் காட்டியுள்ளனர் என்று விவசாயத் திணைக்களத்தினர் தகவல் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மரக்கறி வகைகளின் விலைகளில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுக் காணப்படுகிறது.

தக்காளி, கத்தரி, கரட், பீற்றூட், பச்சைமிளகாய், வெங்காயம் போன்றவை தெற்குக்கு அதிகம் கொண்டு செல்லப்படுகின்றன.

திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறிகளின் நேற்றைய விலை விவரம் வருமாறு:-

கத்தரிக்காய் ஒரு கிலோ 40 ரூபா, வெண்டிக்காய் 30 ரூபா, பயிற்றங்காய் 60 ரூபா, பூசணிக்காய் 25 ரூபா, கரட் 80 ரூபா, பீற்றூட் 60 ரூபா, உருளைக்கிழங்கு 50 ரூபா, கோவா 50 ரூபா, பச்சை மிளகாய் 160 ரூபா, வெங்காயம் 90 ரூபா, முருங்கைக்காய் 400 ரூபா. (ம-17)

## வேலைவாய்ப்பற்ற மோசமான நிலை ஆஸ்திரேலியாவில் தொடர்கிறது

கொழும்பு,ஏப்.14

ஆஸ்திரேலியாவில் வேலைவாய்ப்பற்ற நிலை 5.6 வீதத்தால் உயர்வடைந்துள்ளது என்று தகவல்கள் கூறுகின்றன.

கடந்த இரண்டாண்டுகளில் வேலைவாய்ப்பற்ற நிலை இவ்வாறு உயர்வடைந்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இது எனவும் ஆஸ்திரேலிய புள்ளி விவரத் திணைக்களம் தெரிவிக்கிறது.

கடந்த மார்ச் மாதத்தில் வேலைவாய்ப்பிழந்துள்ளவர்களின் தொகை 36 ஆயிரம் வரையில் உயர்ந்து சென்றிருந்ததாகவும் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் அதிகரித்துச் செல்லக்கூடும் என்று ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். (ம-22)

## நாளைய பொது விடுமுறையை தனியார் ஊழியருக்கும் வழங்குக

### தொழில் அமைச்சு சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.14

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை அரசால் அறிவிக்கப்பட்ட பொது விடுமுறை தினத்தைத் தனியார் துறை ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றைத் தொழில் அமைச்சு அனுப்பி வைத்துள்ளது என்று வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வர்த்தக நிலையங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் உட்பட அனைத்துத் தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றும் பணியாளர்களுக்கு நாளை விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

இந்த நடைமுறையை மீறுவோர் அன்றைய தினம் பணியாளருக்கு கொடுப்பனவை இரட்டிப்பாக வழங்கவேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## யாழ்.மாநகர சபைக்கான புதிய கட்டம் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்தது

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்.மாநகர சபைக்கான புதிய கட்டடப் பணிகள் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட வுள்ளன. இதற்கான நிதியை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று மாநகர முதல்வர் தெரிவித்தார்.

800 மில்லியன் ரூபா செலவில் மாநகர சபைக்கான புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

முதல் கட்டமாக இருநூறு மில்லியன் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது. யாழ். மாநகர சபைக்கான புதிய கட்டடம் அமைக்க கடந்த இரண்டு வருடங்களின் முன்பு அடிக்கல் நடப்பட்டது.

எமது கலாசார பாரம்பரியங்களைக் கொண்டதாக புதிய கட்டடம் அமையும் எனத் தெரிகிறது. (ம-7)

## இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஏப்.14

புதுவருடத்தை முன்னிட்டு பொற்பதி இந்து விளையாட்டு கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இரத்ததான நிகழ்வு பொற்பதி அறிவாலயத்தில் இன்று காலை 9 மணிமுதல் இடம்பெறும். (ம-400)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ். மாவட்டத்திலுள்ள தாச்சி நடுவர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்துக்கு முன்பாகவுள்ள தாச்சிச்சங்க அலுவலகத்தில் நடுவர் குழுத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-288)

★ ★ ★

இலங்கை இந்திய உறவுகளும் அதன் சமகால போக்குகளும் தொடர்பான கலந்துரையாடல் டி.எம்.எஸ் கல்வி நிறுவனத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ந)

## புத்தாண்டுக்காக முளைத்த கடைகள்

தென்மராட்சி, ஏப்.14

தென்மராட்சி பிரதேச கிராமங்களில் நடமாடும் உடுபுடைவை விற்பனை நிலையங்கள் புத்தாண்டு வியாபாரத்துக்காக முளைத்துள்ளன.

உடுபுடைவைகள் வாகனங்களில் மலிவு விலையில் விற்கப்படுவதால் பெருமளவு மக்கள் கொள்வனவு செய்வதைக் காண முடிகிறது.

கிராமப் புறங்களில் காணப்படும் மர நிழல்களில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு வியாபாரம் செய்யப்பட்டுவருகின்றன.

நடமாடும் விற்பனை வாகனங்கள் கிராமப் புறங்களில் காணப்பட்ட போதிலும் சாவகச்சேரி பொதுச் சந்தையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் புடைவைகள் கொள்வனவு செய்வதைக் காணமுடிகிறது. (ம-9)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.14

கலைச்சுடர் என்.இராமச்சந்திரனின் ஊடகவளங்கள் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கல்வியங்காடு அம்மன் ஆலய மண்டபத்தில் இன்று இடம்பெறும்.

பத்திரிகைத் துறையில் 35 வருடங்களாக எழுதிய சிறப்புக் கட்டுரைகளின் தொகுப்பே வெளியிடப்படவுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரும் இவரது பத்திரிகை தொகுப்பு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய வீட்டுடன் காணி விற்பனைக்கு

60/4, பலாலி வீதி, திருநெல்வேலி மக்கள் வங்கிக்கு அருகில் புதிய வீட்டுடன் 2 பரப்பு காணி விற்பனைக்கு.

தொடர்பு: 0770378548 (35992) (6.7)

## யாழ்ப்பாணம் புத்தூரில் காணி தேவை

முக்கியமாக நிலாவரை பகுதியில் குறைந்தது 5 லாட்சம் காணி தேவைப்படுகின்றது. உட்செல்லும் பாதை அவசியம்.

தொடர்பு:077 853 5767/075 658 8148

E.Mail-penpal@eureka.lk

(தரகர் தொடர்பு கொள்ளலாம்) (C/8165) (6.7.11)

## பெண் வேலையாள் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு (பராமரிப்புடன்) வேலையாள் தேவை.

தொடர்பு:077 840 5767 (35985)(6.7.11)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் 27.5 Perch (2¾ பரப்பு) காணி விற்பனைக்குண்டு. யாழ் நகரில் இருந்து 500m தொலைவில் பிரதான வீதியில் அமைந்துள்ளது. கல்யாண மண்டபம், விடுதி, வர்த்தக நிலையம் ஆகியவற்றிற்கு ஏற்றது. மின்சார வசதி, குழாய்க் கிணறு வசதியுடன் கூடிய மூன்று கடைத் தொகுதி அவசர விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 192 3430 (C/8165)(6.7.11)

## விற்பனைக்கு

கட்டுடை, மானிப்பாயில் 9 பரப்பு காணியுடன் கோழிப்பண்ணை விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 036 6488 (35987)(6.7.11)

## அபாட்மண்ட் விற்பனைக்கு

கொழும்பு கின்சி றோட் / வாட் பிளேஸ் சந்தி அருகில் கின்சி றோட்டில் ஒரு அபாட்மண்ட் விற்பனைக்கு உண்டு. (வைத்திய கல்லூரி, நசனல் ஆஸ்பத்திரி, கண் ஆஸ்பத்திரி அருகில்)

தொடர்பு: 077 259 3012 (C/8117) (5-6-7)

## மணமகள் தேவை

★83 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 32 பாவமுடைய நிருவிலந் C.I.M.A கணக்காளர் ஆக்க, படித்த மணமகள் தேவை.

★ 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 10¾ பாவமுடைய அமெரிக்காவில் MSC நேரில் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

★ 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல்69 பாவமுடைய C.I.M.A கணக்காளன் அமெரிக்க பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு கலை சார்ந்தவரான மணமகள் தேவை.

★ 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 53 பாவமுடைய C.I.M.A கணக்காளன் அமெரிக்காவில் தொழில் புரிகின்றார் பட்டதாரி மணமகள் தேவை.

★ 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 42 பாவமுடைய C.I.M.A கணக்காளன் லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு பட்டதாரி, அவை போல்வரும் மணமகள்தேவை.

★ 76 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 22 1/2 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகான மணமகள்தேவை.

★ 85 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 24 பாவமுடைய ஜேர்மனி பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை

இல.455/3 கோயில் வீதி, நல்லூர்

T.P: 0776070862 (35959) (6.7)

## மணிவிழாக் காணும் நாயகியை மனமுவந்து வாழ்த்துகின்றோம்




யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழைய மாணவியும், தற்போதைய பகுதித் தலைவருமாகிய

### திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி

(B.Com, Dip.in.Edu)

அவர்கள் 14.04.2013 அன்று தனது அகவை அறுபதில் சேவையினின்றும் ஓய்வுபெறுகின்றார். ஆசிரியையின் சேவைகள்.

18.01.1982 - 31.03.1989 மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்.
01.04.1989 - 31.05.1993 யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
01.06.1993 - 13.04.2013 யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

*அன்பின் பிறப்பிடமாய்*
*பொறுமையின் பொக்கிசமாய்*
*குணத்தின் குன்றாய்*
*கடமையில் கண்ணியமாய்*

விளங்கிய எமது ஆசிரியை தமது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும்பெற்று பல்லாண்டுகாலம் வாழ எல்லாம் வல்ல வேம்படி விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:*
*கல்லூரிச் சமூகம்,*
*யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.*

(27828)(15.6.7)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி - சுன்னாகம்

### 2015A/L

உயிரியல், கணித, வர்த்தக, கலை, தகவல் தொடர்பாடல் புதிய பிரிவு வகுப்புகள்
ஆரம்பம் 24.04.2013 புதன் 8 a.m

★ எல்லாப் பிரிவுகளுக்கும் அனுமதி வழங்கப் படுகின்றது.
★ உயிரியல், கணிதப் பிரிவு மாணவர்களுக்கு விசேட Tution Class இலவசமாக ஒழுங்கு செய்யப்படும்.
★ 5A இக்கு மேல் பெற்றவர்களுக்கும், விஞ்ஞானம், கணிதம், A சித்தி பெற்று அனுமதி பெறுபவர்களுக்கும் புலமைப் பரிசில் பணம் மாதாந்தம் வழங்கப்படும்.
★ உயிரியல் பிரிவு, கணித பிரிவு கல்வி கற்கும் மாணவர்களுக்கு Hostel வசதி செய்து கொடுக்கப்படும்.
★ கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து 22/04/2013 இக்கு முன் ஒப்படைக்கவும்.

அதிபர்.

வகுப்புகள் 24/04/2013 புதன்கிழமை ஆரம்பமாகும். (c/8344.17)

## பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்பு: 077 3033 803 (26218) (6.11)

## தேவை

25,000/=-45,000/= வரையான சம்பளத்திற்கு துறைமுகத்தில் (தனியார்) கப்பலில் வேலை செய்வதற்கு Repairing,welder Helper தேவை. வயது 18-55 வயதான ஆண்கள் சாப்பாடு, தங்குமிடம் இலவசம்.

தொடர்பு: 077 303 3803 (26217)(6.7.11)

## காணி விற்பனைக்கு

பிரதான வீதி சங்கானை தேவாலய வீதியில் 200m தூரத்தில் 16 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. (35837) (6.7)

தொடர்பு: 021 321 3311 / 021 222 3356

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியில் இராம லிங்கம் வீதியில் இருந்து செல்லும் அம்மன் வீதியில் நூறு யார் தூரத்தில் சந்திரசேகரனார் வளவு ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(35906)(5-6) தொடர்பு:077 801 2242

## நெஞ்சை உருக்கும் ஓராண்டு நினைவுகள்

அன்னை மடியில் 09 12 1916



ஆண்டவன் அடியில் 26 04 2012

### அமரர் கணபதிப்பிள்ளை வள்ளியம்மை

திதி:15.04.2013.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த எமது அருமை அம்மாவே! எம்மை விட்டுப் பிரிந்தாலும் மனதால் நாம் பிரியவில்லை. நீங்கள் இன்றும் எம்முடன் வாழ்வதாகவே நினைத்து நிதமும் வாழ்கிறோம். உங்களது விருப்பப்படி, இந்த உலகில் வாழும்வரை நல்லவராயும், வல்லவராயும், உங்களது மறவாத நினைவுகளுடன் வாழுவோம். இது உறுதியானது.


**உங்களது ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.**

இல: 846 ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி. (c/...)(6.7)

உங்களின் அன்பான
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## பரராஜசிங்கம் சர்மிலன்



நுணாவில் சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் சர்மிலன் (30.03.2013) அன்று பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரராஜசிங்கம் - மனோராணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையா மற்றும் தங்கமணி தம்பதியரின் அன்பு மருமகனும், நந்தினியின் (ஆசிரியை, உடுத்துறை மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், அபிஸ்நயாவின் ஆருயிர்த் தந்தையும், பமிலன் (நோர்வே), நகுலன்(நோர்வே), தர்சினி (கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், யஸ்மினி (கொழும்பு), சுபோதரன் (சிவா, யசோ மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்), தயாளன் (லண்டன்), நளினி (சுவிஸ்), அம்சத்வனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சசிகரன் (சுவிஸ்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும், கிரிசாந்தியின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2013) திங்கட்கிழமை மட்டுவில் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கைதடி நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தினி கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (c/8331)(6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 05.03.1934 இறப்பு 15.01.2013



### அமரர் ராமசாமி பொன்னுச்சாமி

அல்லும் பகலும் அரும்பாடுபட்டு
எம்மை வளர்த்து விட்டீர்களே
தாத்தா! இன்று இந்த உலகில்
வாழ்ந்தது போதும் என்று
எம்மை மறந்து இன்னுமொரு
புது உலகத்திற்கு சென்று விட்டீர்களா?


உங்கள் பிரிவைத் தாங்கமுடியாமல் துயருறும்
பேரன்

தொ.பே: 023 2250205
கீரி, மன்னார். (c/...)(6.7)

திரு.திருமதி பா. யோகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் வாரிவள்வு பிள்ளையார் கோயில்



# தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 14-04-2013

## அருள் பொழியும் வாரிவளவு விநாயகர்

இவ்வாலயத்தில் இந்துசமய ஆத்ம முறைப்படி நித்திய, நைமித்திய பூசைகள் அனைத்தும் சிறப்புடன் நடை பெற்று வருகின்றன. வெள்ளிக்கிழமை பூசை, தமிழ் மாதப்பிறப்பு அபிஷேகம் என்பவற்றுடன், விநாயகரின் விரதங்களில் ஒன்றான மாத சதுர்த்தி விரதமும் மிக சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அத்துடன் மார்கழி மாதத்தில் வரும் பிள்ளையார் கதை 21 தினங்களும், கஜமுகா சங்காரமும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. வருடாந்த மகோற்சவம் சித்திரை புத்தாண்டை இராதோற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்கள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயத்தில் அதிக ஈடுபாடுகொண்டவரும் அறங்காவலர் தம்பையாவின் உறவினருமாகிய அமரர் சி. கந்தையா, விநாயகப் பெருமானுக்கு தேக்கு மரத்தினால் தேரினை அமைக்க விரும்பி தென்னிந்தியாவில் இருந்து வீரபத்திர ஆச்சாரியார் தலைமையில் மூன்று ஆச்சாரியார் குடும்பங்களை அழைத்து வந்தார். இவர்கள் மூன்று வருடங்களில் தேரினை அமைத்தனர். இத்தேர் இந்து சமய தத்துவங்களை விளக்குமுகமாக பல கலை யம்சங்கள் பொருந்திய சிற்பங்கள் செதுக்கப்பட்டு சிறந்த சித்திரத் தேராக விளங்கிவருகின்றது.

காரைநகரில் 1991 இல் ஏற்பட்ட பெரிய இடப்பெயர்வினால் இவ்வாலயத்தின் எழில் குன்றி நைமித்திய கிரியைகள் நடை பெறாது தடைப்பட்டிருந்தன. 1996 இல் மக்கள் மீளக்குடியமர தொடங்கியதும் இவ்வாலயத்தில் முறையே நைமித்திய கிரியைகள் நடைபெறத் தொடங்கியதுடன் ஆலய உற்சவங்களும் நடைபெறத் தொடங்கின.

### நான்கு திசைகளிலும் கோபுரம்

நாங்கள் செவ்வாயில் குடியிருந்தாலும் பெற்ற தாயையும் பிறந்த பொன்நாட்டையும் மறக்க இயலாது. அதே போல விரல் களுக்குள் தமிழ் தந்த குல விநாயகரையும் மறக்க இயலாது என்பதற்கிணங்க கடலும், வயலும், கல்வியும், பொருளும், மனிதமும் நிறைந்த காரைநகர் கற்பக விநாயகர் ஆலயத்தை இவ்வூர் மக்கள் எங்கிருந்தாலும் ஒன்றிணைந்து வாரி வழங்கிய நிதியினை ஆதாரமாகக் கொண்டு இக்கோயில் மிகச் சிறந்த அழகும் அருளும் பொழியும் ஆலயமாகப் புனரமைக்கப்பட்டுள் ளது. தமிழ் நாட்டில் பல்லவ சோழ மன்னர்கள் அமைத்த பெரும் கோயில்கள் போல் விநாயகப் பெருமானின் அடியவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு அழகு மிகு தேவகேஷ்டமாக புனர்நிர்மாணம் செய்துள்ளார்கள்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது நம்மிடம் உள்ள முது மொழி ஆகும். காரைநகரில் முதன் முதலாக கோபுரம் கட்டப்பட்ட திருக்கோயில் என்ற பெருமை வாரி வளவு பிள்ளையார் ஆலயத்திற்கே உரியது. ஈழமணித் திருநாட்டில் நான்கு பக்கமும் கோபுரம் அமைக்கப்பட்ட பெருமைக்குரிய கோயிலாக வாரிவளவு விநாயகர் ஆலயமே இன்றும் திகழ்ந்து வருகின்றது. நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மண் கோயிலாக இருந்த இவ் ஆலயம் இவ்வாறு அழகும் அருளும் பொழியும் ஆலயமாக நான்கு திசைகளிலும் கோபுரங்கள் அமைக்கப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இவ் ஆலயம் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய நயினாதீவு நாகபூசணி அம்பாளின் பிரதமகுரு சிவஸ்ரீ பரமசாமி குருக்களின் தலைமையில் இருபத்தி இரண்டு ஆண்டுகளின் பின்னர் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது. பார்ப்போர் உள்ளங் களைப் பக்திப் பரவசமாக்கும் எழில் மிகு கற்பக விநாயகர் ஆலயத்தை நாமும் ஒரு முறை தரிசித்து விநாயகப் பெருமானின் அருளைப் பெறுவோமாக.

- தர்ஶிகா.

விளம்பர அனுசரணையாளர்கள்

**லலிதா ரெக்ஸ்**
இல. 5,6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5260
**நியூ லலிதா ரெக்ஸ் & சூ பலஸ்**
இல. 42, பஜார் வீதி, வவுனியா.
தொ.பே: 024 222 1234

**கணேசன் ரெக்ஸ்**
சுப முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின்
சாம்ராஜ்யம்
201, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**மகாராணி பட்டுச்சோலை**
50, பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P.021 222 3104

**திருமுருகன் கொம் நெற்**
இல. 259, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7835.

**இளவரசி சேலைச் சோலை**
பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ : 021 222 2503
தொ.நகல்: 021 222 8441

**S.T. PARAMESWARAN & CO (PVT) LTD**
TRANSPORT SERVIES
Colombo - Jaffna - Colombo
Head office
182, Central Road,
Colombo - 12
Tel : 0112347210
Branch Office:
79, Stanley Road,
Jaffna.
Tel : 021 222 7316

**சிவகணேசன் ரெக்ஸ்**
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்**
(இராஜபுரம்)
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6953.

**American**
57/47, களஞ்சிய அறை,
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3096, 021 222 7282

**Nagaratnam & Co.**
இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
மொத்த கொள்வனவுக்கு வாகன
வசதி உண்டு.

**Super Shoes**
154, Navalar Road,
Jaffna.
Tel: 021 222 6809

**கிருஸ்ணா**
அசல் 22 கரட். தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிருஸ்ணா அடகு கடை.
370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ



காலை 8.00 மணிக்கு செந்தாமரை பூசையைத் தொடர்ந்து
சுவாமி தேரில் காலை 10.00 மணிக்கு ஆரோகணிப்பார்



# தேர்த்திருவிழா சிறப்பிதழ் –

## அருளாசிச் செய்தி

தீராத வினைகளெல்லாம் தீர்த்து வைக்கின்ற தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாத தனித்துவம் வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகருக்கு புதிய முகவுத்தர எண் கோண வடிவத்தில் அழகுற அமைக் கப்பெற்ற தேரிலே அடியார்களின் வினைபோக்குவதற்காக யாழ்.தீவகம் மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக் கின்றார்.

மண்கும்பான் என்னும் மாபதியில் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர் ஓங்காரரூபமாக மலர்ந்துள்ள விஜய வருடப் பிறப்பில் அவ்வூர் மக்களுக்கு வரும் இடர் தீர்க்க புதிய தேரினிலே மாபவனி வருகின்றார்.

எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் மண் கும்பான் மக்கள் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழப் பிரார்த்திப்பதோடு நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து இறையருள் சுரந்து உலகம் செழிப்புற்றோங்க ஆசி வழங்கி வாழ்த்துகின்றேன்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

## அருளாசி பெறுவோம்

*வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்.*

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் இன்று புதிய சித்திரத் தேரில் எழுந்தருளி அருள்பாலிக்கின் றார்.

தமிழர்களின் சித்திரைப் புத்தாண்டு தினத்தில் எம் பெருமான் புதிய சித்திரத் தேரிலே வீதியுலா வரும் காட்சியைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும். இப்படிச் சிறப்பாக நடைபெறுகின்ற ரதோற்சவத்தில் விநாயகப்பெருமானுடைய தேர் வடத்தினை பற்றி இழுப்பதன் மூலம் நாம் இப் பிறவியிலே செய்த பாவங்களைக் கழுவலாம். எனவே வீரகத்தி விநாயகருடைய ரதோற்சவத்தில் கலந்து சிறப்பித்து வீரகத்தி விநாயகனின் திருவருளாலே அடியவர்கள் அனைவரும் சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ ஆசிகள் கூறுகின்றேன்.

சிவாகமசாகரர் சிவநெறிச் செம்மல்சிவஸ்ரீ
ப.மு. பாலகுமாரசாமி சிவாச்சாரியார்
(வடகோவை), நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோவில்.

## ஆலயத்தின் வரலாற்

மண் கும்பான்வெள்ளைப் புற்றடியில் வீற்றிருந்து அடியார்க்கு அருள் பாலிக்கும் விக்கின
(14.04.2013) எண்கோண முக பத்திரத் தேரேறி வருகிறார். அந்தத் தேர்த் திருவிழாவை முன்
குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். பண்டைக் காலத் துறைமுகமாக விளங்கியது ஊர்காவ
விக்கிரகங்களை யாழ்ப்பாணத்தில் கோயில் அமைக்க எடுத்து வந்தார். வரும் வழியில் களைப்பு
வைத்துள்ளார். களைப்பாறி மீண்டும் செல்வதற்கு விக்கிரகங்களை எடுத்த போது எம் பிள்ளை
காவோலையால் நிழல் அமைத்து ஊரில் உள்ளவர்களைப் பராமரிக்குமாறு கூறிச் சென்று விட்ட
ஆலயமாக்கி வழிபட்டு வந்தார்கள். இவ்வாலயத்தின் தொன்மையை கோயில் பதிவேடு எடுத்
ஆண்டுப் பதிவேடுகளில் இவ் ஆலயம் பதியப்பட்டுள்ளமை ஆலயத்தின் பழைமையைப் பறை சாற்
தோம்பு இருப்பது பழைமையின் சான்றாகும். இவ்வாலயம் அமைந்துள்ள சூழல் அன்று வெள்
எலிகளாலோ உடும்புகளாலோ புற்றுக்கள் எடுக்கப்பட்டிருக்கலாம். அப்புற்றுக்கள் வெள்ளை மண
''வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார்'' என அடியார்கள் பெயரிட்டு அழைத்திருக்கலாம்

ஓலைக் குடிலாக இருந்த ஆலயம் கற்களால் அமைத்து கிணறுகளும் கட்டி உள் வீதியைச்
கட்டப்பட்ட மதில்களும் அமைந்திருந்தன. ஆலயத்தின்வளர்ச்சியில் சுப்பிரமணியம் வினாசித்
அடுத்த அர்த்த மண்டபத்தினையும் வெள்ளை வைரக்கல்லால் அமைத்து ஆலய வளர்ச்சிக்கு வி
சிறப்பாகப் பேசப்பட்டு வந்தது. அதன் பின்னர் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வந்தனை பழி படுவோ
பின்னராகும். தொடர்ந்து பல கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன. 1982 இல் ரு ருந்து 19
குறிப்பிடலாம். உள்வீதி, மண்டபம் அமைக்கப்பட்டு தேர்த்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது இக்
வளர்ச்சியின் அடுத்தகால கட்டம் இடப் பெயர்வின் பின் மீள் குடியேறிய 2000 ஆம் ஆண்டுக்
செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டு ஆவணி 21 இல் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. நில
அமைக்கப்பட்டு உள்வீதி மண்டபம் புதுப்பிக்கப்பட்டு , கலியாண மண்டபமும் அமைக்கப்பட்டு
பிறப்பில் நடைபெறும் தேர்த் திருவிழாவை முன்னிட்டு உதயன் பத்திரிகையில் வெளிவரும் இம் மல

சோ.வர்ணகுலசிங்கம், தலைவர், மண்கும்பான் வெள்ளைப் புற்றடி

★★★★★★★★★★★★★★★★★விளம்பர அனுசரணை

**உதயா ஜுவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை
வியாபாரம்
தொ.பே. 021 2224 434
81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

**நியூ நகுலா**
ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை
வியாபாரம்
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4101

**அருள்நிலா**
நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 710 6042

**நியூ பிரியங்கா**
நகை மாளிகை
Genuine 22 kt Jewellery
Manufacturing jewellery
2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel. 021 222 5644,
No. 69 யாழ். வீதி, (A 9). கிளிநொச்சி
(Front kachcheri)
Tel. 021 320 8611, 077 7175059

**Maithely**
Nagai Madam
மைதிலி
நகைமாடம்
தங்கநகை வியாபாரி
89 V, Kasthuriyar Road,
Jaffna. T.P. 021 222 7902

நவீன அழகிய சிங்கப்பூர்
டிசைன்களுக்கு
**சிங்கப்பூர் ஜுவலர்ஸ்**
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 4590260

**புதிய நவீனா**
நகையகம்
Navena Nakaiyakam Genuine 22 Kt Jewellery
Manufacturing jewellery
191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 7115 625

**நியூ லலிதா**
ஜுவலர்ஸ்
133, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 5670 289,
077 6562681

**நதியா நகை மாடம்**
இல.02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3479
உங்கள் ஆதரவுக்கு நன்றி!
கிளை. கௌசன் நகைமாடம்
இல. 129, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**புதிய நதியா நகை மாடம்**
உங்கள் ஓடர் நகைகளை குறித்த தவணையில் நாகரிமான டிசைன்களில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்
புதிய நதியா நகை மாடம்
103,73 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 2223261,
021 2228397

**சன்**
ரான்ஸ்போட்
சேவிஸ்
221, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

**கந்தன்**
களஞ்சியம்
270, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

**கந்தவேலன்**
ரேடர்ஸ்
110, Stanley Road,
Jaffna
T.P : 021 2222822,
Fax : 021 222 4496

**பாலவிநாயகர்**
மோட்டோர்ஸ்
NO. 8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

**ஹரன்**
ரேடர்ஸ்
134, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

**லலிதா ஜுவல்லர்**
தங்கப்பவுண் நகை
வியாபாரம்
Lalitha Jeweller
28, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பா
T.P : 021 222286

## விசேட மேளக்கச்சேரி அனுசரணையாளர் தேர்த்திருவிழா உபயகாரரும் கை.கணேசையா குடும்

### நாதஸ்வரம்

★ நாதஸ்வர கலா சாகரம் J. சிவதாஸ் (கோண்டாவில்)
★ நாதஸ்வரத் தென்றல் K. ராமதாஸ் (வட்டுக்கோட்டை)
★ நாதஸ்வரச் சுரபி N.ராஜகுமார் (மானிப்பாய்)
★ கோண்டாவில் நாதஸ்வர வித்துவான் M.N. கோபன் குழுவினர்
★ கல்வியங்காடு நாதஸ்வர வித்துவான் V.செல்வராசா குழுவினர்
★ கோண்டாவில் நாதஸ்வர வித்துவான் K.வசந்தன் குழுவினர்'
★ கோண்டாவில் நாதஸ்வர வித்துவான்
V.K.பஞ்சமூர்த்திகுமரன் குழுவினர்
★ சாவகச்சேரி பஞ்சாபிகேசன் பேரப் புதல்வர்கள்
நாதஸ்வர வித்துவான்கள் விக்னேஸ்வரன் சித்தாத்தன்,
விக்னேஸ்வரன் பிரதீத்தனன் குழுவினர்

நாது
ஆன
வித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தேர்தலுக்கு முன் சுயாதீனக் குழுக்கள் வேண்டும்

## கரு ஜெயசூரிய அரசிடம் கோரிக்கை

கொழும்பு,ஏப்.14
வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு முன்னர் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவையும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவையும் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசிடம் ஐ.தே.க.கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி கிருலப்பனையிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கரு ஜெயசூரிய இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

வடக்கில் போர் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள போதிலும் இன்னமும் அந்த மக்களுக்கு ஜனநாயகச் சூழல் மலரவில்லை.

உதயன் பத்திரிகை மீதான தொடர்ச்சியான தாக்குதல் சம்பவங்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டமொன்றில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் போன்றவை இதனைத் தெளிவுபடுத்தியுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபைத் தேர்தலையும் அதற்கு முன்னதாக மத்திய மற்றும் வடமேல் மகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

17ஆவது அரசமைப்புத் திருத்தம் இல்லாது ஒழிக்கப்பட்டு 18ஆவது அரசமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர், நாட்டில் நடைபெற்ற எந்தவொரு தேர்தலையும் நியாயமானதும் சுதந்திரமானதும் எனக்கூற இயலாது.

இந்த நிலைப்பாடுகள் பற்றி சர்வதேசத்திடமிருந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் உள்ள தேர்தல் கண்காணிப்பாளர்களும் தேர்தல் முறைகேடுகள் குறித்து கருத்து வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடத்துவதற்கு அவசியமான பின்புலத்தை உருவாக்குவது மற்றும் நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளினதும் நம்பிக்கையை வென்றெடுப்பது ஆகிய பொறுப்புக்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு உரியது.

வட பகுதியில் வாழும் மக்கள், தமது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டியது அரசின் பொறுப்பாக உள்ளது.

இதற்கெனவடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக சுயாதீனமான தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றை நிறுவுவது அவசியமானதாகும். அரசு கால அவகாசம் கோருவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

நல்லிணக்க ஆணைக்குழுவும் இவை குறித்து அரசுக்குப் பரிந்துரை வழங்கியுள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களிலும் அரச வளங்களைப் பயன்படுத்திக்கொண்டு தேர்தல் விதிமுறைகளை மீறி செயற்படுவதற்கு அரசு தயாராகவே உள்ளது. அரச அதிகாரிகள் தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்த தேர்தல்கள் ஆணையாளருக்கு கடப்பாடும், பொறுப்பும் உள்ளது. இனி வரும் காலத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடத்தி கீர்த்தியைப் பேணிக் காத்துக்கொள்ளுமாறு நாம் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரியுள்ளோம் - என்றார்.

(ஐ-22)

# செவ்வாய் - வெள்ளி வரையான மின் தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.-

16.04.2013 செவ்வாய்க்கிழமை மாலுசந்தி முதல் இரும்பு மதவடி வரையான பிரதேசம், அண்ணா சிலையடி முதல் கரணவாய் வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

17.04.2013 புதன்கிழமை சாமியன் அரசடிப் பிரதேசத்திலும்-

18.04.2013 வியாழக்கிழமை சுப்பர்மடம் பிரதேசத்திலும்-

19.04.2013 வெள்ளிக்கிழமை நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம், உடுப்பிட்டியின் ஒரு பகுதி, மயிலன்தனை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(ந)

## மரண அறிவித்தல்

### சிதம்பரபிள்ளை பாலசிங்கம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரபிள்ளை பாலசிங்கம் நேற்று (13.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிதம்பரபிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் ஏக புதல்வனும் மீனாம்பிகையின் அன்புக் கணவரும் நளாயின் (செல்லா- கனடா), வினோதினி (வினோ) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாளன், விஜிதரன் ஆகியோரின் மாமனும் தேனுஷா, கபிஷா, அபிஷா, டிலக்ஷா, அஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
0774086781, 0014162989913 (நளாயினி) (சி/8357)(16)

தகவல்:
குடும்பத்தினர்.

## 37 ஆவது அகவையின் நினைவலைகள்



மலராய்
14 * 04 * 1976

மண்ணாய்
03 * 10 * 2008

அமரர் சரவணையூர் சபாரத்தினம் சசிகுமார் B.Com
(14.04.2013)

*இளந்தென்றலாய் இதயத்தை வருடியவன்*
*களங்கமில்லா கனிவான வார்த்தை பேசியவன்*
*வளங்கள் பல சேர்த்து வாழ்வு காட்டியவன்*
*தளம் பதித்து தரணியில் வாழ்ந்தவன்*
*இன்றுனக்கு அகவை 37*
*இந் நாளில் உன்நினைவுகளோடு கலந்து வாழும்*
*உன் உயிரான உறவுகள்*

அம்மன் வீதி, கொக்குவில்
கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி பேரின்பநாயகம்



கரப்பிட்டியத்தனை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும், 131/2B, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பேரின்பநாயகம் நேற்று (13.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாபிள்ளை பேரின்பநாயகத்தின் (முன்னாள் வர்த்தகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான C.S.கனகரத்தினம் -சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான க.கு.கந்தையாபிள்ளை -சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜேஸ் வரன் (பாலகணேசன் களஞ்சியம் 225, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.), சாந்தினி (லண்டன்), காலஞ்சென்ற யோகேஸ்வரன் (கண்னன்), ஜெயந்தி, வசந்தி ஆகியோரின் அன்புத் தாயும், சந்தானலட்சுமி, தனரா சரத்திம் (லண்டன்), இலட்சுமனன் (கணபதி அரிசி ஆலை,கிளிநொச்சி), ஸ்ரீதரன் (லலிதா ரெக்ஸ்ரைல்ஸ், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும், மகிழ்ராஜன், ஜனனி, வசிகரன், பிருந்தா, தஞ்சுதா, தர்மிதா, கோவர்ணன், தமிழின்பன், கோகுலவாணி, ரிஷிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது வதிவிட முகவரியில் நாளை (15.04.2013) திங்கட்கிழமை மு.ப 9:00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலகணேசன் களஞ்சியம்,
225, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(36003)(14.9)

தகவல்:
பே. இராஜகணேசன்
(மகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி சுகுணா தங்கராஜா



புலோலி தெற்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகுணா தங்கராசா நேற்று (13.04.2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராஜரத்தினம் காலஞ்சென்ற பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கராஜாவின் பாசமிகு மனைவியும், இந்துஜா (National Water Board and Drainage Jaffna- Kilinochchi project) அஜித் (கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சித்திரதாசன், நியூட்டன் (கனடா), றேகனா, வசந்ததாசன் (கனடா), கமலதாசன் (கனடா), பாரதிதாசன் (கனடா), விமலதாசன் (கனடா), ஜெனதா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தெய்வேந்திரம், காலஞ்சென்ற அருந்தவம் மற்றும் மகேந்திரம், வைந்தவராஜா, காலஞ்சென்ற சற்குணபாலா மற்றும் செல்வராசா (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (16.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணல்தறை லேன்,

தகவல்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வவுனியா, வைரவப் புளியங்குளம்

# அருள்மிகு ஆதி விநாயகர் ஆலய இரதோற்சவம் - 14.04.2013

**ஆலய வரலாறு**

வவுனியா வைரவபுளியங்குளம் ஸ்ரீ ஆதிவிநாயகர் தேவஸ்தானம், ஆதிநாளில் வைரவபுளியங்குளம் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள குளக்கட்டில் மூன்று வைரவ சூலங்களுடன் ஒரு கல்லை வைத்து வழிபட்டு வரப்பெற்றது. பின்னர் கருங் கல்லினால் ஆன பிள்ளையார் சிலையினை வைத்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மக்களால் பணம் சேரிக்கப்பட்டு பொங்கல் வைத்து பூஜைகள், அருகேயுள்ள வைரவர் ஆலயத்தின் அர்ச்சகராண கணேசகுருக்களின் உதவியுடன் சிறப்பாக நடைபெற்று வந்தன. பின்னர் தனியான ஆலயம் அமைதல் வேண்டுமென கருதி நிர்வாகசபையொன்று ஆ.சிவஞானம் (சமாநீ) அவர்களை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு மூலஸ்தானம் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின் அலங்கார உற்சவம், கணபதி ஹோமம், பெருங்கதை, கஜமுகா சூரன்போர், சிவராத்திரி முதலிய விழாக்கள் நடைபெற்று வரலாயிற்று.1997 இல் ஆலயத்திற்கென புதிய தேர் அமைத்து வெள்ளோட்டம் நிகழ்த்தப்பட்டது. இதன்பின்1997ம் ஆண்டு கிராம சேவையாளர் முத்துராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு.தில்லைநாதனை தலைவராகக் கொண்ட புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. பின்னர் படிப்படியாக பரிவாரத் தெய்வங்கள் அமைக்கப்பட்டு கந்தசஷ்டி, கௌரி நோன்பு, மஹோற்சவம் ஆகிய பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. 2004ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்து இராஜகோபுரம், சூரியன், சந்திரன், தட்சணாமூர்த்தி, துர்க்கை, நாகதம்பிரான் ஆகிய பரிவார மூர்த்திகளை வைத்து வழிபடலாயிற்று. முக்கியமாக இவ்வாலயத்தில் சிவன், அம்பாளை பிரதிஷ்டை செய்ய விரும்பி இவருக்கு நந்தி பலிபீடம் வைத்து கிழக்குவாயிலில் அவருக்கென தனியான பாதை அமைத்து தனி சந்நிதானமாக விளங்கும்படி பிரதோச விரதம் நடைபெறுகிறது. இவ்வாலயத்தின் சிறப்பு யாதெனில் ஒவ்வொரு தமிழ் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்றும் தேர்த்திருவிழா நடைபெறுவதுடன் சைவ, தமிழ் கலை வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றி வருவதாகும். மலர் அமைப்பு : **திரு.சிவ. கஜன்**

**ஆசிச் செய்தி**



இலங்கை மணித்திருநாட்டில் சைவமும் தமிழும் ஒருங்கே தழைத்து வளரும் புண்ணிய பூமியாக விளங்கும் வவுனியாவில் சிறப்புக்கள் மிகுந்த வைரவபுளியங் குளத்தில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் ஆதிவிநாயகப் பெருமானின் கருணைத்திறம் வார்த்தைகளால் சொல்லுந்திறம் கடந்தது. மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புடன் மிளிரும் இறைவன், தன்னை நாடி வரும் அடியார்களின் வினைகளை தீர்த்தருளும் பெருமான் இங்கே சர்வ வியாபியாக விளங்குகிறார். "நாரஸ்யே சிகரே திருஷ்வா யாவத் கைலாஸ பூகலம்" என்று சுப்பிரபேத ஆகமம் மொழிவது போன்று அழகுற அமைந்த கோபுரம், வடிவாம்பிகை சமேத வைத்தீஸ்வரப்பெருமானுக்கென தனியான நந்தி பலிபீடத்துடன் கூடிய திருச்சன்னிதானம் இவ்வாலயத்திற்கு தனித்துவமான அருட்சிறப்பினையும், சோபையையும் அளித்துக் கொண்டிருக்கின்றன. பிறக்கும் விஜய வருடம் அனைவருக்கும் நற்சிறப்புக்கள் பலவற்றை அளிக்கவும் இறையருள்வேண்டி ஆசிகூறுகிறேன்.

மஹோற்சவகுரு, சிவாகம சக்கரவர்த்தி கலாநிதி சிவஸ்ரீ ராம் கெங்காதரக்குருக்கள்
(மயிலையா) சாரதாபீடம், லண்டன்

**வாழ்த்துச்செய்தி**



எம் மரபு வழி விளையாட்டுக்களின் போது குடும்ப அங்கத்தினர். சமூக அங்கத்தினர் ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவதன் ஊடாக புரிந்துணர்வு, ஒற்றுமை, மன மகிழ்ச்சி, மன அமைதி, ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் ஏற்பட்டன. அது குடும்பத்திலும், சமூகத்திலும் ஒரு சக்தியையும், தன்னம்பிக்கையையும் வளர்த்தன. பாராட்டுவதும். அப்பாராட்டினைத் தலைசாய்த்து ஏற்றுக் கொள்கின்ற பண்பும், ஒரு சேர ஒவ்வொருவரிடமும் வளர்த்தெடுக்கப்பட்டன. எம் மரபு வழி விளையாட்டுக்களும் அத்தகைய ஓர் அபூர்வ சக்தியுள்ளது. அதனை நாம் உணரத் தவறியுள்ளோம். அல்லது உணரமறந்து விட்டோம்.

பிள்ளைகளுடன் சேர்ந்து பெரியவர்கள் இத்தகைய விளையாட்டுக்களில் ஈடுபடும் போதும், அங்கிருந்து ரசித்து குதூகலம் கொள்ளும்போது பெரியவர்கள் தம்மை நேசிக்கின்றனர் தம் மீது அன்பாகவும் கரிசனையாகவும் இருக்கின்றனர் என்கிற செய்தி பிள்ளைகளுள் இயல்பாகவே பரவுகின்றது. இந்தப் பரவுகை அவர்களை - பிள்ளைகளை பிழையான பாதையில் செல்ல விடாது தடுக்கும் ஒரு கேடயமாக பாதுகாக்கின்றது.

பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் நெருக்கத்தை இத்தகைய கொண்டாட்டங்களும் அதனோடிணைந்த சடங்குகளும், சம்பிரதாயங்களும் ஏற்படுத்தி வைக்கின்றன.

அந்த வகையில் இத்தகைய புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

'பிரப' வருடம் தொடங்கி 'அக்ஷய' வருடம் ஈறாக வரும் அறுபது வருட சுற்று வட்டத்தில் 27 ஆவது வருடமான 'விஜய' வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம்.

பன்னிரு ராசியில் முதலாவதான மேட இராசியில் சூரியன் பிரவேசிக்கும் நாளே இப்புது வருடப்பிறப்பு. இளவேனிற் காலமான இவ் வசந்தகாலத்தில், மரங்களிலிருந்து உதிர்ந்த இலைகள் துளிர்க்கத் தொடங்கும் காலமாக இதனை நாம் காணலாம். நம் உள்ளங்களிலும் பழைய மரபுகளிலுள்ள சிறப்புகளை நயந்து, அதன் பயனறிந்து, புதிய சிந்தனைகளைத் துளிர்க்க விட வேண்டும். அப் புதிய சிந்தனைகள் நமது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் ஓர் ஒளியைக் காட்டக் கூடியதாக உறுதியானதாக அமைய வேண்டும். இப் பிணைப்புக்களே எம்மை ஓர் ஆற்றலுள்ள இனமாகக் கட்டியெழுப்பும்.

மேலும், வளர்ச்சியடைந்த பல கீழைத் தேய நாடுகள் இன்னமும் தமது பாரம்பரிய நடைமுறைகளைப் பேணிப் பாதுகாக்கின்றன.

இது போன்ற கொண்டாட்ட நாள்களில் தமது மரபு வழி சார்ந்த பழக்க வழக்கங்களையும், பண்பாட்டுக் கோலங்களையும் நடைமுறைப்படுத்துகின்றனர்.

தமது வளர்ச்சியின் மூல வேர்களாக அவற்றை கடைப்பிடிக்கின்றனர் உடுக்கும் உடையிலும் உண்ணும் உணவிலும் இப் பாரம்பரியங்களை இன்னும் பேணுகின்றனர். அவற்றை மேம்படுத்தப் புதிய உத்திகளைக் கையாளுகின்றனர். நவீன தொழில் நுட்பங்களைக் கூட அவற்றை மேம்படுத்தப் பயன்படுத்துகின்றனர். அண்மையில் தாய்லாந்தில் 30,000 பேர் பங்கு கொள்ளும் ஒரு தலையணைச் சண்டை நிகழ்ச்சியை நடத்தி உலக சாதனை, படைக்க முற்பட்டமையும் இதன் பாற்பட்டதே இந்த புத்தாண்டின் போது நம் பாரம்பரியங்களைப் பேணத் திட சங்கற்பம் பூணுவோம். ★

## மனங்களை மாற்றிடுவோம்

புதிய ஆண்டு பிறக்கிறது புத்துணர்வாக இருக்கிறது
புலம்பல் விட்டுப் புரியிலே புதிதாய் கொஞ்சம் மலர்ந்திடுவோம்
பதிந்து உள்ள பழமைகளை மீட்டு நன்றாய் பார்த்திடுவோம்
பழுது நீக்கி புதுமைகளால் புதிய உலகம் படைத்திடுவோம்
முதிர்ந்த அறிவில் பிறக்கின்ற விஜய வருடம் வாழட்டும்
முழுமை வாழ்வை பெற்றுவிட அனைவருமே சேரட்டும்

பழமை பேசித் திரிகின்ற மனித மனங்கள் மாறட்டும்
பழம் புனித கலை பண்பாட்டை இளையவர்கள் பேணட்டும்
வழமை போல வருஷ நாளில் உண்டு உடுத்து என்ன பயன்?
வந்து போகும் வாழ்க்கையிடை அன்பு செய்தால் உண்டு பலன்
உழவு செய்து மண்ணில் நல்ல விளைவு காணும் செயலைப் போல்
உள்ளத்தில் நல்லவற்றை விதைத்துப் பேணி வளர்த்திடுவோம்

இன்மொழிகள் பேசுவதும் இயன்ற அறம் செய்வதும் நன்மையதாம்
இன்று மட்டுமல்ல இவை பல பிறப்பும் கூட வரும்
பொன்மொழிகள் பேசுவதும் பொது மேடைப் பேச்சுகளும் போதிடுமா?
பொல்லாத மனங்களிலே என்னென்ன விதைத்துவிட்டோம் மாறிடுமா?
தன்னாலே மாற்றம் வர தருமரல்ல நாங்கள் வெறும் மனிதர்கள் தான்
தவழும் போது இருந்த மனம் தவறிப்போச்சு கண்டெடுப்போம்

மனதிலே அழுக்கு வைத்து மருத்து நீர்தலையில் வைத்தால் பய[illegible]
மறுபடியும் அழுக்காக்க புதிய உடை வாங்குவதில் அர்த்த[illegible]

உனது எனது என்று நாங்கள் உறவு
களுள் வேலி போட்டு நாட்களாச்சு
உண்மை அன்பை கண்டு மகிழும்
காலங்கள் தொலைந்து போச்சு
புனை கதைகள் போல பல புதிர்கள்
எல்லாம் குடும்பங்களில் பரவியுண்டு
புரிய முடியாமல் மனங்கள் பல
விரிசல்களால் சிதறியுண்டு

ஆண்டுகள் மாறி ஆண்டுகள் வந்தாலும்
மனங்களில் மாற்றமில்லை
ஆண்டவன் கூட புரியவிட்டு
போனாரோ தெரியவில்லை
தூண்டிய அன்பில் இல்லங்கள் துலங்க
இவ்வருடம் வழி தரட்டும்
தூண்களாய் இருந்து பெண்கள் உறவில்
அன்பினை வளர்த்திடட்டும்
மீண்டும் முருங்கை மரங்களில் ஏற
வேதாளங்கள் இல்லை நாம்
மிக நல்ல வருடம் இதுவென எண்ணி
மனங்களை மாற்றிடுவோம்.

[illegible]
[illegible] துரை ஐங்கரன்

## சித்திரையாளே வருக!

சித்திரையாளே வருக! சீரும் சிறப்பும் தருக
வேண்டும் வேண்டும் சிறப்போடு
வரவேண்டும்
குடிமக்கள் இன்பமாக வாழவேண்டும்
புதுவருடத்தில் புதுமைகள் தரவேண்டும்
பாரில் பகையெல்லாம் தீர வேண்டும்
பொழுதெல்லாம் அன்புநெறி போற்ற
வேண்டும்
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டும்
இறை பக்தி இளைஞரிடம் வளரவேண்டும்
கல்வியே கண்ணாகக் கற்க வேண்டும்
வையகத்தில் இன்னல்கள் அகலவேண்டும்.

இ.ஹேமலதா
நீர்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாக் கரங்களிலும் கறைகள்



> ‘‘நாம் நினைப்பது போல் புலிகள் ஒன்றும் கிள்ளுக் கீரைகள் அல்ல. இப்படியே அவர்களை வளர விட்டால் ஒரு காலத்தில் அமெரிக்காவுக்கு எதிராக எழக் கூடிய கலகக்காரர்களுக்கு இவர் கள் முன் மாதிரியாக வந்துவிடு வார்கள்’’

ஔண்யன்

தன் உடல் முழுதும் உள்ள கரியை மறைப்பதற்காக சட்டியைப் பார்த்து ‘‘நீ சரியான கறுப்பு’’ என்று நக்கல் அடிக்குமாம் பானை. கிட்டத்தட்ட அமெரிக்காவின் கதையும் இது தான். உலகில் எங்கெல்லாம் அதிகாரத்துக்கு எதிரான குரல்கள் எழுந்தாலும் அமெரிக்க கழுகின் மூக்கில் வியர்த்து விடும். அடுத்த நொடியே தன் இறக்கைகளை விரித்துக் கொண்டு அந்தக் குரல்களை கொத்திக் குதற விரைந்து விடும். சில சந்தர்ப்பங்களில் தனக்கு இசைவான சூழலை உருவாக்குவதற்காக அமெரிக்காவே வேண்டுமென்று கலகக் குரல்களை இரவல் தொண்டைகளுக்கூடாக எழுப்புவதுண்டு.

இலங்கையில் அரசுக்கு நிகரான படைபலத்தை புலிகள் ஒரு போதும் கட்டி எழுப்ப முடியாது என்றே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகில் புறந்தின்று கொட்டைபோட்ட நாடுகள் பலவும் எண்ணியிருந்தன. எனவே தமிழர்களின் உரிமைக் குரலை இலங்கை தனி ஒரு நாடாகவே நசுக்கி விடும் என்ற நினைப்பில் புலிகளை வேட்டையாடுதல் பற்றி அமெரிக்கக் கழுகு மறந்திருந்தது. ஆனாலும் அமெரிக்கக் கணிப்புகள் தவறத் தொடங்கின.

இலங்கை அரசின் அழைப்பின் பேரில் வந்திருந்த அமெரிக்கச் சிறப்புப் படையணி ஒன்று ஆனையிறவுத் தளத்தை நவீன இராணுவ உத்திகளுக்கேற்பக் கட்டமைத்துக் கொடுத்தது. அந்தப் பணிகள் பூர்த்தியானதும் குறித்த படையணியின் பொறுப்பதிகாரி, ‘‘இனிமேல் அமெரிக்காவே வந்தால் கூட ஆனையிறவைப் பிடிக்க முடியாது’’ என்று பெருமிதத்தோடு முழங்கிவிட்டுப் போனார்.

அவரின் பெருமிதக் கனவுக்கு ஆயுள் அற்பம் தான். சரியாக ஒரு மாதத்தின் பின்னர் ஆனையிறவில் புலிக் கொடி பறந்து கொண்டிருந்தது. அமெரிக்கா புலிகளின் போர் உத்திகள் பற்றிய தனது நிலைப்பாட்டை அவசர அவசரமாக மறு பரிசீலனை செய்ய வேண்டியிருந்தது.

‘‘நாம் நினைப்பது போல் புலிகள் ஒன்றும் கிள்ளுக் கீரைகள் அல்ல. இப்படியே அவர்களை வளர விட்டால் ஒரு காலத்தில் அமெரிக்காவுக்கு எதிராக எழக் கூடிய கலகக்காரர்களுக்கு இவர்கள் முன்மாதிரியாக வந்துவிடுவார்கள்’’ என்ற நினைப்பு அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் இடத்தே பேதமின்றி எழுந்தது. புலிகளை நேரடியாக வேட்டையாடாமல் தன்னுடைய பழமையான பாணியில் இலங்கைக்கு ஆயுதங்களையும், தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவதன் மூலமும் சாதித்து விடலாம் என்று அது நம்பியது. அப்படியும் புலிகளை ஒடுக்க முடியவில்லை. இலங்கையை நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்ட அமெரிக்கா நேரடியாகக் களத்தில் குதித்துவிட்டது. புலிகள் பற்றிய தகவல்களை அக்குவேறு ஆணி வேறாக அலசியது அதன் அடிப்படையில் விடுதலைப் புலிகளின் கடல்மார்க்க விநியோகங்களைத் தகர்க்க முடிவு செய்யப்பட்டது. அதிநவீன கண்காணிப்புக் கருவிகள் மூலம் புலிகளின் கப்பல்களை மோப்பம் பிடித்துக் கொண்ட அமெரிக்கா சர்வதேச கடற்பரப்பை அந்தக் கப்பல்கள் தாண்டும்வரை காத்திருந்துவிட்டு அவற்றின் நகர்வுகள் பற்றி இந்தியாவுக்கும், இலங்கைக்கும் ‘போட்டுக் கொடுத்து விடும்’. பிறகென்ன? கடலில் புலிகளின் கப்பல்களை இந்தியக் கப்பல்கள் வழிமறிக்கும் அல்லது துரத்தும். பாகிஸ்தான் விமானிகளின் துணையோடு கிபிர் விமானங்கள் கட்டுநாயக்காவில் இருந்து சீறிக் கொண்டு கிளம்பும். கடலில் கப்பல் தீப்பந்தமாக மாறும். மறுநாள் வீரச்சாவு அறிவித்தல்கள் தோல்வியின் செய்தியாக தமிழர் பகுதி ஊடகங்களை நிரப்பும். இப்படியே புலிகளுக்கான ஆயுதங்களையும், மருந்துகளையும், உணவுப் பொருள்களையும் ஏற்றி வந்த கப்பல்கள் ஒன்றுவிடத் தப்பாமல் அமெரிக்காவின் நேரடி நெறிப்படுத்தலில் தகர்த்து எறியப்பட்டன. போரின் இறுதி நாள்களில் விடுதலைப் புலிகளிடம் போதிய ஆயுதங்கள் இல்லாமல் அவர்கள் தோற்றுப் போவதற்கு அமெரிக்காவின் இந்தக் ‘கண்ணுக்குத் தெரியாத [illegible] [illegible] கூட்டணியில் அமெரிக்காவோடு தோள் சேர்ந்து கொண்டது இந்தியா.

ஒருவழியாக புலிகளின் கடல் மார்க்கத்தை அடைத்து விட்ட திருப்தியில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் நிமிர்ந்த போது, நெற்றிப் பொட்டில் வந்து அறைந்தது வான் புலிகள் பற்றிய செய்தி. உலகிலேயே போராளிக் குழு ஒன்று வான்படையை வைத்திருப்பது அது தான் முதல் முறை. அதுவும் இலங்கையின் தலைநகருக்குள் கட்டுநாயக்க வான் பரப்பில் புகுந்து திட்டமிட்டபடி தாக்குதலை நடத்தி விட்டு தமது தளத்திற்குப் பத்திரமாகத் திரும்பிச் செல்லும் அளவிற்கு வான்புலிகளின் திறன் இருந்ததைக் கண்டு அமெரிக்காவாலேயே ஆச்சரியத்தை அடக்க முடியவில்லை.

என்ன செய்யலாம்? என்று நம்பியார் ஸ்ரைலில் அமெரிக்கா கைகளைப் பிசைந்துகொண்டிருந்த போதுதான், அதன் கொல்லைப் பக்கக் கதவை இலங்கை தட்டியது.

‘‘இந்தியாவிடம் இருந்து கிடைத்த ரேடர்கள் இரு பரிமாணம் கொண்டவை எனவே அவற்றை உச்சி விட்டு புலிகளின் விமானங்கள் எங்கள் தலைமாட்டுக்கே வந்து விடுகின்றன. கருணைப் பிரபுவே! நீங்கள் தான் தயவுபண்ணி புதிய தொழில்நுட்ப வசதியைத் தந்து வான்புலிகளின் வாலை அறுக்க வேண்டும்’’ என்று கைகட்டி வாய்பொத்தி பவ்வியத்தோடு கெஞ்சியது இலங்கை. அமெரிக்கா கூட்டிக் கழித்து கணக்குப் போடத் தொடங்கியது. வான்புலிகளின் வளர்ச்சி அமெரிக்காவை விடவும் இந்தியாவுக்கே அதிக அச்சுறுத்தலைத் தரக்கூடியது. அத்துடன் இந்திய ரேடர்களால் புலிகளின் விமானங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே இலங்கைக்கு உதவும் சாட்டில் இந்தியாவுக்கு உள்ள அச்சுறுத்தலையும் போக்க முடியும். தனக்கான அச்சுறுத்தலைக் களைய அமெரிக்காவோடு இணைந்து செயற்பட இந்தியா ஆட்சேபனை தெரிவிக்கப் போவதில்லை. எனவே இந்தியாவோடு இன்னமும் நெருங்க முடியும். இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் இந்தச் சாக்கோடு தனது காலை ஆழ ஊன்றவும் ஏதுவாகும். தன் பரம வைரியான சீனாவுக்கும் ஒரு ஆட்டம் காட்ட முடியும். ஆக மொத்தத்தில் ஒரே கல்லில் ஏழெட்டு மாங்காய்களை வீழ்த்த முடியும் என்பதால் இலங்கையின் கோரிக்கைக்கு செவி சாய்த்தது அமெரிக்கா.

அப்படி இருந்தும் கூட புலிகளின் விமானப் பறப்புக்களை அமெரிக்க-இந்திய-இலங்கை முக்கூட்டு அணியால் தடுக்கவே முடியவில்லை. கடைசியில் தங்கள் விமானங்களை புலிகள் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடுத்தி அவற்றின் இறக்கைகளை ஒடிக்கும் வரை வான்புலிக் கலங்கள் பறந்து கொண்டுதான் இருந்தன.

இப்படி எல்லாம் போரின் கடைசிக் கணம் வரை இலங்கையோடு தோள் மேல் கைபோட்டு [illegible]யும் மக்களையும் அழித்த கூட்டணியில் இருந்த இதே அமெரிக்கா தான் இப்போது ‘‘நீ ஒரு போர்க் குற்றவாளி’’ என்று இலங்கையை நோக்கிச் சுட்டு விரலை நீட்டத் தொடங்கியிருக்கிறது. தனது சுட்டு விரலில் உள்ள குருதிக் கறைகள் எவருக்கும் தெரியாது என்ற நம்பிக்கை அதற்கு.


புலிகளை அழிக்கும் வரை இருந்த இலங்கையுடனான நட்பு, பின்னர் அமெரிக்காவுக்கு கசக்கத் தொடங்கியது. சீனா, ஈரான் போன்ற அமெரிக்காவுக்குப் பிடிக்காத நாடுகளுடன் இலங்கை கொண்டிருந்த உறவு அதற்குப் பிடிக்கவில்லை. அமெரிக்காவை விடவும் இலங்கைக்கு சீனா, ஈரான் மீது காதல் அதிகமாக இருந்தது. எனவே மீண்டும் தன் வழிக்கு இலங்கையைக் கொண்டுவர அது போர்க் குற்றம் என்ற ஆயுதத்தை கையில் எடுத்துள்ளது.

எனினும், இதில் ஒரு சிக்கல் இருக்கவே செய்தது. போர் நடைபெற்ற போது அமெரிக்காவும் புலிகளுக்கெதிரான கூட்டணியில் நேரடியாக இறங்கியிருந்தது என்ற விடயம் வெளிவந்தால், இலங்கையோடு சேர்ந்து அமெரிக்காவும், இந்தியாவும் குற்றவாளிக் கூண்டில் ஏற வேண்டி இருக்கும். காதும் காதும் வைத்தாற் போன்று நடந்தேறிய காரியங்களை எவராலும் வெளிப்படுத்த முடியாது என்ற நம்பிக்கையில் அமெரிக்கா இருந்தது. ஆனாலும் அமெரிக்காவின் சமீபகால வில்லனான விக்கிலீக்ஸ் இந்த விடயத்தையும் விட்டு வைக்கவில்லை. விக்கிலீக்ஸ் இணையம் அண்மையில் வெளியிட்ட அமெரிக்கத் தூதரக கேபிள் தகவல்களில் புலிகளின் வான்படையை அழிக்க இலங்கை, அமெரிக்கா கெஞ்சியதும், பின்னர் இலங்கை-அமெரிக்க-இந்திய முக்கூட்டு பற்றி சிலாகிக்கப்பட்டதும் அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது. வெள்ளை வர்ணத்தால் தன் கறைகளை பூசி மெழுகி இருந்த அமெரிக்கா மீது மழையாய் பொழிந்து, பூச்சை அழித்து அதன் சுயரூபத்தின் ஒரு பகுதியை வெட்ட வெளிச்சமாக்கி இருக்கிறது. இன்னும் நிறையக் கறைகள் வெளிப் பூச்சுக்குள் பதுங்கியே இருக்கின்றன. அவையும் என்றோ ஒரு நாள் வெளிப்படவே செய்யும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு வழிப்பாதையில் இலங்கை-இந்திய உறவு

சந்திரசேகர ஆசாத்




இன்று இலங்கையின் ஆட்சியாளர்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் இன மத தனித்துவங்களை அழித்து இலங்கை வாழ் சகல மக்களையும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதையே இலக்காகக் கொண்டு காணப்படுகின்றனர் என்பதை அனைவருமே புரிந்து கொண்டுள்ளனர். இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் கூட இதைப் புரிந்து கொண்டிருந்தாலும் சில ராஜதந்திரக் காரணங்களால் அதை வெளிப்படையாகக் கண்டிக்கத் தவறுகின்றன. இன்றைய உலகமயமாக்கல் என்ற பெரும் நீரோட்டத்தில் இன,மத, கலாசார தனித்துவங்களின் முக்கியத்துவம் தேவையற்றவையாகக் கருதப்படுவதால் அவற்றுக்கு முதன்மையளிப்பதில் சர்வதேச சமூகம் போதிய அக்கறை காட்டவில்லை.

இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்தி இன்றைய ஆட்சியாளர்கள் இன அழிப்பை பிரதான கொள்கையாக வகுத்துள்ளனர். ஆனால் அதை முழுப்படியாகச் செய்யாமல் பல்வேறு நபர்கள் மூலம் பல்வேறு வடிவங்களில் மேற்கொள்கின்றனர். ஆனால் இந்த அத்தனை நபர்களுமே ஒரே மையத்திலிருந்து ஆட்டுவிக்கப்படுகின்றனர் என்பதுதான் அடிப்படை உண்மையாகும்.

இந்த நோக்கத்துக்காக இந்தியாவைப் பல்வேறு வழிமுறைகள் மூலம் பயன்படுத்தும் நாடகம் அரங்கேற்றப்படுகிறது. அண்மையில் ஜனாதிபதியின் உடன்பிறந்த சகோதரரும், நாட்டின் உச்ச அதிகாரம் படைத்தவர்களில் ஒருவராகவும் கருதப்படும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினைக்கும், முப்பது வருடப் போருக்கும் இந்தியாவே காரணம் என்று தெரிவித்திருந்தார். அதே வேளையில் இந்தியாதான் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப்போரை நடத்தியது எனக் கூறியிருந்ததையும் இன்னொரு சந்தர்ப்பத்தில் இந்தியாவின் போரையே நாங்கள் நடத்தியதாகக் கூறியதையும் நாம் மறந்துவிட முடியாது.

இன்னொரு புறம் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ ஒரு முறை இந்தியா தமது சகோதரன் எனவும் சீனா நமது நண்பன் எனவும் கூறியிருந்தார். அதன் அர்த்தம் சீனாவுடன் நட்புறவைப் பேணி வந்தாலும் இந்தியாவின் உறவே நமக்கு முதன்மையானது என்பதாகும்.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் தேசத்தின் பாதுகாப்பு அமைச்சர். அந்த பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வமான செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. அதாவது ஒரே அமைச்சிலிருந்து இரு வேறு விதமான குரல்களில் ஒன்று இந்தியாவுடன் நெருக்கமான உறவைப் பேணுவது போன்ற -குரல். மற்றையது இந்தியாவை எதிரியாகக் காண்பிக்கும் குரல்.

அப்படியானால் இந்தியா தொடர்பாக இலங்கையின் நிலைப்பாடு என்ன? இந்தியா இலங்கையின் நண்பனா, எதிரியா ? இதில் எது உண்மை முகம்? எது பொய் முகம்? இந்தியா இலங்கையுடன் நல்லுறவைப் பேணுவதற்காக நிறையவே விலை கொடுத்துள்ளது. இலங்கையைப் பல நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றியுள்ளது. குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானங்களை இரு முறை வலுவிழக்கச் செய்துள்ளது. அதன் பலன் இந்திய மத்திய அரசிலிருந்து தி.மு.க. வெளியேறும் நிலையும் ஏற்பட்டுள்ளது. மேலும் இந்திய மீனவர்கள் முதல் இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் அட்டூழியங்கள் தொடர்பாகவும் ஒரு மென்போக்கையே பின்பற்றி வருகிறது. இவ்வாறே வாக்குறுதிகளை வழங்கிய போதும் அவற்றை நிறைவேற்றும்படி இந்தியா அழுத்தம் கொடுப்பதில்லை.

இப்படி இந்திய விட்டுக் கொடுப்புக்கு முதல் விட்டுக் கொடுப்பாக மேற்கொண்டு வந்த போதிலும் இந்தியாவை இலங்கையின் எதிரியாகவே இலங்கையின் அதிகார பீடத்தினர் நோக்கி வருகின்றனர்.

அண்மையில் இலங்கை இந்தியக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அப்படியான நிலையில் இராமநாதபுரம், நாகப்பட்டினம் மீனவர்கள் அவர்களை விடுவிக்கும் படி பல வாரங்களாகத் தொடர் போராட்டங்களை நடத்திய போதும் இந்திய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையுமே எடுக்கவில்லை. மாறாக இலங்கைக் கடற்பரப்பில் அதிகாரி ஒருவர் இனி கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார். அப்படியான ஒரு நிலையிலும் கூட இந்தியா மௌனம் காத்து வருகிறது. இப்போ எல்லாவற்றிலும் மேலாக இலங்கை இனப் பிரச்சினைக்கும் முப்பதாண்டு போருக்கும் இந்தியாவே காரணம் என கோத்தபாய குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் சிங்களப் பேரினவாதிகளால் இலங்கை நாட்டின் மீது பல்வேறு ஒடுக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இலங்கை வாழ் மலையக மக்களின் குடியுரிமை 1950 இல் பறிக்கப்பட்டது. இலங்கையில் திட்டமிட்ட குடியேற்றங்கள் தமிழ்ப் பிரதேசங்கள் மீது மேற்கொள்ளப்பட்டன. 1956 தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தான போது அதற்கெதிராக ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் கண்டியாத்திரை நடத்தப்பட்டது. பிக்குகளின் சத்தியாக்கிரகம் காரணமாக பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதுடன் 1958 இல் பெரும் தமிழின ஒழிப்புக் கலவரம் நடத்தப்பட்டு ஏராளம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 1960 சத்தியாக்கிரகம் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பலர் சிறை செல்லப்பட்டனர். 1977 இல் ஜே.ஆர் ஜெயவர்தனவால் போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் எனப் பிரகடனம் செய்யப்பட்டு மீண்டும் ஓர் இன ஒழிப்புக் கலவரம் நடத்தப்பட்டு தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் நியாயமான போராட்டங்கள் வன்முறைகளால் நசுக்கப்பட்ட போது தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். 1983 இல் திருநெல்வேலியில் 13 படையினர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டதை அடுத்து இலங்கை முழுவதும் பெரும் இன அழிப்பு நடவடிக்கை கட்டவீழ்த்து விடப்பட்டு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். சிறைச்சாலையில் கூட தமிழ் இளைஞர்கள் அநாகரிகமாகக் கொல்லப்பட்டனர்.

ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் உயிர்ப் பாதுகாப்புக் கருதி இந்தியாவுக்கு போய் சேர்ந்தனர்.

அதுகாலவரை தமிழர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்பட்ட போதிலும் தமிழர்கள் மீது பெரும் இன அழிப்பு அரச அனுசரணையுடன் இடம்பெற்ற போதும் இந்தியா அதைப் பொருட்படுத்தவில்லை.

இந்தியாவுக்கு ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட போர் உ[illegible] தமிழகம் [illegible] இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியா கவனம் செலுத்த தொடங்கியது. இதில் முந்திய விஷயம் என்னவெனில் 1983 க்கு முன்னர் அதாவது 1971 இலிருந்தே ஆயுதப் போராட்டம் ஆரம்பித்துவிட்டது. இந்தியாவின் எந்தவித உதவியும் இல்லாமலேயே இராணுவத்தினர் மீதும் பொலிஸார் மீதும் காட்டிக் கொடுப்போர் மீதும் தாக்குதல்கள் ஆரம்பித்துவிட்டன. அடிப்படையில் 1956 முதல் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்குமுறையும் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இன அழிப்பும் சாத்வீகப் போராட்டங்கள் மீது நடத்தப்பட்ட ஆயுத அடக்குமுறையுமே இனப்பிரச்சினைக்கு அடிப்படையாக அமைந்தன. இதன் வளர்ச்சியே ஆயுதப் போராட்டமாக உருப்பெற்றது.

1983 இன் பின்பு பணமும் ஆயுதமும் பயிற்சியும் வழங்கப்பட்ட சில போராட்டக் குழுக்கள் காலப்போக்கில் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகவே செயற்பட்டன. ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகள் நேரடியாகவே அரசுடன் இணைந்துவிட்டன. இப்படியான நிலையில் இலங்கை இனப்பிரச்சினைக்கும் 30 ஆண்டுகால போருக்கும் இந்தியா எப்படிக் காரணமாக இருக்க முடியும். இன்றும் அன்றும் இந்தியா தனது பிராந்திய மேலாதிக்க நலன்களுக்கு அமைய இலங்கையைக் கையாளும் முகமாக எப்போதும் இலங்கை அரசின் பக்கமே செயற்பட்டு வந்துள்ளது.

ஆனால் இலங்கையோ ஒருமுறை அணைப்பது போலவும் இன்னொரு முறை எதிர்ப்பது போலவும் காட்டி இந்தியாவை ஒரு மிரட்டல் மனநிலையில் வைத்துக்கொண்டு பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை தமிழ் மக்கள் மீதும் முஸ்லிம் மக்கள் மீதும் நிலைநிறுத்தத் துடிக்கின்றது. ஆனால் இந்தியாவில் தமிழ் மக்களுக்காக எழுந்த அலை இந்திய அரசை சில தீர்க்கமான முடிவுகளை எடுக்க விடுமோ என்ற அச்சத்தை இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

எனவே பாதுகாப்புச் செயலர் தனது இராணுவப் பாணியில் மிரட்டல்களைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கியுள்ளார். இலங்கை எப்போதுமே இலங்கை இந்திய உறவை ஒரு வழிப்பாதை உறவாகவே பார்க்கிறது. அதாவது, இந்தியா இலங்கையின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு நிபந்தனையற்ற விதத்தில் ஒத்துழைக்க வேண்டுமானால் இலங்கை, இந்தியாவின் ஆலோசனைகளைக் கேட்பதுமில்லை; கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதுமில்லை.

இதுவே இதுவரை நடைமுறையாக இருந்து வந்துள்ளது. ஆனால் தமிழக நிலைமைகளும் சர்வதேச நிலைமைகளும் தொடர்ந்து இவற்றை அனுமதிக்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலக்குறி இலக்கியம்: வாசிப்பின் மோட்சம்



■ ந.மயூரரூபன்

'குடாநாட்டு நாளிதழ் ஒன்றின் வாரப்பதிப்பில் ந.மயூரரூபன் என்பவர் எழுதிய கட்டுரையில் வாசகப் பிரதி எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டுமென எதிர்பார்க்கக்கூடாது. அப்படிச்சொன்னால் அந்தப்பிரதி காலாவதி ஆகிவிடும் என்கிறார். அதன்படி இலக்கியத்தில் மறைபொருள் இருக்கவேண்டுமெனக் கொண்டால் அந்த இலக்கியம் காலக்கண்ணாடியாக அமையாது. 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், பாடியவன் பாட்டைக் கெடுத்தான்' என்று நம்மோர் சும்மாவா சொல்லிப்போனார்கள்.

இலக்கியம் என்னும் தோற்றத்துடன் உலக்கியங் களும் சேர்ந்து படைக்கப்படுவதை காணமுடிகிறது. இலக்கியத்தின் பெறுமானம் என்ன? அதன் சமூகப் பணி எத்தகையது?

அதேவேளை சமகால கட்டத்தில் சில நவீன இலக்கிய வாதிகளின் உரைநடையைப் புரிந்துகொள்ள வும், விளக்கவுரை தேவைப்பட்டால் அந்த இலக்கியம் எந்த நூற்றாண்டில் பிறந்ததென்பதைக் கண்டறிதல் எங்ஙனம்? அவ்விதம் எழுதப்படுபவை நூற்றாண்டு காலங்கள் வாழப்போவதில்லை என்பதை நவீன இலக்கியக்காரர்கள் தெரிந்துகொண்டே எழுதுகிறார் களா?''

இந்தப்பதிவு 24.03.2013 உதயனில் நான் எழுதிய கட்டுரைக்கானதாக அமைந்துள்ளது. குடாநாட்டு நாளிதழ் ஒன்றில் எழுதப்பட்டது. இந்தப்பதிவு தொடர்பாக எவரும் பெரிதாக அக்கறை கொள்வதில்லை யென்றாலும் விடயங்களைப் பகிர்வது அவசிய மாகப்பட்டது.

எமது வாசிப்பின் கனம், புரிதலின் தன்மை, கருத்தியலின் தெளிவு என்பவற்றிலுள்ள பலவீனத்தை மேற்குறித்தபதிவு உணர்த்து கிறது. அந்தப்பதிவுக்கான பதில் எனது குறித்த கட்டுரையிலேயே இருக்கிறது. எனினும் இங்கு படைப்பினை வாசக நிலையில் புரிந்து கொள்வதி லுள்ள மனத்தடையை விளங்கிக் கொள்வதற்கான அடிப்படையாக இந்தக்கட்டுரை அமைகிறது.

இலக்கியப் படைப்புகள் பல வடிவங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் எமக்குப் பழகிய வடிவம்தான் புரிகிறது என்ற பிரமையை நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். ஒரு காலகட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து தொடர்ந்து எம்முன் வருகிறபோது அது பழகிய, நெருக்கமான, தோழமை யான, உறவாடக்கூடிய எழுத்தாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. ஆனால் புதிய வடிவங்கள், பழகிய கருத் துகள் மீதான எதிர் விமர்சனங்கள், மாற்றுச் சிந்தனைக் கான களங்கள் உருவாகும்போது அதை விளங்கிக் கொள்வதற்கு முன்பதாகவே ஒரு மனத்தடை உருவாகி விடுகிறது. அது அந்த எழுத்துக்கள் மீதான காழ்ப்புணர்ச்சியையும் உருவாக்கி விடுகிறது. இது ஒரு படைப்பை , எழுத்தை வாசிப்பதற்கு கடின மானதாக உருவாக்கி விடுகிறது.

உண்மையில் விளங்காத படைப்புகள் என்று ஏதாவது இருக்கின்றனவா? அப்படியிருக்குமானால் அது எமது வாசிப்பிலுள்ள பிரச்சினை. இன்னொரு விதத்தில் எல்லோருக்கும் விளங்கக்கூடிய வகை யில் எழுதுகின்ற எழுத்தாளர்களின் எழுத்துகள் உண்மையில் அனைத்து வாசகர்களுக்கும் விளங் கும் வகையில் அமைந்திருக்குமா? இங்கும் விளங்காதவர்கள் இருப்பார்கள்.

இதனை பிரேம்-ரமேஷ் இன் வார்த்தைகளில் கூறுவதென்றால் 'புரியாமை என்பது பொதுப் பிரச்சினை இல்லை தனிப்பிரச்சினை'

பொதுவாக எமது பிரக்ஞையை தொந்தரவு செய்யாத, புலன்களின் சமநிலையைக் குழப்பாத எழுத்துக்களை ஏற்றுக்கொள்வதும், அவ்வாறான எழுத்துகளின் தேவையை உறுதி செய்வதுமே எமது இலக்கியப் பயிற்சியாக அமைந்துள்ளது. 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், பாடியவன் பாட்டைக் கெடுத்தான்' எனும் வகை மாதிரியில மைந்த, பாரம்பரிய வாசிப்பு முதுசங்களின் சுமை யைச் சுமந்து அதன் பிரமிப்பிலேயே மூழ்கி மோட்சமடைந்துள்ளவர்கள் நம்மில் பலர்.

மீண்டும் மீண்டுமென அமையும் ஒற்றை வாசிப்பு முறையானது ஒற்றை அர்த்தத்தையே நம்மீது எப்போதும் சுமத்த வல்லது. எளிமை யான மிகப்பழகிய படைப்புகள் நமது புலன்களை இயக்கமிழக்கச் செய்பவை. நமக்கான உண்மை எங்கோ உற்பத்தி செய்யப்பட்டு (நமது பிரக்ஞை, நமது சிந்தனை, நமது கருத்தியல் சற்றேனும் இல்லாமல்) நமக்குள் செலுத்தப்படுவது என்பது ஒரு வன்முறை. அதேபோல் ஓர் எழுத்து இப்படித் தான் இருக்க வேண்டும் என்பதும் பாசிசக் கருத்து நிலையிலானது.

''உனக்காக நான் எல்லாவற்றையும் சிந்தித்து எழுதுகிறேன். நீ சும்மா இருந்து வாசிப்பதோடு மட்டும் நிறுத்திக்கொள்'' எனும் படைப்பு இயங் கியல் நிலை என்பது வாசகன் மீது கட்புலனாகா வன்முறையில் பிரயோகிப்பதாகவே அமையமுடியும்.


வாசிப்பு என்பது ஒரு செயல். உண்மையின் சாத்தியங்களையும், அசாத்தியங்களையும் கண்டறி யும் பாதையை இதற்கான வழி; வாசிப்பும் எழுத் துக்கு இணையான செயலாக அமைதலாகும். வாசிப்பு, மொழி, இலக்கியம், தத்துவம், அரசியல், இயற்கை போன்ற தளங்களிலான பயிற்சிகள் வாசிப்பினை மேம்படுத்துவதற்கு துணை நிற்கும்.

ஃப்ராய்ட் பழங்குடி மக்களிடம் அடையா ளங்கண்ட குலக்குறியும், விலக்கும் (Totem and Taboo) என்பது 'இலக்கியம் காலத்தின் கண் ணாடி; இலக்கியம் சமூகத்தை மேன்மையடையச் செய்ய வேண்டும்' என வாதிடுபவர்களின் அல்லது அந்தக் கருத்தியலுக்கு மாற்று இல்லை என ஒற்றைக்காலில் நிற்பவர்களின் இலக்கியம் தொடர்பான நனவிலி மனதோடு ஒப்பிடத்தக்கது.

இங்கு 'குலக்குறி' என்பது விலங்கையோ, பறவையையோ தங்கள் குலக்குழுவுக்கான வழிகாட்டியாக, வணக்கத்துக்குரியதாக, மூதாதை யர்களாக காண்பது.

'விலக்கு ' என்பது தவறு நடக்கக்கூடாது என்பதற்காக காரணமின்றி ஏற்படுத்தும் விதி. பழங்குடி மக்களிடம் காணப்பட்ட வழக்கங்கள் இதற்கு எடுத்துக்காட்டு. அண்ணன் தங்கையை திருமணம் செய்யக் கூடாது என்பது அதி லொன்று.









கார் மேகம் திரண்டு
பார் முழுக்க மழை பெய்ய
ஊர் சேர்ந்து மகிழ்ச்சியில்
கூரை இல்லாக் குடிசையில் நாம்

மேக நீர் குடிசைக்குள்
வேகமாக சிந்த
சோக நீர் கண்களுக்குள்
மிதமாக பொங்குகிறது

மார் தந்த தாயும் - எமக்கு
வேர் தந்த தந்தையும்
தேர் இழுத்து விளையாடிய
தங்கையுடன் நானும் தம்பியும்

களிப்பாக செழிப்பாக வாழ்ந்த
மாளிகை மனையில்
எறிகணை வந்து விழ - இடிந்து
நெருங்கிய எங்கள் வீட்டுடன்

தந்தையின் மூச்சு அற்றுப் போக
தாயின் பேச்சு தளர்ந்து போக
தம்பியும் தங்கையும் அழுது புரள
தாளாமல் தவித்துத் துடித்தேன்-
நான்

எப்படியோ தப்பி வந்துவிட்டோம்
நாலுயிரும் ஒன்றாக
நாளுக்கு நாள் ஏங்குகின்றோம்
பாழ்.வீட்டுத் திட்டத்துக்காய்

அடுத்த முறை கிடைக்கும் என்று
கடுப்பு வார்த்தை பேசினர் சிலர்
அடுத்த மாரியும்
வந்தாச்சு
ஆனால் வீ[illegible]

- யாழ்.மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாகலிங்கம், மாஸ்ரரைப் போல் நல்ல மனம் படைத்த , பத்துப்பேர் இந்தக் கிராமத்திலிருந்தால்... இந்தக் கிராமம், எவ்வளவு சிறப்படையுமென்றெல்லாம் தமது அறிவுக்கெட்டிய மட்டில் கற்பனை பண்ணிப் பார்த்தார் நாவிதர் நாகையா. முதல் நாள் நாகலிங்கம் மாஸ்ரரின் பேரப்பிள்ளைக்குத் தாம் முடிவெட்டப் போனபோது அவர் தமக்குப் பொன் மொழிகளாகச் சொன்ன அந்தப் பெறுமதியான வார்த்தைகளைத் தமது நினைவில் மீட்டல் பாடமாக நினைவு கூர்ந்து பார்க்கின்றார்.

''டேய் பரியாரி..? உன்ரை மகன் நாகேஸ் நீ பார்த்து வாற இந்தப் பரம்பரைத் தொழில் கையிலை வெண்ணெய் இருந்த கணக்காக இருக்க ஏன்ராப்பா வெளிநாடு, வெளிநாடு எண்டெல்லாம் ஊரெல்லாம் அலையணும்? உனக்குப்பிறகு இந்தத் தொழிலைத் தொடர உன்ர 'வாரிசு' அவன் தானே! நான் நாற்சந்தியிலே கட்டிவிட்டிருக்கிற கடைக்கட்டடத்திலே ஒண்டை உன்ரை மகன் நாகேசுக்குச் சலூன் போடத்தாறன், ஒரு வருஷத்துக்கு. நீ எனக்கு வாடகை கீடை ஒண்டும் தரவேண்டாம். மண்ணிலையிலிருந்து உழைக்கத் துணியாத ஒரு பெரிய மடையனாய்க்கிடக்குது.

நாகலிங்கம் மாஸ்ரன்ரத் தாம் வணங்கும் நாராயணருக்கு அடுத்தபடியாக நினைத்து மனதால் சாங்ஸ்டாங்கமாக வணங்கிக் கொண்டார் நாகையா.

இன்று நாகலிங்கம் மாஸ்ரருக்கு முகச் சவரம் செய்ய வேண்டிய முறைக்கணக்கை நினைவுபடுத்திக் கொண்டு , அவரின் வீட்டுக்கு போவதற்காகத் தமது சைக்கிள் வண்டியை எடுக்கப் போகின்றார் நாகையா.

''அட அநியாயமே?'' கீழ்வீட்டுக்காரன் மேல்வீட்டுக்கு அடித்துக்கொண்ட கணக்காக நாகையா, சைக்கிளைத் தொட்ட கையோடு தமது தலையில் அடித்துக்கொண்டார். உயிரென்ற காற்றுப் போய்விட்டது போல் பின் சக்கரம் காற்றின்றி வெறும் சடலமாகக் காட்சியளித்தது. அவருக்கு அந்த நேரம் எரிச்சல், எரிச்சலாகத் தான் வந்து கொண்டிருந்தது. தமது தொழிலின் மீதல்ல. தமது சைக்கிள் மீதுதான்.

அடுத்த நேரம் மனம் மாறியவராய் இத்தனை காலமும் தமது தொழிலைக் காவுவது போல், தம்மைக் காவிக் கொண்டு திரிந்த அந்த 'ஹெர்குலிஸ்' சைக்கிளை ஒரு வித நேசத்துடன் பார்க்கின்றார்.

காற்றடிக்கப் பம்முக்கும் வழியில்லை. இரவலுக்குப் போனாலும் அது பிழை இது பிழையெண்டு சாட்டுச் சொல்வார்கள். பேசாமல் உருட்டிக் கொண்டு போய் நாகலிங்கம் மாஸ்ரரின் வேலையை முடித்துக் கொண்டு, திரும்பி வரும் போது சைக்கிள் கடையில் அடிக்கலாம் என்ற எண்ணத்தோடு சைக்கிளை உருட்டத் தொடங்கினார்.

சைக்கிள் உருள அதனோடு சேர்ந்து நாகையாவின் மனமும் உருளுகின்றது. நாகலிங்கம் மாஸ்ரர் சொன்ன மாதிரித் தனது மகன் நாகேஸ் இந்த வெளிநாட்டுப் பேயிலிருந்து விடுபட்டு ஒரு சலூனைப் போட்டுக் கொண்டால் கடையிலிருந்து கொண்டு ராஜா மாதிரி கால்நீட்டிக் கொண்டிருந்து, உழைத்துத் தள்ளலாம். ஊர் புரோகிதங்களையும் பார்த்துக் கொண்டால்... எவ்வளவு உச்சமாக இருக்கும் என்றெல்லாம் கற்பனைக்குதிரையில் பறந்து தன்னை மறந்தவராக சைக்கிளை வேகமாக உருட்டிக் கொண்டே நடந்தார்.

''டேய் பரியாரி ..'' என்ற பழக்கப்பட்ட குரல் கேட்டு அப்படியே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கின்றார். வாசிகசாலை வாசலில் நாகலிங்கம் மாஸ்ரர். ''இன்டைக்கி ஏன் இவ்வளவு சுணக்கம்'' என்று வாய்திறந்து கேளாத பாவனையில் அகத்தினழகை முகத்தில் காட்டுவது போல் நின்று கொண்டிருந்தார்.

''சைக்கிளுக்கும் காத்துப் போயிட்டுது வாத்தியார்'' என்று மன்னிப்பாகச் சொல்லியபடி நாகையா சைக்கிளையும் உருட்டிக்கொண்டே அவருடைய பிரத்தியேக சலூனான அந்த மாமரத்தடிக்குப் போகின்றார்.

''இப்ப மனிசருக்கே நிண்டா நிண்டாப் போல காத்துப் போற காலமடா பரியாரி'' என்று வேதாந்தம் பேசியபடியே நாகலிங்கம் மாஸ்ரர் நாகையாவின் சாணை



# வாசல் வரும் காற்று சக்தியாகலாம்

மாற்றுசக்தி வளங்களில் ஒன்றாக ஆரம்ப காலத்தில் இ
காற்றுச் சக்தி வளத்தின் மூலம் தற்போதும் புதிய தொழில் நுட்பங்கள் ப
மின்சாரத்தைப் பெறுவதற்கான ஜெனரேட்டர்களை இயக்க முடியும். இச்சக்தி வளத்
எனலாம். ஏனெனில் இலங்கை நான்குபக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளதுடன் பெருமள
காணப்படுவதால் ஏராளமான காற்றாலைகளை அமைக்க முடியும். இது வடமாகாணத்துக்கு மிகப் பெ
காற்று வேகம் கொண்ட வரண்ட காற்றாக வீசுகின்றது. டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரை வட கீழ் மொ
குறைவாக உள்ள போதும் சூறாவளிக் காற்றும் கொண்டல் காற்றும் இடையிடையே வீசுகின்றன.

இலங்கை அரசால் இச் சக்திவளத்தைப் பயன்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் ப
மலேசிய நிறுவனம் ஒன்றிற்கு கடந்த வருடத்திலிருந்து 22 வருடங்கள் குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்
அதேபோல் காற்று மூலம் மின்உற்பத்தி செய்யும் 100 மெகா வோல்ட் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையு
முழுமையாக சரியான தொழில் நுட்ப உதவியைக் கொண்டு திட்டமிட்டு பயன்படுத்தும் பொழுது
இதனைப் பயன்படுத்துவதனால் விவசாய நிலங்களுக்குத் தேவையான பெருமளவான நீ
அத்துடன் முயற்சியாளர்கள் சிறிய காற்றாலைகளை தம்முடைய வீடுகளில் அ
முடிவதுடன் இதனை ஒரு தொழிலாக கொண்டு செயற்படில்
ஒளிபெறச் செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– தையிட்டி அ.இராசதுரை



**''இந்தக் கிராமத்து மண்.. உன்ரை மகனையும் உயர்த்தி வைக்கும்.**
எல்லா அடுக்கணிகளையும் முடிச்சுக் கொண்டு திறப்பு வாங்க உன்ரை நாகேசனை அனுப்பு.. அவனுக்கு நல்ல புத்திமதிகளையும் சொல்லித் திறப்பையும் , என்ரை கையாலை குடுத்து விடுகிறன்''

'' ...இல்ல வாத்தியார் .. ஒரு ஐம்பது வீதம் தான்... அவனுக்குச் சம்மதம்'' ஓடவிட்ட கத்திியை இடையில் நிறுத்தியபடி நாகையா மனதுக்குள் தள்ளம் பாறினார்.

''அப்ப மிச்ச ஐம்பது வீதச் சம்மதமும்.. ஆருக்கு.. உனக்கோ..?'' என்று நாகலிங்கம் மாஸ்ரர், குண்டு வெடித்த கணக்காக அதட்டிய போது ''அவன் பிரான்சுக்கும், கனடாவுக்கும் , நோர்வேக்கும் போறது எண்ட தியானத்தோடை தானிருக்கிறான்'' என்று தனக்கு மாத்திரம் புலம்பிக் கொண்ட நாகையா மௌனமாகத் தனது வேலையைக் கவனித்தார்.

மனக்குழப்பத்திலிருக்கும் நாகையாவிடம் இந்தச் சந்தர்ப்பத்தில் கதை கொடுத்தால் அவனுடைய கத்தி தமது முகத்தில் கைவரிசை காட்டி விடுமென்ற பயத்தில் நாகலிங்கம் மாஸ்ரரும் வாயை இறுக்கி மூடிக்கொண்டார். நாகலிங்கமும் மாஸ்ரரின் மூத்த மகன் நாவுக்கரசன் ஆஸ்திரேலியாவிலிருந்து கொண்டே எத்தனையோ தடவைகள் நாகலிங்கம் மாஸ்ரரையும், அவர் மனைவியையும் அங்கே வந்து விடும்படி கடிதத்துக்கு மேல் கடிதம் போட்டானாம்.

பழத்துக்கும் ,பட்டருக்கும் ,இறைச்சிக்கும், சுகவாழ்வுக்கும் பெயர் போன இனிமையான ஆஸ்திரேலியாவை நாகலிங்கம் மாஸ்ரர் ஏன் உதறி எறிகிறாரென்று நினைத்துக் கொண்டார் நாகையா. எப்படி என்றாலும் பிறந்த வளர்ந்த இந்தக் கிராம மண்ணின் 'மண்வாசனையை' எப்படி மறக்க மனம்வரும் ? பிரிய மனம் வரும்? என்றெல்லாம் தமது மகனை நினைத்துக் கொண்டே சவரக் கத்தியை மூடியதும் நாகலிங்கம் மாஸ்ரர் தமது வாயைத் திறக்கின்றார்...

''இந்தா பரியாரி ஒரு கதை கேளடா'' என்று ஆரம்பித்தவர் ''நானெல்லாம் என்ரை மூத்தவன் , ஆஸ்திரேலியாவுக்கு வரச்சொல்லி எவ்வளவு கேட்டும் இந்த ஊரை விட்டுப் பிரிய மனம் வராமலுக்குப் போக மறுத்திட்டன்.'' என்று பெருமையாகச் சொன்ன போது.. ''நானும் அப்படித்தான்..சாவிலை தான் இந்தக் தையிட்டிக் கிராமத்தை விட்டுப் பிரிவன்! '' என்று சொல்வது போல் நாகலிங்கம் மாஸ்ரரின் முகத்தை அமைதியாகப் பார்த்தார் நாகையா. நாகையாவின் முகத்தில் வீசிய மண்வாசனையின்..யதார்த்த மணத்தை நுகர்ந்து அனுபவித்துத் தள்ளியவராக நாகலிங்கம் மாஸ்ரர் சொல்லுகின்றார்...

''இந்தக் கிராமத்து மண்.. உன்ரை மகனையும் உயர்த்தி வைக்கும். எல்லா அடுக்கணிகளையும் முடிச்சுக் கொண்டு திறப்பு வாங்க உன்ரை நாகேசனை அனுப்பு.. அவனுக்கு நல்ல புத்திமதிகளையும் சொல்லித் திறப்பையும் , என்ரை கையாலை குடுத்து விடுகிறன்'' இப்படியெல்லாம் நாகலிங்கம் மாஸ்ரரின் ''நா''.. அசைந்த போதும், தமது மகன் நாகேஸ் , அசையாவிட்டால் என்னவா முடியுமென்ற யோசனையோடு நாகையா தலையைப் போட்டுச் சொறிந்தார்.

நாகையாவின் கத்தரிக்கோல் வெட்டுக்கு விழும் தலைமயிர்களாக நாள்களும், நேரமென்ற இயற்கையின் கத்தரிக்கோலினால் வெட்டப்பட்டு விழா, ஒருநாள் நாகையாவும், நாகேசுவும் நாகலிங்கம் மாஸ்ரர் வீட்டு முற்றத்தில் திறப்புக்காகக் காவலிருந்தார்கள்..

நாகலிங்கம் மாஸ்ரர் கதவைத்திறந்து கொண்டு வெளியே வந்தார். அவருடைய கையில் திறப்பு இருக்கின்றதா? என்று நாகையா வடிவாகத் தேடிப் பார்த்தார். அத்தோடு அவருடைய வாயில்''நா'' இருக்கின்றதா? என்றும் வடிவாகத் தேடியும் பார்த்தார்......!!

''ஆரோ..நாயன்மார்கட்டிலையிருந்து ஒரு பகுதி அட்வாண்சாய் ஐம்பதினாயிரம் ரூபா தரலாமெண்டு கடையைத் தரச்சொல்லி... வலுவாய் அவதிப்படுத்திச்சினம்.. பின்னை.. நானும் தெரியாதே.. என்ன செய்யிறதெண்டு போட்டு அவையளுக்கு ஓமெண்டு போட்டன்.. இனியதை..எப்பிடி..மாத்த முடியும்? உன்ரை மோனுக்கு.. ஙனி..வெளிநாடுதான்சரி.கண்டியோ..!!''

''நா காக்க'' என்னும் வள்ளுவன் குறளுக்குக் களங்கம் ஏற்படுத்திக் கொண்டவராய், நாகலிங்கம் மாஸ்ரர் முதல் நாள் தம்முடைய 'நா' வைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமற் போன இந்தத் தடம்புரண்டுவிட்ட சம்பவத்தை..தமது நினைவில்..'நா' வென்றதோர் குறும்படமாய்..ஓடவிட்டுப் பார்த்தபடியே..

நாகலிங்கம் மாஸ்ரருக்கு அந்த முறைக் கணக்குப் பிசகாமல் முகச்சவரம் செய்யப் போய்க்கொண்டிருந்த நாகையா..மனம்விட்டு ..வாய்விட்டுச் செர்லிக் கொண்ட வார்த்தைகள் இவை...

''..இந்த, இப்பேர்பட்ட ..இந்த நாகலிங்க வாத்தியைப் போலை..இண்டைக்கொரு கதை..நாளைக்கொரு'' கதையெண்டு நாக்கைப் பிரட்டிப் பேசிற..ஒரு.. நாலு மொட்டையள்.. இருந்தாக் காணும்? எங்கடையிந்தத் தையிட்டிக் கிராமத்தின்ரை சிறப்பைப் பற்றிக் கதைக்கவும் தேவையில்லை...''

பிடித்த சவரத்துக்கு முதலாவது ஆளாக முகம் கொடுத்தார்...!


நாகையா தொழில் செய்வது காசுக்காக அல்ல. அவர் சொல்லும் இரசனையான தகப்பன் பேரன் காலத்துக் கதைகளுக்காகவும், ஊர்ப்புதினங்களுக்காகவும்தான். காலம் முழுவதும் பக்தி சிந்தனையான ஒரு பூசாரியாக அவருக்குத் தொழில் செய்து கொண்டே இருக்கலாமென்ற அபிமான இரசிக உணர்வோடு கத்தியை அவருடைய வழுவழுப்பான முகத்தில் நைசாக படரவிடுகிறார் தார் ரோட்டில் வழுக்கிக் கொண்டே ஓடும் காரைப் போல..

''பரியாரி! உன்ர நாகேசனுக்கு கடை போடச் சம்மதம் தானோ?''

---

ருந்து பயன்படுத்தப்பட்டு வரும்
சுத்தி அதன் மூலம் காற்றாடிகளை சுழலச் செய்து
றத பெறுவதற்குரிய வாய்ப்பு இலங்கையில் நிறையவே உண்டு
வான சம தரையையும் அழகிய கடற்கரையோரங்களையும் கொண்டு
ாருந்தும். காரணம் மே தொடக்கம் செப்ரம்பர் வரை தென்மேற்கு மொன்சுன்
ன்சுன் காற்றாக வீசுகின்றது. ஒக்ரோபர், நவம்பர், ஏப்ரல் மாதங்களில் காற்று வீச்சுக்

ின் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றினை அமைப்பதற்காக அப்பகுதி நிலங்களை
ளது. இது 250 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைவுபெறவுள்ளது.
ம் இவ் வருடம் மன்னாரில் நிர்மாணிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இவ்வளத்தை
மின்சக்திக்காக ஏனையோரிடம் கையேந்தி நிற்கும் நிலை குறைவடையும்.
ர குளங்கள் கிணறுகளிலிருந்து இறைப்பதன் மூலம் பெறமுடியும்.
பதன் மூலம் தமது தேவைகளை ஓரளவு பூர்த்தியாக்க
இருளில் மூழ்கியுள்ள கிராமங்களை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.காயத்ரி, யாழ்.பல்கலைக்கழகம்.

# கவிதைகளின் விம்பம்

■ அ.அஜந்தகுமார்

இலக்கியத்துறையில் கவிதைக்கு இருக்கக் கூடிய இடம் மிக முக்கியமானது. இலக்கியத்தின் முதல் பதிகை கவிதையெனும் நடுகை தான். மாத்திரமல்ல வீச்சும் உணர்த்து திறனும் கவிதைக்குத்தான் உண்டு. ஆனால் இதனைப் பலரும் புரிந்துகொள்வதில்லை.

சிலருக்குக் கவிதை என்பது மொழி விளையாட்டு. எடுப்பார் கைப்பிள்ளை. யாருக்கும் கைவாலாயமாகும் பொம்மை. எழுதவும் படிக்கவும் சுலபமானது என்ற மாயையை அது கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

கவிதை எம் மனதின் விம்பம். எம் உணர்வுகளின் ஆழப்பதியும் கால் தடம், எம்மைப் பிழியும் ஆற்றல்கொண்ட கருவி. எம்மை நாம் யாரிடமும் வாசிக்கக் கொடுக்கக் கூடிய ஒரு வடிவம், கலையின் தாய், சொற்களுடன் உணர்வுகளும் இழைத்து இழைத்து பிரயாணப்படும் ஒற்றை வழிப்பாதை போன்ற பலவழிகள்கொண்ட நீண்ட தெரு. அது சிலருக்கு உடனே முடிந்து விடுகிறது. சிலர் சுரங்கங்களையும் கண்டு 'நீள நினைத்து'... கொண்டே இருக்கிறார்கள். மனதை இலேசாக்கவும் சிக்கலாக்கவும் உணர்ச்சி வசப்பட வைக்கவும் தெளிவாக்கவும் சக்தி கொண்டது. பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும். என்று பாரதி சும்மாவா பாடியிருப்பான்?

ஐந்தாறு கவிதைகளை எழுதியவுடன் சிலருக்கு கொம்புகள் முளைத்துவிடுகின்றன. அப்படிக் கொம்பு முளைத்த சிலர் தங்கள் கொம்புகளுக்குத் தாங்களே மாலைகளை மாறி மாறி அணிவித்துப் புளுகப்பட்டுக் கொள்கிறார்கள். அகரவரிசையில் சொற்களை அடுக்குதல், மோனைகளுடன் பயணம் செய்தல், ஒரு சொல்லில் இருந்து பெருப்பித்து பெருப்பித்து சொல்லுதல் என்று சொற்களுடன் அவர்கள் கவிதை முடிந்து விடுகின்றது.

சொற்களின் தேர்தல், அதைப் பயன்படுத்தும் லாவண்யம், உணர்வுகளுடன் அதைப் பிணைத்தல், சொற்கள் கரைந்து கரைந்து புதுவடிவமாக மனதுள் நின்று ஏதேதோ செய்தல், அது ஏற்படுத்தும் அந்தரமும் நிம்மதியின்மையும், எங்களைச் சொற்களுடன் மீண்டும் பயணிக்க வைத்தல் என்ற முடிவில்லாப் பயணம் இன்று அருகியபடியே வருகின்றது.

கவிதை என்பது உரித்த வாழைப்பழமாக இருக்க வேண்டும் என்றே சிலர் நினைக்கின்றார்கள். புதிய சொல்லாட்சிகளும் தன்னுள் புதுப்புதுக் கதவுகளை அவரவர்க்குத் தெரியக் கூடியவாறு வைத்திருத்தலும் சிலருக்குக் கடினமாகவே இருக்கிறது. நேரடி அர்த்தம்-செய்தி தருவதாக இருந்தால் அதற்கு ஏன் கவிதைக்கு வரவேண்டும். அதைக் கட்டுரையாக்கி அழகு பார்க்கலாமே?

இது இன்று நேற்று வந்த பிரச்சினையல்ல. நாயக்கர் காலத்திலேயே இதைக் காண்கிறோம். இரட்டையர்கள் தமக்குப் பரிசு தராத அரசனைப் பின்வருமாறு இகழ்ந்து பாடினார்கள்.

***"மூடர் முன்னே பாடல் மொழிந்தால் அறிவீரா***
***ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா ஆடகப்பொற்***
***செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்ன பயன்***
***அந்தகனே நாயகனானால்?"***




ஒரு பெண்ணை மிக அழகாக அலங்கரித்து குருடனுக்கு முன்னால் நிறுத்தியது போலத்தான் மூடர் முன்னே பாடல் பொழிவது என்கிறார்கள் இரட்டையர்கள்.

ஆனால் சிலரோ பிறரது கவிதை தம்மை மூடர்களாக்கும் முயற்சி என்று குற்றஞ்சாட்டுகின்றார்கள். அவர்கள் நினைப்பது போலக் கவிதையை கள்ளன்-பொலிஸ் விளையாட்டில் ஒளிந்து கொள்ளும் வடிவமாக மாத்திரம் சிலர் பயன்படுத்துவதும் நடக்கத்தான் செய்கின்றது. பொருளை வைத்திருப்பதைப் போல சிலர் வெறுங்கையை பொத்திக் கொண்டே இருக்கிறார்கள். கவிவிரல்(?)களைப் பிரித்தால் என்னதான் நிகழ்ந்து விடப்போகின்றது?

கவிதையை அடக்கத்துடன் தொடங்கி அடங்க வைக்கும் ஆற்றல் கவிஞர்களுக்கு இருக்க வேண்டும். கம்பர் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

**ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று ஒரு**
**பூசை முற்றவும் நக்கு புக்கென**
**ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றுஇக்**
**காசு இல் கொற்றத்து இராமன் கதை அரோ**

என்று பாற்கடலின் முன்னால் நிற்கும் சிறுபூனையின் முயற்சி என்று சொன்னாலும்; தன்னை அபரபிரமனாக மாற்றும் திறன் கம்பருக்குள் சாதாரணமாகவே இருந்தது என்பது தான் உண்மை.

**"பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?"**

என்று தன்னை அடக்கமாக்கிக் கம்பர் கூறினாலும் 'உயர் கம்பனாக' அவரை தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றது அல்லவா? ஆனால் சொல் விளையாட்டுடனும் பிரசாரத்துடனும் மட்டும் நின்று விடும் கவிஞர்(?)களின் கவிதைகள் 'பன்னப் பெறுபவோ?' என்றால் நிச்சயமாக இல்லை.

**"ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ்மக்கள் எல்லோரும் நன்கு பொருள் விளங்கும்படி எழுது வதுடன்"**

என்று பாரதி கூறியதை சிலர் தமக்குச் சாதகமாக தவறாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

**"சுவை புதிது பொருள் புதிது**
**வளம் புதிது சொல் புதிது**
**சோதி மிக்க நவ கவிதை**
**எந்நாளும் அழியாத மகாகவிதை"**

என்றும் பாரதிதான் கூறியிருக்கிறான் என்பதையும் நாம் உணர வேண்டும்.

சங்கக் கவிதைகளின் சொற்கள் இன்றைய கால வாசிப்புக்கு தடையாகின்றன என்று சிலர் சொல்கின்றார்கள். உள்ளுறை, உவமை, இறைச்சிப் பொருள் என்பன ஓரிரண்டு வருசத்து நூற்பழக்கமுள்ளவர்களுக்கு கிட்டுமா? என்றால் நிச்சயம் இல்லை.

நவீன கவிதை என்பதை நாம் சரியாக எதிர்கொள்ளும் போதுதான் - புரிந்து கொள்ளும் போது தான் -புதிய பாதையில் நாம் பயணம் செய்ய முடியும்.

---

# தாய் நிலம்

12

-சடா கோபன்



குயில்களும் சேவல்களும்
கூவியழைக்க...

குருவிகளும் சிறுகுஞ்சு அணில்களும்
குதுகலிக்க

குருத்து இலைகளில்
குந்தியிருந்த தென்றல்காற்று
கொஞ்சம் எழும்பி
கொட்டாவி விட்டு
சோம்பல் முறிக்க...

புற்தரை நுனியெங்கும் பூத்திருக்கும்
பனித்துளி முகங்கள்
புத்தழகுகாட்ட.....

இராத்திரி முழுதும்
போர்த்துக் கிடந்த
கறுத்தப் போர்வை
இழுத்து அகற்றி

வானப்பெண்ணை
நாணிச் சிவக்கவைத்து

வருகின்ற வாலிபச் சூரியனின்
வயசுப் பார்வைபட்டு
பங்குனி மொட்டு
பக்குவப்பட்டு
சின்ன இதழ்கள்
மெல்ல அவிழ்ந்து
சித்திரைப் பூ விரிகிறது....

விரிகின்ற சித்திரைப் பூவே
நீரோ நெருப்போ
நெருடும் காற்றோ
வானோ மண்ணோ
எதுவோ
நீ எதுவாயெல்லாம் விரிகின்றாய்

நீராய் நீ விரிந்தால்
விழுவது எங்கே
விழிகளின் மேலா...
விதைகளின் மேலா

நெருப்பாய் நீ விரிந்தால்
எரிவது எங்கே
நெஞ்சிலா...
வயிற்றிலா....

நீலவானாய் நீ விரிந்தால்
காட்டுவது எதனை
வானவில்லையா...
எல்லையில்லாத எல்லைகளையா...

நிலமாய் நீ விரிந்தால்
தாங்குவது எதனை
வேர்களையும் விழுதுகளையுமா...
வெடிப்புக்களையும்
தட்டு நகர்வுகளையுமா....

காற்றாய் நீ விரிந்தால்
நுழைவது எங்கே
மூங்கில் துளைகளுடா...
மூக்கு துவாரங்களுடா...

விரிகின்ற சித்திரைப் பூவே
நீ எதுவாய்
எதுவாயோ எல்லாம் விரிகின்றாய்...

விரிகின்ற சித்திரைப் பூவே..

வேர்களை நீரில் படவிடு
விதைகளை நிலத்தில் விழவிடு
நெருப்பை அடுப்புக்குள் புகவிடு

வானில் எண்ணங்களை போகவிடு
காற்றில் கண்ணீரை காயவிடு
காலம் எதனையும் ஆற்றட்டும்....

மனங்களில் இணைந்து
விடியலை அழைப்போம்...
புற்கள் முளைத்து
பூக்கும் பூக்களில்
புதிய மகரந்த
மணிகளாய் உயிர்ப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரபஞ்சத்தின் வயதென்ன?

இந்தப் பிரபஞ்சத்தின் வயதானது இதுவரை காலமும் கருதப்பட்டு வந்த காலத்தை விட சுமார் 80 மில்லியன் ஆண்டுகள் மூப்பைக் கொண்டது என்ற உண்மை இப்போது தெரிய வந்துள்ளது. பிரபஞ்சத்தில் தோன்றிய மிகமிக முந்திய வெளிச்சத்திலிருந்து இந்தக் கணிப்பு பெறப்பட்டிருப்பதாக ஐரோப்பிய விண்வெளி முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கைக் கோள் அனுப்பிய படங்களில் இருந்து இந்தத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்டதாகக் கருதப்படும் பெரும் வெடிப்பினையடுத்து எஞ்சியிருந்த கதிர் அலைகளை படத் தொகுதிகளாக இந்தக் கோளிலிருந்து பெற்றிருக்கிறார்கள். அந்தப் படங்களில் இருந்து கிடைத்த புள்ளி விபரங்கள் விஞ்ஞானிகள் இந்த முடிவுக்கு வருவதற்கு உதவியுள்ளன.

பிரபஞ்சத்தின் ஆரம்பம் தொடர்பான எமது அறிவை விடயத்தில் இது ஒரு புதுமையான பாய்ச்சல் என்றுதான் சொல்லவேண்டும் என்கின்றார். ஐரோப்பிய விண்வெளி முகவர் அமைப்பின் (Europion Space Agency-ESA) பணிப்பாளர் நாயகம் ஜீன் ஜெக்ஸ் டோர்டேன். இந்த முகவர் அமைப்பு செலுத்திய பிளாங்க் விண்வெளிக்கலம் சேகரித்த புள்ளிவிபர தரவுகள் பிக்பேங் (Bigbang) எனப்படும் பெரு வெடிப்பிலிருந்து எஞ்சியுள்ள கதிர் அலைகளில் இருந்து ஒரு வரைபடத்தை (Microwave sky- நுண் அலை வானம்) விஞ்ஞானிகள் தயாரித்திருக்கிறார்கள். பிளாங்க் விண்கலம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் உலக நுண் அலை பின்புலத்தைக் கண்டறிவதற்காக செலுத்தப்பட்டது. இப்பொழுது கிடைத்துள்ள வரைபட விம்பமானது அந்த பெருவெடிப்புக்கு மிக அண்மித்த காலத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என்கிறார்கள் விஞ்ஞானிகள். பெருவெடிப்பு ஏற்பட்டு 380,000 ஆண்டுகளின் பின்னர் நுண் அலை பின்புலம் அல்லது எஞ்சிய கதிர் அலைகளின் நிலைமையானது பதிதாகத் தோன்றிய பிரபஞ்சம் குளிர்வடையத் தொடங்கிய காலத்தை காட்டுவதாக வரைபடம் உள்ளது என்கிறார்கள். அந்தக் காலத்தில் நட்சத்திரங்களோ, பால் வீதிகளோ தோன்றியிருக்கவில்லை.

பிரபஞ்சமானது முன்பு எண்ணப்பட்டதைவிட மிக மெதுவாகவே விரிவடையத் தொடங்கியிருந்தது என்பது அவர்களின் முடிவு.

## பெருவெடிப்புக் கோட்பாடு

Bigbang-பெருவெடிப்புக் கோட்பாடானது பிரபஞ்சத்தின் ஆரம்பகால அமைப்பை-அது விரிவடைந்த முறையை விளக்கும் மாதிரியாகும். இந்தக் கோட்பாட்டின்படி பெருவெடிப்பானது பெரும்பாலும் 13.798±0.037 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. அதுவே பிரபஞ்சத்தின் வயதாகவும் கருதப்பட்டு வந்துள்ளது. அதன்போது மிகவும் வெப்பம் கூடிய நிலையிலிருந்து பிரபஞ்சம் குளிர்வடையத் தொடங்கியது. அதன்போது சக்தியானது பல்வேறு துணை அணு துணிக்கைகளை உருமாற்றம் பெறலாயிற்று. புரோட்டோன், நியூட்ரோன், இலத்திரோன் முதலியவை இதில் அடங்கும்.

ரம்பன்

# சிறுவர்களை பாதிக்கும் ஆட்டிஸம் நோய்க்கு மருந்து

பிறரோடு உறவாடுவதில் அல்லது தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கும் (Autism) ஒருவகை மனோநிலை உடைய சிறுவர்களை குணப்படுத்துவதற்கான மருந்தொன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

சுரமின் (Suramin) என்றழைக்கப்படும் இந்த மருந்தானது, ஏற்கனவே ஆபிரிக்காவில் தூக்க நோயைக் குணப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்போது ஆட்டிஸம் என்றழைக்கப்படும் நோயைக் குணப்படுத்துவதற்காக எலிகள் மீது பயன்படுத்தப்பட்டு வெற்றியளித்துள்ளது. இந்த நோயின் அறிகுறியுள்ள சிறுவர்கள் மீதும் இந்த மருந்தை முதல் தடவையாக பரிசோதித்துப் பார்க்க விஞ்ஞானிகள் ஆயத்தமாகியுள்ளார்கள்.



இந்த மருந்தானது அணு பிரமாணமட்டத்தில் மூளை தொடர்புகளில் உள்ள சிக்கல்களை சீர் செய்கின்றது. கலத்துக்குக் கலம் சமிக்ஞைகளை கொடுத்தும் இந்த நோய்க்கு அடிப்படையாகக் கருதப்படும் பரிணாம சிக்கல்கள் மீது தாக்கங்களை ஏற்படுத்தியும் வேலை செய்கின்றதாம்.

உடல் கலங்களுக்கு ஒத்தனம் கொடுப்பதை இந்த மருத்துவத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் மூலம் மன அழுத்தத்தின் மீது பரிணாம பிரதிபலிப்பினை உருவாக்கி நோயைக் குணப்படுத்த விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

எலிகளிடம் பரிசோதித்துப் பார்த்ததில் 17 விதமான ஒழுங்கீனங்கள் சரி செய்யப்பட்டுள்ளன. இதில் சமூக நடத்தை தொடர்பான பிரச்சினைகளும் அடங்கும்.

ஆட்டிஸம் நோயானது பெரும்பாலும் பையன்கள் மத்தியிலேயே காணப்படுகின்றது. சமூகத்தில் இயங்குவது தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது போன்றவற்றை பாதிக்கும் இந்த நோய் வயதுகளை முழுமையாக பாதிப்பை ஏற்படுத்துவதாக இருந்தாலும் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய் பற்றிய புதிய தகவல்கள்

செவ்வாய்க்கிரகத்தில் உயிர்கள் வாழ்ந்திருக்கக்கூடிய சூழ்நிலைகள் முன்னொரு காலத்தில் இருந்துள்ளமையை நாசா விஞ்ஞானிகள் இப்பொழுது சான்றுகளுடன் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு உயிர்கள் வாழ்ந்திருக்குமானால் அந்த உயிர்களின் எச்சங்கள் ஏதும் கிடைக்குமா என்பதில் அவர்கள் இப்போது தமது கவனத்தைத் திருப்பியிருப்பியுள்ளனர், இனிமேலும் அவ்வாறான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முயன்று பார்ப்பதும் அதன் மூலம் உயிர்களை குறிப்பாக மனிதர்களை அங்கு குடியேற்ற முடியுமா என்று ஆராய்வதும் நாசா விஞ்ஞானிகளின் எதிர்கால சிந்தனையாக இருக்கப்போகிறது.

நாசா நிறுவனம் அண்மைக்காலத்தில் செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பி வைத்த கியூரியோசிட்டி என பெயர் சூட்டப்பட்ட ரோவர் விண்கலமானது செவ்வாய்த்தரையில் சேகரித்து அனுப்பியுள்ள பொருள்கள், அந்தக்கிரகம் பற்றி புதுவிதமாக விஞ்ஞானிகளை சிந்திக்க வைத்துள்ளது.

ஒரு காலத்தில் உயிர்கள் வாழ்வதற்கு செவ்வாய்த்தரை சாதகமாக இருந்திருக்க முடியும். -கியூரியோசிட்டி அனுப்பியுள்ள பாறை மாதிரிகளில் நடத்திய ஆய்வுகளின் போது இதற்கு திறவுகோல் போல் அமையும் இரசாயனச் சேர்மானப் பொருள்கள் கிடைத்துள்ளன.

கியூரியோசிட்டி திட்ட விஞ்ஞானியான ஜோன் குரோட்சிங்கர் என்பவர் இது பற்றி கூறுகையில்; உயிர்கள் வாழ்வதற்கு வாழ்வாதார சூழ்நிலையொன்று இருந்துள்ளமையை கண்டறிந்துள்ளோம். தண்ணீர் வசதி மட்டும் இருக்குமானால் நிச்சயம் அது குடிக்கக்கூடியதாகவும் இருந்திருக்கும் என்றார். கியூரியோசிட்டியில் அமைக்கப்பட்டுள்ள இரசாயன ஆய்வுக் கருவிகளின் கண்டுபிடிப்புக்களின் படி ஆதிகாலத்தில் செவ்வாய்க்கிரகம் உயிர்கள் வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது என்கிறார்கள் நாசா விஞ்ஞானிகள்.

சல்வர் ,ஹைட்ரஜன், ஒட்சிசன் ,பொஸ்பொரஸ் மற்றும் காபன் போன்ற உயிர் வாழ்வதற்கு அவசியமான அடிப்படை இரசாயனங்கள் கியூரியோசிட்டி அனுப்பிய மாதிரிகளில் விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ளனர். செவ்வாய்த்தரையில் கேல் பள்ளத்தாக்கில் உள்ள முக்காலத்து ஓடை படுகையொன்றில் காணப்படும் வண்டல் பாறையொன்றை கியூரியோசிட்டி கடந்தவாரம் குடைந்து ஆய்வு நடத்தியிருந்தது தெரிந்ததே.

# உலகின் மிகப்பெரிய வைரம் ஏலத்தில்



உலகிலுள்ள மிகப்பெரியதும், விலைமதிப்புக் கூடியதுமான, பழுது எதுவுமற்ற வைரக்கல் முதல்தடவையாக ஏலத்துக்கு வரவிருக்கின்றது. பெரும்பாலும் 2 கோடி அமெரிக்க டொலருக்கு இது விற்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பேரிக்காய் வடிவில் அமைந்துள்ள இந்த வைரக் கல்லானது முழுமையான நிறத்தையும், தெளிவையும் கொண்டிருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். பொதுவாக ஆங்கிலத்தில் Diamond என்றழைக்கப்படும் வைரக் கற்களுக்கு நிறமில்லை என்று கூறப்படுகின்றது. இந்தக் கல்லானது 101.73 கரட் மதிப்புள்ளதாம். அண்மையில் 9.4 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனையான இதைப் போன்று பழுதற்ற வைரக்கற்கள் உலகில் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் அளவை இதைவிட சிறிதானவையே.

இந்த வைரக்கல்லானது பொட்ஸ்வானாவில் உள்ள ஜிவானங் சுரங்கத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது. 236 கரட் அளவில் கரடுமுரடான நிலையில் இருந்த இது செதுக்கி பட்டை தீட்டப்படுவதற்கு 21 மாதங்கள் பிடித்துள்ளது.

ஜெனிவாவிலுள்ள சோதபீஸஸ் ஹோட்டலில் மே 15 ஆம் திகதி விற்பனைக்கு விடப்படவிருக்கிறது. இதனை விலைக்கு எடுப்பவர் இதற்கு ஒரு பெயரை சூட்டுவதற்கான பெருமையையும் பெறுவர். உலகின் மிக பிரபலமான பேரிக்காய் வடிவிலான வைரக்கல்லின் இப்போதைய பெயர் குல்லினன் என்பதாகும். நிறமற்ற இந்தக் கல்லானது 530.20 கரட் மதிப்புள்ளது. இது பிரித்தானிய கிரீடத் வைரங்களில் ஒன்றாகும். இதுவே உலகிலுள்ள நிறமற்ற மிகப்பெரிய வைரம் என்று அறியப்படுகின்றது.

# புதுயுகப் பெண்..!!!





கு.பிரதா
யா/இணுவில் இந்துக் கல்லூரி

மனித சமூகத்தின் அடித்தளமாக அமைவது தான் குடும்பம். இந்த குடும்பத்தின் வளர்ச்சியில் பங்கேற்பவள் பெண். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று ஆன்றோர்கள் உரைத்துள்ளார்கள். இதிலே அன்னை என்பவள் முதலிடத்தில் வைக்கப்பட்டுள்ளாள். முதலிடத்திலே வைக்கப்பட்ட அன்னை ஒரு பெண்ணாகவே காணப்படுகிறாள்.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்று நான்கு சொற்களிலே போற்றப்படுகிறார்கள். மாதா என்பது தாயாகும். இந்த பெண்ணானவள் தனது கணவனுக்கு ஒரு நல்ல மனைவியாகவும், குழந்தைகளுக்கு ஒரு சிறந்த தாயாகவும் இருதரப்பு உறுப்பினர்களுக்கும் சிறந்ததோர் உறவினராகவும் விளங்குகிறாள்.

இலங்கையில் ஐம்பது சதவீதமானோர் உழைக்கும் பெண் களாகவே காணப்படுகின்றனர். இன்றைய இந்தக் காலத்திலே "கொழுந்து கிள்ளும் கோதையர்களின் கை இல்லாவிடில் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் ஸ்தம்பித்து விடும்" என்பது மலையகப் பெண்களை புகழ்ந்து பாடிய பாடலாகும். எனவே கொழுந்து கிள்ளும் பெண்கள் இல்லையெனில் நாம் ஒரு கப் தேநீர் கூட அருந்த முடியாத நிலைதான் ஏற்பட்டிருக்கும்.

இந்த நிலையில் பெண்கள் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்று கூறுவதில் பெண்ணினம் பெருமையடைகிறது.

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்ற காலம் மலையேறிவிட்டது. இன்று அடுப்பூதும் பெண்கள் நாங்கள் எழுந்து நிற்கிறோம் என்று பெண்ணினம் மிக்க பெருமையடைகிறது. "அம்மா என்றழைக்காத உயிரில்லையே அம்மாவை வணங்காது உயர்வில்லையே" என்ற பாடலிலே அம்மா என்ற புனிதமான சொல்லை அழைக்காதவர் இந்த உலகிலே எவரும் இருக்க முடியாது. ஏனெனில் சிறு குழந்தை முதலில் காண்பது தன் தாயைத் தான்.

ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம்; அம்மாவை வாங்க முடியுமா? நாம் எந்தப் பொருளினையும் ஆசைக்கேற்ப வாங்க முடியும். ஆனால் அம்மா என்ற உயிரை விலை மதிக்க முடியாத ஒரு பொருளை நம்மால் என்ன வேறு யாராலும் வாங்க முடியாது. எனவே அன்று தொட்டு இன்று வரை பெண்ணினம் பெருமையுற்று வளர்ச்சியடைந்து வருகின்றது. பெண்களைப் பற்றி திரையிசைப் பாடல்கள் பலவும் பெண்ணினத்தை பெருமைப்படுத்துகின்றன. பெண்ணினப் பெருமையை பறை சாற்றுவோம்.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் **"திலகம்"**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# சந்தோஷத்துடன்

## கை குலுக்குங்கள்...!



மனது கலங்கிப் போய்க் கிடக்கும்போது "என்னம்மா.." என்று பாசத்துடனும், பரிவுடனும் ஒரு சின்னக் குரல் நம் காதுக்கருகே வந்து கேட்கும்போது மனதுக்கு எப்படி இருக்கும் தெரியுமா ...அனுபவித்தவர்களுக்கு அது நிச்சயம் புரியும். மனித மனம் அப்படிப்பட்டதுதான். எந்த ஒரு வேதனையாக இருந்தாலும், கலக்கமாக இருந்தாலும், வலியாக இருந்தாலும், ஆறுதல் அலைகள் அந்த மனக் கரைகள் மீது பட்டுத் தெறிக்கும்போது கிடைக்கும் நிம்மதி, சொர்க்கத்திற்குச் சமமானது.

என் தோள் இருக்கிறது சாய்ந்து கொள், என் கரம் இருக்கிறது பற்றிக் கொள் என்று தேடி வரும் ஆத்மாக்களைப் பார்க்கும்போதே மனது தேம்பித் தொடங்கி விடும். அழுகை நல்லதுதான், ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர், அதனால் இதுபோன்ற சமயங்களில் தாராளமாக அழலாம்... ஆறுதல் தரும் தோள் மீது சாய்ந்தபடி.. மனசுக்கு ஒன்றுமே தெரியாதுங்க. அது ஒரு குழந்தை போல. அந்த மனதை அதிகம் கஷ்டப்படுத்தக் கூடாது. கஷ்டம் வருகிறதா, மனசு சரியில்லையா, வலிக்கிறதா.. அமைதியாக இருங்கள்.

அழகான விஷயங்களை யோசித்துக் கொள்ளுங்கள், சந்தோஷ தருணங்களை நினைத்துப் பாருங்கள். ஒன்றும் முடியவில்லையா. வெளியில் போய் வெயிலையாவது வெறித்துப் பாருங்கள்.. உங்கள் மனம் கவர்ந்த விஷயம் அங்கு நிச்சயம் உங்களது கண்களுக்குப் புலப்படும்.. கவலைக்கு மருந்தேது என்பார்கள். அது அபத்தமானது. கவலைக்கும் மருந்துண்டு. சந்தோஷம்தான் அந்த மருந்து. மனதை அப்படியே வெறுமனே விட்டு விடுங்கள்.

எதையும் நினைத்துப் பார்க்காதீர்கள்.. அப்படியே நினைத்தாலும் கவலை வந்து உங்களைத் தாக்கிய விநாடிக்கு முதல் விநாடி நீங்கள் இருந்த சந்தோஷ தருணத்தை அப்படியே திரும்ப நினைத்துப் பாருங்கள்... அதற்கு முந்தைய விநாடி உங்களை உற்சாகப்படுத்திய விஷயத்தை நினைத்துப் பாருங்கள்.. ஜில்லென்ற உணர்வு நிச்சயம் உங்களை ஆட்கொள்ளும். கவலைகளும், வருத்தங்களும், வேதனைகளும், வலிகளும் தாக்காத மனங்கள் உலகில் எங்குமே இருக்க முடியாது.. அப்படியே இருந்தாலும் நிச்சயம் அது மனித மனமாக இருக்க முடியாது.

மனிதன் என்றால் கவலைகளும் சேர்ந்தவன்தானே... ! இந்த உலகம் அழகானது.. எந்த வேதனைக்கும் இங்கு மருந்துண்டு.. வெளியில் வந்து பாருங்கள், சாதாரண வானம் கூட கவர்ச்சியாக தெரியும்- நீங்கள் ரசித்துப் பார்த்தால். ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு இலையும், ஒவ்வொரு பறவையும், அதன் சின்னச் சின்ன கூக்குரலும்... எவ்வளவு அழகு.. பெய்யும் மழை, அடிக்கும் காற்று, கொளுத்தும் வெயில்... என்னை விட, உங்களை விட, நம்மைவிட இந்த உலகம் [illegible] அனுபவிக்கவோ ஒரு பிறவி போதாது... இதில் எதற்கு நமக்கு [illegible] கவலைகள்... ? விட்டெறியுங்கள்.. சந்தோஷத்துடன் கை குலுக்குங்கள்.!

# புரட்சிகள் படைப்போம்



விதியோரத்தில்
நிற்பதை
தவிர்த்தோம்
பள்ளிப் படிப்பை
பாதியிலே நிறுத்தி
அகப்பைகளை
கையில் ஏந்தினோம்
உணவுக்காக
மட்டும்
வாய் திறந்து
அடக்கப்பட்டு
அடிமைப்பட்டு
கிடந்தோம்
தாலிக்கயிறுகளை
தூக்குக் கயிறாய்
மாட்டிக்கொண்டு
வாழ்க்கையிலே
தினமும் செத்தோம்
காம நரிகள்
எம் உடல்களை
சுவைத்திடவே
கண்ணீரோடு
சோர்ந்தோம்
நாலடி சுவருக்குள்ளே
நாம்படும் வேதனைகளை
உலகுக்கு உரைத்திடவே
மறந்தோம்
வதைகளும்
ஆக்கிரமிப்புக்களும்
எம்மை வாட்டி
வதைத்திடவே
ஒரு மூலையிலே
முக்காடிட்டு
கிடந்தோம்
எமது நிலைகள்
யாருக்கும் புரியவில்லை
எமது தலைகள்
குனிவதையே
எல்லோரும்
இலக்காக
கண் வைத்தனர்
அடிமைப்பட்டு
வாழ்ந்த இனம்
வீராப்புடன்
புறப்படுவது போல்
நாமும் துளிர்பெற்றோம்
மனதினிலே
துணிவுடன் போராடினோம்
மறுக்கப்பட்ட சுதந்திரம்
கிடைக்க
அடிமைத்தனங்கள்
அறுத்தன
எமது குரல்கள்
எங்குமே ஒலித்தது
புரட்சிப் பெண்கள் என்ற
புது நாமம் கிடைத்தது.

வே.வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணியூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி

**வாழ்க்கையில் நீங்கள் எடுக்கக்கூடிய மிகப் பெரிய தீர்மானம், குழந்தைகள் வேண்டுமா, வேண்டாமா என்பது தான். இந்தத் தீர்மானம் நீங்கள் வாழ்க்கைத் துணைவரின் பார்வையில் மட்டும் அமையாமல், வேறு பல காரணிகளும் இந்த முடிவை எடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.**




***உள்ளுணர்வு மட்டுமா :-*** குழந்தை வேண்டுமா, வேண்டாமா என நாம் முன் கூட்டியே திட்டமிடுகிறோம். அது இயல்பானது தான். அவ்வாறு குடும்பத்தை அமைத்துக் கொள்ளும்போது அதனால் ஏற்படும் சாதக பாதகங்களையும், புதிதாக ஏற்படும் செலவினங்கள் குறித்தும் யோசித்துக் கொள்ள வேண்டும்.

***பெற்றோர்கள் வற்புறுத்துகிறார்களா? :-*** சில சமயங்களில் உங்கள் பெற்றோர்கள் தாத்தா-பாட்டி ஆக வேண்டுமென்ற ஆசையால் உங்களுக்கு அழுத்தம் கொடுப்பார்கள். அவர்களுடைய ஆசைக்காக நீங்கள் ஏதும் செய்யாதீர்கள். உங்கள் விருப்பம் என்பதுதான் முக்கியம். நீங்கள் குழந்தை பெற்றுத் தான் ஆக வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தினால், குழந்தை பிறந்தால் என்ன செய்வீர்கள் என்று கேளுங்கள்.

***வேலையிலிருந்து தற்காலிகமாக நிற்பதற்குத் தயாரா? :-*** குழந்தை பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள் என்றால், பேறுகால விடுமுறை எடுத்தாக வேண்டும். குழந்தை பிறந்த பின்னர் முழு நேர வேலைக்குப் போகாமல், பகுதி நேர வேலைக்குப் போவதென்று கூடச் சிலர் முடிவெடுப்பார்கள். குழந்தை பெற்றுக்கொள்வதென்பது உங்கள் வாழ்க்கைத் திட்டத்தில் எந்த அளவுக்குப் பொருந்திவரும் என்று திட்டமிடுங்கள்.

***குழந்தையைத் தங்களால் நன்றாக வளர்க்க முடியுமா? :-*** குழந்தை வளர்ப்பு என்பது செலவு மிகுந்தது. அத்தகைய செலவுகளை எவ்வாறு சமாளிக்கப் போகிறீர்கள் எனத் திட்டமிட வேண்டும். போதுமான அளவு சேமித்த பிறகும் குழந்தை பெற்றுக்கொள்ளலாம். அல்லது வரும் செலவுகளைப் பார்த்துக் கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கலாம். அது உங்கள் கையில்தான் இருக்கிறது.

***தனி அறை இருக்கிறதா? :-*** உங்கள் வீடு குழந்தைகளுக்கு ஏற்றதா? ஒரு படுக்கையறை கொண்ட வீடாக இருந்தால், இரண்டு படுக்கையறை கொண்ட வீட்டுக்கு மாறத் திட்டமிடுவது நல்லது. உங்கள் வீட்டருகே பள்ளி வசதிகள் உள்ளனவா என்பதையும் பார்க்க வேண்டும்.

***உங்கள் உறவு எவ்வளவு வலுவானது? :-*** சில பேர் விரிசல் விழுந்து விட்ட தங்கள் உறவை மேம்படுத்துவதற்காகக் குழந்தை ஒன்றைப் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் பல சமயங்களில் நிலைமை சீரடையாது. அதனால் குழந்தை பெற்றுக்கொள்ளும் முன், இன்னும் 20 வருடங்களுக்கு நம் உறவு வலுவாக இருக்குமா என்று யோசித்துக் கொள்ள வேண்டும். ஆனால் இது கடினமான கேள்வி.

***இது எளிதானதா? :-*** கர்ப்பம் தரிப்பது என்பது சிலருக்கு எளிதாக இருக்கும். சிலருக்குக் கடினமானதாக இருக்கும். அதனால் குழந்தை பிறக்கத் தாமதமானால் அதற்காகப் பதட்டமடையக் கூடாது. பொறுமையாகக் காத்திருக்க வேண்டும்.

***மாற்றம் நல்லதா? :-*** நீங்கள் வாழ்க்கையை நன்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், நல்ல வேலை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், மிகுந்த அலுவல் கொண்டவராக இருக்கிறீர்கள் என்றால், குழந்தை பிறப்பு நீங்கள் நினைப்பதைவிடச் சில மாற்றத்தை ஏற்படுத்தும். அதற்காகக் குழந்தை பெற்றுக்கொள்ளாமல் இருப்பது சுயநலம். கண்டிப்பாகக் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

***இரட்டைக் குழந்தை :-*** உங்கள் பெற்றோர்களில் ஒருவர் இரட்டையாக இருந்தால் உங்களுக்கும் இரட்டைக் குழந்தை பிறக்க வாய்ப்பிருக்கிறது. சில நேரங்களில் கருத்தரிக்கும் சிகிச்சைகளினால் இரட்டைக் குழந்தைகள் பெறும் வாய்ப்பு உருவாகும். ஒரு குழந்தை எனத் திட்டமிடும் போது, இரண்டு குழந்தைகள் பிறந்தால் என்ன செய்வீர்கள்?

***மரபணுப் பிரச்சினை :-*** மரபணுப் பிரச்சினையால் சிலர் பெற்றோர் ஆக முடியாமல் போவார்கள். அது போன்று உங்களுக்கு இருந்தால் மருத்துவ ஆலோசனையை நாடுவது நல்லது.



# அப்பா

எல்லா
அப்பாக்களையும்
போல் நீயும்
இருந்திருந்தால்
என் தாத்தாவும்
பாட்டியும்
இந்நேரம்
முதிரியில்
மூச்சோடு
இருந்திருப்பார்கள்!

அப்பா!
எல்லா
அப்பாக்களையும்
போல் நீயும்
இருந்திருந்தால்
என் அக்கா
அமெரிக்காவிலும்

என் அண்ணன்
கனடாவிலும்
நான்
இலண்டனிலும்
சொகுசாகப்
படித்துக்
கொண்டிருப்போம்

என் அப்பாவா நீ
இல்லையப்பா
நீ... நீ...நீ ...
எங்கள் அப்பா!

எங்கள் என்பது...
அக்கா அண்ணன்
நான் மட்டும்
இல்லை!

எங்கள் என்பது ...
செஞ்சோலை
காந்தரூபன்
செல்லங்கள்
மட்டும் இல்லை!

எங்கள் என்பது...
உலகெங்கிலும்
உள்ள என் வயது
நெருங்கிய
என் அண்ணன்கள்
என் அக்காள்கள்
என் தங்கைகள்
என் தம்பிகள்
அனைவருக்குமானது!

ஆம் ...அப்பா!
நீ எங்கள்
அனைவருக்குமான
ஆண் தாய்
அப்பா!
அதனால்தான்
சொல்கிறேன் ...

நான் மாணவனாக
இருந்திருந்தால்
என் மார்பில்
மதிப்பெண்களுக்கான
பதக்கங்கள்
...
நான்

மானமுள்ள
மகனாய்
இருந்ததால்தானே
அப்பா
என் மார்பில்
இத்தனை
விழுப்புண்கள்
பார்க்கிறாய்!

சிங்கள வீரன் ஒருவரது
மனைவியின்
வயிற்றில்
வளர்ந்த
கருவுக்கும்
கூட
கருணை காட்டிய
அப்பா!

உன் பிள்ளை
உலக
அறமன்றத்துக்கு
முன்.
ஒரே ஒரு
கேள்வி
கேட்கிறேன்!

பன்னிரண்டு
வயது பாலகன்
துப்பாக்கி
தூக்கினால்

அது
போர்க் குற்றம்!

பன்னிரண்டு
வயது
பாலகன் மீது
துப்பாக்கியால்
சுட்டால்...
இது யார் குற்றம்?

என்னைச் சுட்ட
துப்பாக்கியில்
எவர் எவர்
கைரேகைகள்!

உலக
அறமன்றமே!
உன்
மனச் சாட்சியின்
கதவுகளைத்
தட்டித்
திறக்க

உலகெங்கிலுமுள்ள
பாலச்
சந்திரர்கள்
அதோ
பதாகைகளோடு
வருகிறார்கள்!

பதில்
சொல்லுங்கள்!....



கவிஞர் [illegible]
சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னிகரற்ற தவிலிசைக் கலைஞர்

# லயஞானகலாமணி செல்வநாயகி

43

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

■ வயாவிளான் தவமைந்தன்

எவருக்கு எது தெரியாதோ அவர் அதைப் பற்றிப் பேசுவார், எழுதுவார், கற்பிப்பார், கச்சேரியும் வைப்பார் என்பதே யாழ்ப்பாணத்தின் தற்போதைய கலைத்துறையினரின் கையறு நிலையாகும். அதாவது சங்கீதம் தெரியாதவர் இசை பற்றி அறிக்கை விடுதல், தாளலயம் என்றால் என்னவென்று தெரியாதவர் கணக்கு வழக்குப் பற்றிய ஆய்வை நெறிப்படுத்துதல், நவரச அபிநய நட்டுவாங்க லயத்திறன் அற்றவர் நான் கலைமாமணி பத்மா சுப்பிரமணியத்தின் மாணவி என்று கூச்சமின்றிக் கூறுதல் போன்ற பொறுப்பற்ற செயல்கள் எம்மிடையே அதிகரித்து வருகின்றன.

எனினும் சொந்தத் திறமையோடு தமது கடின உழைப்பால் இசைத்துறையில் பிரகாசிக்கின்ற சில கலைஞர்களையும் நாம் யாழ்ப்பாணத்திலே அரிதாகக் காணலாம். ஐந்து பிள்ளைகளின் தாயாக இருந்தபோதும் தனது குடும்பச் சுமைகளோடு தவில் எனும் தமிழர் கருவியையும் தனது மடியிலே தாங்கித் தோளிலே சுமந்து கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக மங்கல இசை மங்கையாக ஆலயங்களிலும் தமிழர்களின் பண்பாட்டுச் சடங்குகளிலும் தாளலய ஜதி மழை பொழிந்து வருபவர் லயஞானக் கலாமணி திருமதி செல்வநாயகி உதயகுமார்.

மறைந்த கோபால் - முத்துலட்சுமி தம்பதியின் மகளாக 02.08.1963இல் கல்வியங்காட்டில் இவர் பிறந்தார். யாழ்.இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்ற இவர் மங்கல இசையைத் தொழிலாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்தமையால் எட்டாவது வயதிலேயே தவில் இசையைத் தனது தாய் மாமனாகிய தவில்மேதை ச.முருகையாவிடம் கற்று பன்னிரண்டாவது வயதிலேயே அரங்கேற்றம் கண்டார். இதைவிட சொர்ணலிங்கம், முருகானந்தம் போன்ற தவில் வித்துவான்களிடமும் தவில் இசையைக் கற்றுக் கொண்டார்.

நாதஸ்வரக் கலைஞராக அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்த இவரது தாயார் முத்துலட்சுமி, சகோதரி தையல்நாயகி போன்றோருடன் தவில் கலைஞராக இருந்த இவரது சிறிய தாயார் இலட்சுமியுடன் இணைந்து இவரும் தவில் வாசித்து நல்லதோர் மங்கல இசைக் குழுவாக இயங்கி வந்தனர். நான்கு சாதனைப் பெண்களாக மேடைகளை அணி செய்த இந்த மங்கல இசைக் குழுவானது தமிழ் மக்களின் பேரபிமானத்தைப் பெற்றுக் கொண்டதுடன் ஈழத்தின் பகுதிகள் அனைத்திலும் கால்பதித்துப் பெயர் பெற்று வந்தது.

தவில் கலைஞர் ந.உதயகுமார் என்பவரைத் திருமணம் செய்து கொண்ட இவர் தனது கணவருடன் இணைந்து பல இசை அரங்குகளில் தனது தனித்துவங்களை நிலைநாட்டி வந்ததுடன் என்.ஆர்.சின்னராசா, கே.ஆர்.புண்ணியமூர்த்தி, தெ.உதயசங்கர், சி.சுதா, சி.ரவி போன்ற தவில் மேதைகளுடனும் என்.கே.பத்மநாதன், எம்.பி.பாலகிருஷ்ணன், மூளாய் பாலகிருஷ்ணன், கே.எம்.பஞ்சாபிகேசன், எம்.பி.நாகேந்திரன், வி.கே.கானமூர்த்தி, வி.கே.பஞ்சமூர்த்தி போன்ற நாதஸ்வரக் கலைஞர்களுடனும் இணைந்து பல ஆண்டுகளாக இசைப்பணியாற்றி வந்தார்.

ஐந்து பிள்ளைகளின் தாயான இவர் இல்வாழ்விலும் கலைவாழ்விலும் சிறப்படைந்து விளங்குகின்றமை போற்றுதற்குரியதாகும். தனது பிள்ளைகளையும் மங்கல இசைக் கலைஞர்களாக உருவாக்கியிருக்கின்றமையும் தற்போது குடும்பத்தினர் அனைவரும் இசையாற்றுகையாளர்களாக இருக்கின்றமையும் போற்றப்பட வேண்டியவைகள் ஆகும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு தடவைகள் சுவிஸ் நாட்டுக்கு அழைக்கப்பட்ட இவர் அங்கு பல மாதங்கள் தங்கியிருந்து தனது சகோதரியான தையல்நாயகியுடன் இணைந்து பல இடங்களில் மங்கல இசைக் கச்சேரிகளை நிகழ்த்தி ஈழத்துப் பெண் கலைஞர்களின் புகழை வானுயரக் கொண்டு சென்று அங்கு வாழும் புலம் பெயர் தமிழர்களின் நிலையான அன்பையும் மதிப்பையும் பெற்று பாராட்டப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தனது குழந்தைப் பராமரிப்புப் பணிகளை மாணவர்களிடம் ஒப்படைத்து விட்டுத் தனது அழகிலும் ஒப்பனையிலும் மட்டும் கவனம் செலுத்தி கற்பித்தலுக்கான இடங்களின் புனிதத்தைப் பேணத் தவறியும் அரசபணத்தில் ஆடம்பரங்களை ஆனந்தமாகத் தரிசனம் செய்தும் வாழுகின்ற பெண்கள் போல் அல்லாமல் மங்கல இசைத்துறையில் புகழ் பெற்று விளங்கும் எண்ணற்ற ஆண் கலைஞர்களின் நடுவே எந்த வகையிலும் சளைத்து விடாத பெண் கலைஞராக உடல், உள வலிமையோடு பல விதமான சவால்களைக் கடந்து தவில் எனும் கருவியை மிக இலாவகமாக வாசித்து வரும் இவர் தனது கருத்துக்களை இவ்வாறு குறிப்பிடுகின்றார்.


"உங்கள் சங்கீதம் இங்கே வேண்டாம், சினிமாப் பாடல்களை மட்டுமே வாசியுங்கள் என்று தற்காலத்தில் திருவிழா உபயகாரர்கள் எங்களிடம் கேட்கின்றனர். வேறு வழியின்றி நாமும் சினிமாப் பாடல்களையே வாசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகின்றது. சினிமாப்



பாட்டை வாசிக்க மாட்டோம் என்று எவராவது சொன்னால் தொழில் இல்லாமல் இருக்க வேண்டிய சூழ்நிலையே எமது கலைஞர்களுக்கு ஏற்படும் என்பது எனது கருத்தாகும். காலம் அப்படி மாறி விட்டது. தென்னிந்தியத் திரைப்படப் பாடல்களை வாசிக்காமல் சங்கீதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அந்தக் குழுவை சரியில்லாத குழு என்று முத்திரை பதித்து விடுவார்கள். அதனால் எல்லா நிலையினரையும் அனுசரித்துப் போக வேண்டிய தேவை எமது கலைஞர்களிற்கு இருப்பதை மறுக்க முடியவில்லை. இதனால் எமது மரபு வழியான இசைக் கலையானது அழிந்து விடுமோ என்னும் கவலையும் என் போன்ற கலைஞர்களுக்கு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. விரிவான இராக ஆலாபனை, நீண்ட நேரத் தனியாவர்த்தனம், கனதியான உருப்படி போன்ற இசைப்பகுதிகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அத்துடன் தாளவாத்தியங்களுக்கான கணக்கு முறைமை, குரலிசைக்கான லயக்கட்டுமான வழி முறைமை என்பவற்றின் வேறுபாடுகளை உணர்ந்து சுருதியுடன் பாடத் தெரிந்த ஒருவரே வாய்ப்பாட்டுக் கணக்கு வழக்கு நெறிமுறைகளைக் கற்பிக்கவும் வேண்டும்" எனத் தனது கருத்துக்களை ஓசை குன்றாமல் கூறுகின்றார் தவிலிசைச் செல்வி உ.செல்வநாயகி.

உதயனின் "சூரியகாந்தியில்" உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.

உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி:
சூரியகாந்தி - உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விருக்கும் வரை வள்ளுவம்

செல்வரேகா அஜந்தகுமார்
உதவி விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

1
தமிழின்பம் பருகுவோம்

### திருக்குறள் ஓர் அறிமுகம்

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் சிறப்பிக்கும் அளவுக்கு திருவள்ளுவரின் திருக்குறள் காலத்தால் அழியாத இலக்கியமாக நிலை பெற்றுள்ளது. உலகப் பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வ நூல் என்று பல சிறப்புப் பெயர்களைக் கொண்டது. 9 இயல்களையும் 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டது. 42194 எழுத்துக்களால் உருப்பெற்றது குறளெனும் காப்பியம்.

பாயிரத்தில் 4 அதிகாரங்கள், அறத்துப்பாலில் 34 அதிகாரங்கள், பொருட்பாலில் 70 அதிகாரங்கள், காமத்துப்பாலில் 25 அதிகாரங்கள் என்று அதிகாரங்கள் அமைந்துள்ளன.

தமிழிலக்கிய வரலாற்றிலேயே வாழ்வியலைப் பிழிந்து இலக்கியம் கண்ட பெருமை வள்ளுவரையே சாரும். உறுதிப் பொருள்கள் நான்கினுள் முதல் மூன்றும் மண்ணுலக வாழ்வு பற்றியன. மண்ணுலக வாழ்வு என்பது உலக பந்தமாகிய குடும்பம் பற்றியது. இதனையே வள்ளுவர் இல்லறம் என்னும் சொல்லால் மூலம் புலப்படுத்திச் செல்கின்றார்.

### வள்ளுவர் கூறும் இல்லறம்

வள்ளுவர் அறத்துப்பாலினை பாயிரவியலோடு இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்காகப் பகுத்துக் கூறுகின்றார். துறவறத்துக்கு முதல் இல்லறம் இடம்பெற்றமைக்கு பரிமேலழகர் உரைப்பாயிரத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். பொது இயல்பு பற்றி இல்லறம் துறவறம் என இரு நிலையால் கூறப்பட்டது.




அவற்றுள் இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண் நின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடும் செய்யப்படுவது ஆதலின், அதை முதற்கண் கூறுவான்.

துறவறத்திலும் இல்லறமே போற்றப்பட்டது என்பதனாலேயே முதற்கண் கூறினார் என்கின்றார்.

வள்ளுவர் இல்லறம் என்பதற்குள் கணவனையும் கற்புடை மனைவியையும் புதல்வரையும் மட்டும் குறுக்கிவிடாமல் அவர்களின் சமூக ஊடாட்டத்தை 'ஒப்புரவு அறிதல்' வரையான பரவலையும் அதற்குத் தேவையான பண்புகளையும் தகுதிகளையும் பேசுகின்றார்.

### இல்லறத்துள் வள்ளுவர் பேசும் பொருள்கள்

இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், புதல்வரைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, பிறனில் விழையாமை, பொறை உடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை, தீவினை அச்சம், ஒப்புரவு அறிதல், ஈகை, புகழ் என்று 20 அதிகாரங்களில் வள்ளுவர் இல்லறவியலைப் பேசியுள்ளார். இவையெல்லாம் தனிமனிதனாகவும் கற்புடைய பெண்ணோடு இணைந்து குடும்பமாக வாழ்வதற்கானவை மாத்திரமன்றி குடும்பம் சமூகத்துடன் கொள்ளும் உறவினையும் விரித்துப் பேசுகின்றது. இல்வாழ்க்கை முதல் புகழ் ஈறாகவுள்ள இல்லறவியலில் புகழ் அதிகாரத்துக்கான விளக்கத்தைப் பரிமேலழகர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

இல்வாழ்க்கை முதல் ஈகை ஈறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தில் வழுவாதார்க்கு இம்மைப் பயனாகிய இவ்வுலகின் கண் நிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி இது.

இதன் மூலம் தனிமனித ஒழுக்கம் குடும்ப வரையறை என்பவற்றின் ஊடான செம்மைப் பயணம் உலகளாவிய சூழலுக்கு விரித்துச் செல்லும் தளத்தை வள்ளுவர் நிர்மாணிக்க விழைவதைக் காண்கின்றோம். வள்ளுவர் உருவாக்கும் இல்லறம் ஒரு சமூக நிறுவனம். தன்னோடு குறுகிவிடாமல் மனிதனை பிறருக்காக வாழவைக்கும் உணர்வினை உண்டாக்குகின்றது.

### இல்லறம் விளக்கும் சிறப்பும்

கற்புடையாளோடு இருந்து இன்பம் துய்த்துவரும் அறவாழ்க் கையின் இன்றியமையாமையையும் சிறப்பையும் எடுத்துக் கூறுவதுதான் இல்வாழ்க்கை என்று யாவரும்,

"இல்வாழ்க்கை என்பது குடும்பத்துக்காக வாழும் வாழ்க்கை எனவும் உலகுக்காக வாழும் வாழ்க்கை எனவும் இரு திறப்படும். முதலாவது பின்னதின் வளர்ச்சிக்கு வழிகாட்டி" என்று வி. கல்யாண சுந்தரனாரும் கூறியுள்ளனர்.

வி.கல்யாணசுந்தரனார் கூறும் உலகுக்காக வாழ்க்கைக்கான துறவின் வழிகாட்டி என்பதன் மூலம் இல்லறத்தின் பெருமை இன்னும் வெளிச்சமாவதைக் காணலாம்.

### துறவறத்திலும் சிறந்தது இல்லறம்

அன்பின் தோற்றுவாய் இல்லறமாக மட்டுமே இருக்க முடியும் என்று வள்ளுவர் உறுதியாக நம்பினார். அதன் காரணமாகவே இல்லறவியலை முன்பும் துறவறவியலைப் பின்பும் வைத்தார். உண்மையில் இல்வாழ்க்கை தான் உலகத்தை நேசிக்கக் கற்றுத் தருகின்றது.

ஒருவன் ஈட்டும் பொருளானது அறத்திற்
(வளரும்)



# அம்மாவின் சேலைகள்

அம்மா
உனது நினைவுகளைப்
போலவே
உன் சேலை பற்றிய
ஞாபகங்களும்
மறக்க முடியாதவை

உன்னோடான
பாசப்பொழுதுகளை
கண்முன் கொண்டு வரும்
உன் சேலை பற்றிய
ஞாபகங்கள்

மஞ்சளிலே நாப்பூப் பூப்போட்ட
சேலையொன்று
வைத்திருந்தாய்
அந்த சேலை உனக்கழகா
உன்னால் சேலை அழகாயிற்றா
நான் எண்ணியதுண்டு

நான் மழையில் நனைந்து
வரும்போது
ஓடி வந்து சேலைத்
தலைப்பால்
தலைதுவட்டி விடுவாய்
அந்த சேலையின் வாசம்
பாசம் சேர்த்து வரும்
குளிர் அன்பு சூடாகி
மனம் முழுதும் பரவும்

ஒவ்வொரு மழைக்காலமும்
அந்த நினைவெள்ளி
வருகிறது
பச்சையிலே
பூப்போட்ட சேலையொன்று
உனக்கிருந்தது
தோய்த்து கொடியிலே
ஆடும் அதன் அழகு
இப்போதும் மனதில்
ஆடுகிறது

முன்பெல்லாம் எனக்கு
இரவு படுக்கையில்
மெத்தையாவது உனது
சேலைகள்தான்
அந்த பருத்தி சேலையின்
சூடும் மென்மையும்
தருகின்ற தூக்கம்
ம்- உன்னோடு போயின
அந்த நாள்கள்
அதற்குப் பின்
விலையுயர்ந்த மெத்தைகள்
கூடத்தரவில்லை
அந்தப் பிரியமான தூக்கம்

இன்னுமொரு கத்தரிப்பூ
சேலை
உன்னிடமிருந்தது
அநேகமாக
கோயில்களுக்கு கட்டுவாய்
பக்தி சேர்ந்த தெய்வீக
அழகை
உனக்குத் தந்தது
அச்சேலை


நான் உனக்கு
சேலை வாங்கித் தந்ததாய்
ஞாபகமில்லை
அண்ணன் அடிக்கடி
வாங்கித் தருவார்
அது உனக்கு
இரட்டிப்பு சந்தோஷம்
தம்பி வாங்கித்தந்ததாய்
எல்லோருக்கும் காட்டுவாய்
இப்போதும் புடவைக்
கடைகளுக்குச் சென்றால்
உனது சேலைகளை ஒத்த
சேலைகளை காணும்போது
மனம் உன்னை சுற்றி
அலைகிறது

சேலைகள் நூலினால்
மட்டும்
ஆக்கப்படுவதில்லை
அன்பினாலும்
நெய்யப்படுகின்றன.

வேலணையூர் தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 261



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. இலங்கையின் புனித தலங்களில் ஒன்று
6. மரம்
7. சோறுடன் சேர்த்து உண்பது
8. இது சிற்றுயிர்
9. மடல்
11. வெட்டுவது இதனால்
12. விருந்தினர்
13. உரியது
15. தாய்
17. இது வந்தால் குடல் பெருக்கம் என்பர்
18. வடக்கின் பெருநிலம்
19. வேள்வி
20. ஒரு திசையைக் குறிக்கும் சுருக்கச் சொல்
21. சாப்பிடு
22. தாய்- தந்தை - பிள்ளைகள் ஒன்று சேர்ந்த குழுமம்

### மேலிருந்து கீழ்

1. ஒரு நாட்டிய வகை
2. களவு செய்யும் பெண்
3. கறுப்பு நிறத் தோட்டி
4. ஆடு, குதிரை போன்றவற்றின் பெண் இனம்
5. மண் காய்ந்து காற்று வீசக் கிளம்புவது
8. இவன் பலவான்
10. விவாதம்
11. வேகம்
12. ஆறாவது ஒருமை உருபு
13. உமாதேவியின் பிதா
14. படி
16. நெல் முதலிய மணி வகைகள்
17. நோய்
18. தேர் இழுக்கும் கயிறு.
20. காயத்தின் அடையாளம்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 259 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அகவல் (4) கழுகு (7) முதிர் (8) துருத்தி (9) தர்க்கம் (11) தரை (12) கற்பிதம் (14) நம்ப (16) அலி (17) கர்ப்பம் (18) சதகம் (20) தில்லை (21) துன்பம்

**மேலிருந்து கீழ்**

(1) அமுதம் (2) கதிர் (3) வர்க்கம் (4) கரு (5) மூத்தம் (6) குதிரை (8) தும்பி (10) கற்பகம் (13) தகப்பன் (14) நலிதல் (15) சிம்மம் (16) அசதி (19) கலை

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/- ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 261**
நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (28.04.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.261 இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 28.04.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 258 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
சி.பாவரசன்,
யா/ அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை, அராலி.

**2 ஆம் பரிசு**
கா.பொ.இ.குலசிங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

**3 ஆம் பரிசு**
சி.எழில்வேள்,
அரசாங்க வைத்தியசாலை, முழங்காவில்.

**4 ஆம் பரிசு**
த.ஜீவரேகா,
'ஜீவகரி' சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

**5 ஆம் பரிசு**
வே.மார்க்கண்டு,
இல.07/30 வீட்டுத்திட்டம், உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.

**பாராட்டுப் பெறுவோர்**

என்.ஜெயந்தினி,
இல.07, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.


ர.ரிதா,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

து.கிறிஸ்ரபெல்,
இல.66, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் அலுவலகத்தால் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*



## ஏழைகளின் ஆவி



அட்சய பாத்திரத்தை
அறைக்குள்
பூட்டிவிட்டு
எம் பிச்சைப் பாத்திரங்களை
ஏன் சுரண்டுகிறீர்கள் ?

அதிகாரக் கதிரையாளர்களே
இந்த ஏழைகளை
விறகுகளாக்கவா
உங்கள் அடுப்பங்கரையின்
வாய்கள்
ஆசைப்படுகின்றன.

வலுக்கட்டாயமாக
வாழப்பழகிக் கொள்கிறோம்
உங்கள் வலிமைகளை
எங்கள் வயிறுகளில்
கூராக்குகிறீர்கள்

எங்கள் கண்கள்
ஏழைக் கண்கள்
உணவுக்கு மீறிய
கனவுகள் காண்பதில்லை
அந்தக் கனவுக்குள்ளும்
சிலுவை தருகிறீர்கள்

நீங்கள் நெசவு செய்யும்
இந்த ஆட்சி ஆடை
எங்கள் வறுமைக்
குளிருக்கு உதவாது

ஒரு நாள்
ஏகாதிபத்தியத்தில்
சிம்மாசன ஆணிகளை
எங்கள் ஆவிகள்
பிடுங்கும்

பிரமாண்டமிக்க
உங்கள் மாளிகை
ஏழை ஆவிகளின்
கல்லறைகளாகும்

நாங்கள்
வறுமையால் இறந்த
மனிதர்கள்
உங்கள் குருதியிலும்
வேர்வையிலும்
எங்கள் ஆட்சி
துளிர்க்கும் இனி

செ.மோகன்ராஜ், நெடுந்தீவு 12

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

46

பா.உண்மை

ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்து ஒரு பழைய நண்பர் லிங்கனைப் பார்க்க வெள்ளை மாளிகைக்கு வந்திருந்தார். அறை வாசலுக்கே வந்து அவரைக் கைப்பிடித்து அழைத்து போனார் லிங்கன்.

அந்த நண்பர் தன் இருக்கையில் அமருவதற்கு முன், 'வணக்கம் மிஸ்டர் பிரஸிடெண்ட்!' என்றார். லிங்கன் அவரை ஒருகணம் உற்றுப் பார்த்தார்.

'ஸ்பிரிங்ஃபீல்டில் இருந்த போது நீங்கள் என்னை எப்படி அழைப்பீர்கள்?'

அந்த நண்பர் தயக்கத்தோடு சொன்னார். ஏப்! இல்லாவிட்டால் லிங்கன் என்று கூப்பிடுவேன்.

"பிறகு இப்போது மட்டும் ஏன் என்னை 'மிஸ்டர் பிரஸிடெண்ட்' என்று கூப்பிடுகிறீர்கள்? எப்போதும் போல 'லிங்கன்' என்றே கூப்பிடுங்கள். அப்படிக் கூப்பிடுவதுதான் எனக்குப் பிடிக்கும்.'

வில்லி வாலஸ் லிங்கன். ஆபிரஹாம் லிங்கனின் மூன்றாவது குழந்தை. லிங்கன் எல்லாக் குழந்தைகள் மீதும் பாசம் வைத்திருந்தாலும் வில்லியின் மீது கூடுதல் வாஞ்சை அவருக்கு. மேரி டாட்டின் சகோதரிகளில் ஒருவரான ஃபிரான்ஸிஸ் என்பவரை மணந்தவரின் பெயரே வில்லி வாலஸ். அந்தப் பெயரைத்தான் குழந்தைக்கு வைத்திருந்தார்கள்.

வில்லி கிட்டத்தட்ட ஆபிரஹாம் லிங்கனைப் போலவே இருந்தான். உருவம், நடை உடை பாவனை எல்லாமே லிங்கனை ஒத்திருந்தன. அப்பாவைப் போலவே வில்லிக்கும் படிப்பது மிகவும் பிடிக்கும். வில்லிக்குக் கவிதை எழுதுவதிலும் படம் வரைவதிலும் ஆர்வம் இருந்தது. கணக்கில் புலி.

1859-இல் லிங்கன் சிகாகோவுக்கு போனபோது, வில்லியை மட்டும் உடன் அழைத்துப் போயிருந்தார். அந்தப் பயணம் வில்லிக்கு மறக்க முடியாத ஓர் அனுபவம். அந்தப் பயணத்தைப் பற்றி தன் நண்பன் ஹென்றி ரெமானுக்குக் கடிதம் கூட எழுதியிருக்கிறான் வில்லி.

லிங்கன் வெள்ளை மாளிகையில் குடியேறிய போது, வில்லிக்கும் அவனுடைய தம்பி டாடுக்கும் அந்தப் புதுச் சூழல் மிகவும் பிடித்திருந்தது. வெள்ளை மாளிகையில் இருந்த ஆடுகள், நாய்கள், எலிகள், குதிரைகள் எல்லாவற்றுடனும் அவர்களுடைய பொழுது இன்பமாகக் கழியும். அந்தச் சமயத்தில் சிறுவர்கள் மத்தியிலும் போர் தொடர்பான விளையாட்டுக்கள் தான் பிரபலமாக இருந்தன. வெள்ளை மாளிகையின் மொட்டை மாடியில் சிறிய பொம்மைக் கோட்டை கட்டி, வில்லி விளையாடுவான்.

லிங்கன் போர்முனைக்கு செல்லும் போதெல்லாம் வில்லியும் கூட வருவதாக அடம்பிடிப்பான். சில சந்தர்ப்பங்களில் லிங்கனும் அழைத்துப் போவார். அதேபோல, மருத்துவமனைகளில் இருக்கும் வீரர்களைப் பார்வையிடுவதற்காக, மேரி டாட் போகும்போது உடன் போவான். மேரி டாட் கொண்டு போகும் பழங்கள், புத்தகங்கள், பேப்பர்கள் ஆகியவற்றைத் தூக்க வில்லிக்கும் டாட்க்கும் இடையே சண்டை நடக்கும். பெரும்பாலும் வில்லிதான் அதில் ஜெயிப்பான்.

லிங்கன் தம் இரு பையன்களும் படிப்பதற்குத் தனியாக ஒரு ஆசிரியரை ஏற்பாடு செய்தார். தன் வயதுக்கு மீறிய முதிர்ச்சியோடு இருந்தான் வில்லி. பாடங்களைப் பார்த்தாலே டாட் வெறுத்து ஒதுங்க வில்லி விருப்பத்தோடு பாடங்களைப் படித்தான். வில்லிக்கு பிரமாதமான எதிர்காலம் இருக்கின்றது என்று லிங்கன் நம்பினார். அப்போதுதான் அது நடந்தது. வில்லிக்குத் திடீரென்று உடல் நலக்குறைவு ஏற்பட்டது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதிரியான உடல் நிலை. வெறும் காய்ச்சலாகத் தெரிந்தது நாளாக ஆக, அதிகமாகிக் கொண்டே போனது. மருத்துவர்கள் நெருப்புக்காய்ச்சல் என்றார்கள். மிகவும் சோர்ந்து போய், பலவீனமாகப் படுக்கையிலேயே கிடந்தான் வில்லி. இறுதியாக ஒரு வியாழக்கிழமை, 1862, பெப்ரவரி 20-ஆம் திகதி வில்லி இறந்து போனான் அப்போது லிங்கனுக்கு வெறும் பதினொரு வயது. அந்த இழப்பை யாரால் தாங்கிக் கொள்ள முடியும்?


ஒரு பக்கம் சோதனை மேல் சோதனையாக உள்நாட்டுப் போர், நிர்வாகச் சிக்கல்கள் என லிங்கன் போராடிக்கொண்டு இருந்த போது தான், வில்லியின் மரணம் நடந்தது. துடித்து அழுதார் லிங்கன். பிறகு மெதுவாகத் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டார்.

பாவம் அவன் இந்த பூமிக்கு மிகவும் நல்லவனாக இருந்தான். கடவுள் அவனைத் தன் வீட்டுக்குள் அழைத்துக்கொண்டார். அவன் சொர்க்கத்தில் மகிழ்ச்சியாக இருப்பான் என்பது எனக்குத் தெரியும். நாங்கள் அவனை மிகவும் விரும்பினோம். அவனுடைய இறப்பைத் தாங்கிக் கொள்வது என்பது கடினத்திலும் கடினம்' என்று சொன்னார் லிங்கன்.



(மீட்பர் வருவார்)

"ஒரு பக்கம் சோதனை மேல் சோதனையாக உள்நாட்டுப் போர், நிர்வாகச் சிக்கல்கள் என லிங்கன் போராடிக்கொண்டு இருந்த போதுதான், வில்லியின் மரணம் நடந்தது."



## கண்ணீரோடு கடைசி வரை....!

காவியம் படைப்போம் என்று
களமிறங்கி போராடினோர்- இன்று
காவிய நாயகர்களாக
அமைச்சர் பதவியோடு
அட்டகாசமாக சொல்கிறார்கள்
"காக்க வேண்டும்
சமாதானமாம்... "

அவர்களின்
ஆடம்பர வாழ்க்கை என்ன?
ஆனந்த ஆட்டமென்ன?
தளபதியாய் இருந்தவனுக்கும்
தயவான மன்னிப்பாம்
சந்தேகத்தில் பிடித்தவனுக்கோ
தடுப்புக் காவலே நிரந்தரமாம்
இது என்ன நியாயம்?
வால் பிடித்தவன் மனைவி
வாழாவெட்டியாகத்தானா?
உறவுகள் [illegible] இருந்தும்
உயிர் வாழப் பிடிக்கவில்லை

நீ இல்லாமல் நொடி கூட
உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை
ஆனாலும் நான்
உயிர் வாழ்கின்றேன்
ஏன் தெரியுமா? நீ இன்னும்
காணாமற் போனார் பட்டியலில்
இருப்பதால்தான்
என்றோ ஒருநாள் காண்பேன்
என்ற நம்பிக்கையில் தான்.

நான் வாழ நீ வேண்டும்
இல்லையேல்
நீ தந்த நினைவோடும்
கண்ணீர் என்னும் உறவோடும்
கடைசி வரையும் வாழ்வேன்..!

மு.சிவநிதி, கட்டுடை,
மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலங்குகளின் விநோதம்


எறும்புகள் தூங்குவதே இல்லை


முதலைகளால் நாக்கை வெளியே நீட்ட இயலாது



பட்டாம் பூச்சிகள் அதன் கால்களைக் கொண்டுதான் உணவை ருசிக்கின்றன


பச்சோந்தியின் நாக்கு அதன் உடலைவிட இருமடங்கு நீளமாக இருக்கும்


பனிக் கரடிகள் அனைத்தும் இடது கை வழக்க முடையவை


உலகளவில் பெரும்பான்மையாக விலங்குகளுக்கு மரணத்தைக் கொடுப்பது கொசு.


மரங்கொத்தி பறவையால் மரத்தை ஒரு நொடியில் 20 முறை தொடர்ந்து கொத்த முடியும்.


ஒரு நத்தையால் மூன்று ஆண்டுகள் வரை தூங்க முடியும்.


கரப்பான்பூச்சியால் ஒன்பது நாள்கள்வரை தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வாழ இயலும்.

## ஆசைப்படாதே



காசியை ஆண்ட பிரம்மதத்தனுக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். பிரம்மதத்தன் காசி நாட்டைத் தன் மூத்த மகனிடம் ஒப்படைத்து இளைய மகனை நாட்டின் சேனாதிபதியாக நியமித்தான். மன்னன் இறந்த பின் மூத்த மகனின் பட்டாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் நடந்தன. அப்போது அவன் "எனக்கு நாடாளும் ஆசை இல்லை. நாட்டை என் தம்பியே ஆளட்டும்" எனக் கூறி விட்டுப் போய் விட்டான்.

அவன் தலைநகரிலிருந்து வெகு தொலைவிலுள்ள ஒரு சிற்றரசனின் நாட்டிற்குப் போய் ஒரு பணக்காரனிடம் வேலையாளாக அமர்ந்து உழைத்துக் காலம் கழிக்கலானான். ஒரு முறை காசியிலிருந்து நிலங்களைப் பற்றி அறிய வந்த அதிகாரிகள் அந்தப் பணக்காரனின் ஊருக்கு வந்தார்கள். அங்கு தம் மன்னரின் மூத்த மகன் இருப்பதைக் கண்டு மரியாதை செலுத்தி வணங்கி நின்றார்கள்.

அதைக் கண்ட பணக்காரன் அந்த அரச குமாரனிடம் "காசி மன்னரான உங்கள் தம்பிக்குக் கடிதம் எழுதி எனக்கு விதிக்கப் படும் வரியை குறைக்கும்படி சொல்லுங்கள்" என வேண்டினான். மூத்த ராஜகுமாரனும் அவ்வாறே தன் தம்பிக்குக் கடிதம் எழுதி அந்தப் பணக்காரன் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தில் கணிசமான தொகையைக் குறைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டான். காசி மன்னனும் வரியைக் குறைத்தான். இது கண்டு அந்த கிராமத்திலுள்ள வேறு சிலரும் தமக்கும் காசி மன்னனிடம் சலுகை பெற்றுத் தருமாறு மூத்த ராஜகுமாரனிடம் வேண்டவே அவர்களது வேண்டுதல்களையும் ஏற்குமாறு அவன் தன் தம்பிக்குக் கடிதம் எழுதினான். அவர்களுக்கும் அவர்கள் வேண்டியது கிடைத்தது.

அதன் பின் அக் கிராமத்தவர்வரிப்பணத்தை அரசாங்க அதிகாரிகளிடம் கொடுக்காமல் மூத்த ராஜகுமாரனிடமே செலுத்தலாயினர். முதலில் அவர்கள் செலுத்திய பணத்தை ஏற்க மறுத்த அவன் பின்னர் அவற்றை ஏற்றான். அவன் மனம் மெதுவாக மாறலாயிற்று. மேலும் அவர்கள் தனக்கு செலுத்தும் வரிப் பணத்தைப் பார்த்ததும் அவன் மனத்தில் நாடாளும் ஆசை துளிர்க்க ஆரம்பித்தது. ஆனால் தானாக விட்டு வந்த நாட்டை மீண்டும் எப்படி அடைவது?

அதனால் அவன் ஒவ்வொரு சிற்றரசன் நாட்டையும் தன் வசப்படுத்திக் கொண்டு அதனைத் தன் தம்பிக்கும் அறிவித்துக் கொண்டே வந்தான். காசி மன்னனும் தன் அண்ணன் என்ற காரணத்தால் மூத்த ராஜகுமாரனின் செயலைக் கண்டிக்காமல் இருந்தான். முடிவில் மூத்த ராஜகுமாரனுக்கு காசியையும் பிடித்து விட வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது.

(தொடரும்)

## வாழ்க்கை என்பது ஒரு வட்டம்

வாழ்க்கை என்பது ஒரு
வரையப்படாத வட்டம் இங்கே
வசதியானவரிடம் வறியவன்
கைகட்டி வாழ்வதும்
முதலாளியிடம் பணிந்து
தொழிலாளி
வாழ்வதும், பணம் எனும்
நிழல் தேடி பலரும்
வாழும் வரை அலைவதும்
இன்பத்தையே நம் மனமது
விரும்புவதும், ஆனால் விதி
எனும் எதிரி துன்பத்தை
பரிசாகத் தருவதும், நிறைவேறாத
கனவுகள் கண்டு அவை
கைகூடா வேளையில் பலர்
கதைகள் முடிவதும்

மனிதனாய் அவதரித்தவன்
பூவுலகிலே அனுபவிக்கும்
கசப்பான அனுபவங்கள்

பீ.மதுசனா, தரம் 8,
யா/இளவாலைக் கன்னியர்
மடம் மகாவித்தியாலயம்.

## விடை தெரியுமா? 206

### உங்களுக்கும் பரிசுகள்

1. இரு குரவர் என அழைக்கப்படுபவர்கள் யார்?
2. மிகப் பெரிய முட்டையிடும் பறவை எது?
3. நவீன பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
4. விளக்கேந்திய பெருமாட்டி என அழைக்கப்படுபவர் யார்?
5. ஆறு கடலோடு கலக்கும் இடம் எது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?


தெரிந்தால் 20.04.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.


### விடைகள் 204


1. ஒட்டாவா
2. காற்று வேகமானி
3. போதகம்
4. மூங்கில்
5. காயம்

### வெற்றி பெற்றோர் விவரம் (204)

* இ.இலக்கியா, இல.14, குமாரபுரம், பரந்தன்
* அ. தனுஷ்யன், தரம் 6பி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
* இ.யோகித்தா, இல.14, குமாரபுரம், பரந்தன்


த.வைஸ்ணவி, தரம்-9, யா/ கொழும்புத்துறை இந்து ம.வி.


சு.ஆர்த்திகா, தரம்-9டி, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை


கு.திவ்வியா, தரம்-7, யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்


பா.தர்சன், தரம்-9, யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்


சு.அனிருத்தன், தரம்-2, மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

14.04.2013 முதல் 20.04.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- உங்களின் நல்ல செயல்களை, அன்புக்குரியவர்கள் பாராட்ட வேண்டும் என, எண்ணுவீர்கள். செலவுகளுக்கான பணவசதி திருப்திகரமாக இருக்கும். எதிரியிடம் விலகுவது நல்லது. இல்லறத்துணை அதிக அன்பு, பாசத்துடன் நடந்து உங்களுக்கு உறுதுணையாகச் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் புதிதாக வருகிற இடையூறைச் சரி செய்வதால் வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்துவதால், முக்கிய செலவுகளை எளிதாகச் சமாளிக்கலாம். மாணவர்கள், கவனமுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**இடபம்**- அன்புக்குரியவர்கள் உங்களிடம் உதவி கேட்டுப்பெறுவர். எவரிடமும் நிதானமுடன் பேசி மதிப்பு, மரியாதை பெறுவீர்கள். எதிர்மனப்பாங்குடன் செயற்பட்டவர், தன்குறை உணர்ந்து நட்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் செழித்து உபரி பணவரவு கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த சலுகைப்பயன் எளிதாக வந்து சேரும். மாணவர்கள், படிப்பு, தனித்திறன் வளர்ப்பில் முன்னேற்றம் காண்பர்.

**மிதுனம்**- உங்களின் மதி நுட்பம் நிறைந்த செயல்கள் நண்பர், உறவினர்களிடம் வரவேற்பைப் பெற்றுத்தரும். எதிரியால் வருகிற சிரமத்தை, மாற்று உபாயத்தால் சரி செய்வது அவசியம். இல்லறத்துணை கருத்து வேறுபாடு மனதுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் கூடுதல் முயற்சியினால் சராசரி நிலையைப் பாதுகாத்துக் கொள்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டங்களை மதித்து செயற்படுவர்.

**கடகம்**- புத்திரரிடம் விலையுயர்ந்த பொருள்களைப் பயன்படுத்த கொடுக்க வேண்டாம். பணக்கடன் தொந்தரவு, மனதை கஷ்டப்படுத்தும். இல்லறத்துணை ஆறுதல் மனப்பாங்குடன், உங்களுக்கு ஊக்கம் தருவர். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணிபுரியும் பெண்கள், பொறுப்புணர்வுடன் செயற்படுவதால் மட்டுமே, பணியில் குளறுபடி வராமல் தவிர்க்கலாம். மாணவர்கள், சாகச விளையாட்டில் ஈடுபடக்கூடாது.

**சிங்கம்**-உங்கள் வாழ்வின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவற்றை அறிந்து, சமயோசிதமாகச் சரி செய்வீர்கள். உடல் நல ஆரோக்கியம் பலமுடன் இருக்கும். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி, தாராள பணச்செலவில் மேற்கொள்வீர்கள். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வர். மாணவர்கள், பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்லக்கூடாது.

**கன்னி**-உங்களின் திட்டமிட்ட செயல் ஒன்றை, மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். குடும்ப உறுப்பினர், தகுந்த சமயத்தில் நினைவுபடுத்தி நிறைவேற்ற உதவுவர். உடல் நல ஆரோக்கியம் சீராக, தகுந்த சிகிச்சை பெறவும். இல்லறத்துணையின் கருத்தில் உள்ள நியாயங்களை மதித்துச் செயற்படுவதால், ஒற்றுமை சீராகும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு, உரிய பணவரவை பெற்றுத்தரும். மாணவர்கள், தகுந்த பயிற்சியால் சிறப்பான தேர்ச்சி பெறுவர்.

**துலாம்**- உங்களின் தகுதி, திறமைகளை வளர்த்து சமூகத்தில் அதிக அந்தஸ்து பெறுவீர்கள். உழைப்பின் மூலம், அதிக பணவரவு பெற உருவாகிற வாய்ப்பை, ஆர்வமுடன் பயன்படுத்துவீர்கள். பணியாளர்கள், அதிக வேலை வாய்ப்பு, தகுந்த சன்மானம் பெறுவர். பெண்கள், கணவரின் சம்மதம் இன்றி, பிறருக்காக எவ்வித பொறுப்பும் ஏற்கக் கூடாது. மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெற, புதிய பயிற்சி முறையைப் பின்பற்றுவர்.

**விருச்சிகம்**-நண்பர், உறவினர் சிலரின் செயல், தர்ம சங்கடமான சூழ்நிலையை உருவாக்கலாம். வாழ்வின் எதிர்கால நலன்களைக் கவனத்தில் கொண்டு செயற்படுவீர்கள். பணிகளைத் திட்டமிட்டபடி நிறைவேற்றுவதால், மனதில் தேவையற்ற பதற்றம் வராமல் தவிர்க்கலாம். இல்லறத்துணையின் நல்ல ஆலோசனை, மனதுக்கு உத்வேகம் தரும். உத்தியோகத்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி வேலை வாங்குவர். மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில், தகுந்த கவனம் தேவை.

**தனுசு** - உங்களின் லட்சியக் கனவை நிறைவேற்ற, புதிய வாய்ப்பு உருவாகும். அன்பு, நற்குணத்தால், சமூகத்தில் இனிய அனுபவம் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு விலகும். அரசியல்வாதிகளுக்கு, எதிர்பார்த்த பதவி கிடைக்க அனுகூலம் உண்டு. பெண்கள், வீட்டிற்கு வரும் உறவினர்களை, நன்கு உபசரித்து, குடும்பத்திற்கு பெருமை சேர்த்திடுவர். மாணவர்களின் படிப்புக்கான பணவசதி திருப்திகரமாக கிடைக்கும்.

**மகரம்**-சொந்த முயற்சியால் முக்கியமான பணி ஒன்றை நிறைவேற்றுவீர்கள். உங்களை அவமதிக்க முயற்சித்த சிலர் வியந்து விலகுவர். அரச உதவி கிடைப்பதில் தாமதம் இருக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவார். தொழில், வியாபார நடைமுறை சுமுகமாக இருக்கும். உயர் அதிகாரிகளுக்கு தாமதமான சலுகைப்பயன், எளிய முயற்சியால் கிடைக்கும்.

**கும்பம்** - உங்களிடம் நன்கு பழகியவர்களை, நம்பிக்கை குறைவானவராக எண்ணுகிற சூழ்நிலை ஏற்படலாம். முக்கியமான செயல்களை, நீங்களே பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவது நல்லது. புத்திரரின் சேர்க்கை, சகவாசம் அறிந்து வழி நடத்துவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கிற, அனுகூல தன்மைகளை அக்கறையுடன் பாதுகாத்துக் கொள்வது நல்லது. மாணவர்கள், சக மாணவர்களிடம் படிப்பு தவிர, ஏனைய விடயம்பற்றிப் பேச வேண்டாம்.

**மீனம்**- குடும்ப விடயங்களை, பிறரிடம் விவாதிக்க வேண்டாம். சிறிய பணி நிறைவேறுவதிலும் கூடுதல் முயற்சியும் கால அவகாசமும் தேவைப்படும். மன அமைதியைப் பாதுகாத்துக் கொள்வதால் சிரமம் வராமல் தவிர்க்கலாம். இளைய சகோதரர் உதவிகரமாக நடந்து கொள்வர். நிர் [illegible]கத்தின் காரணமாக, அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். இல்லறத்துணை, உங்க[illegible] கஷ்டம் நிவர்த்தியாக நல்ல ஆலோசனை வழங்குவர். மாணவர்கள், தகுந்த பயிற்சியால் திட்[illegible]மிட்ட தேர்ச்சியைப் பெறலாம்.



# அம்மா....

## அந்த நான்கு நாள்கள்

அகவை பல கடந்து
கால் பதித்தேன்
கனத்த நினைவுகளோடு
உயிரை உலுப்பிய ரணங்களையும்
உடலை சிலுப்பிய கணங்களையும்
என்
விடலை உடல் வியர்வையில் துளிர்த்த
வியத்தகு வீர நாள்களையும்
தாங்கிக் கொண்டு
தாயேயுன் மடி சேர்ந்தபோது
பொட்டிழந்து
பிரகாசமிழந்து நலிவுற்று
சுருங்கிய தோலும்
பெருகிய வெண்மயிரும்
தூரத்துப் பார்வை
தெரியாது போனாலும்
அடங்காத அன்போடு அருகிருந்து
பூரிப்போடு
பூத்த உன்
முத்தங்களின் முற்றுகைக்குள்
முடிசூடிக் கொண்டது
என் ஆத்மா...
உச்சி முகர்ந்த
உன் மடி சாய்ந்த போது
மிச்சமாய் இருந்த
கண்ணீர்த் துளிகளும்
உனக்காகவே
உதிர்ந்தபோது
பச்சிளம் பிள்ளையாக
பக்குவப்படுத்திக் கொண்டாயே
அம்மா...!
வீழ்ந்து போய்
விம்மிக் கிடந்த எனையணைத்து
நாட்டுக்காக போரிட்ட நீ
தோற்றுப் போனதாக நினைக்காதே
என்றளித்த ஆறுதல் பரிசு
தேற்றிக் கொண்டதம்மா
தீராத குறிக்கோளை
வற்றிப் போகாத கற்பகமே
உன் பாதங்களில்
ஒற்றியெடுத்து
உன் பிள்ளை கேட்கிறேன்
உனக்காக எத்தனை தடவையானாலும்
உயிர்க்கிறேன்
ஒற்றைத் தடவை கூட
என்னை விட்டு
சற்றேனும் போகாதே
அம்மா...
உற்றவனுமில்லை
உயிர்த் தோழமையுமில்லை

கவிஞர் த. பருத்தி:தாசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எங்களூர் பொங்கல்கள்'



## மாறிப்போகும் வழிபாட்டு மரபுகள்

**பசிய மரங்களால் நிறைந்த பூமி என்பதால் தென்மராட்சிப் பகுதிக்கு குழைக்காடு என்று பெயர். அந்தப் பகுதியின் மரபார்ந்த விடயங்கள் எமது பண்பாட்டுக்கு வலுச்சேர்ப்பவை. நாகரிகத்தில் அதிவேக உட் புகுதலோடு அத்தகைய மரபுகள் மெல்ல மெல்லத் தமது அடையாளங் களைத் தாமே தொலைக்கத் தொடங்கியுள்ளன. ஞாபகப் பரப்பில் தூறிக் கொண்டிருக்கும் குழைக்காட்டின் துளிகள் இங்கே பகிரப்படுகின்றன.**

'இல்லையடா நீங்க முதல் சாப்பிடுங்கோ நான் பிறகு சாப்பிடுறன்'' எல்லா மீனும் கூடச் சாப்பிட்டார்கள்- இடையில் எனக்கு ஒரு பெரிய கெளிறு. ஒரு சாண் நீளம் இருக்கும். தந்தார்கள்.

''அண்ணை உங்களுக்குத் தான் பெரிய மீன்''

எனக்கு சாப்பிடுவதா? விடுவதா புரியவில்லை. 'சரி சாப்பிட்டுப் பார்ப்பம்'.

ஒருகடி கடித்துப் பார்த்தேன். எரிந்த மணம். சைக்கிள் ரயரை கொளுத்தியது மாதிரி இருந்தது.

சிறிய தசை பிய்ந்து வாய்க்குள் போனது. எனக்கு என்னவோ எரிந்த ரயரை சாப்பிடுவது போலவே இருந்தது.

''கா வுளே'' வயிறு குமட்டத்தொடங்கி சத்தி வரும் போல இருந்தது. அன்பாகத் தந்த உணவை வாந்தி எடுப்பதா?

அன்பும் பாசமும். வாந்தி வந்தால் வந்தது தான். எடுத்த வாந்தியின் அளவு இரண்டு வாளி இருக்கும். ''ஏன்ரா இதற்கு வந்தேன்'' என்று இருந்தது.

அந்தப் பையன்கள் பயந்து போய்விட்டட்கள். வாந்தி எடுத்து முடிய தோட்டத்துக்கு ஓடி வந்து விட்டேன். கொஞ்சக் காலம் குளத்தில் குளிக்கும் போது, கெளிறு மீனை கண்டாலே வாந்தி எடுக்க வரும்.

முத்து, கப்புறபளை,ராயு இவர்களை சில நாள்களின் பின் நான் காணவில்லை. ஊருக்கு போய் விட்டார்கள்.

★ ★ ★

ஆலயங்கள் மக்களின் வாழ்வின் பெரும் அங்கமாகவே விளங்கின. மக்களின் இருப்பை நிரந்தரமாக்கியதில் பெரும் பங்காற்றியவை ஆலயங்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''**

எனும் முதுமொழி இதனையே விளக்குகின்றது. இன்று பனையில் உள்ள ஆலயங்களின் பூர்வீகத்தை அறிய முனைவது மிகக் கடினமாகவே உள்ளது. எனவே இவை நீண்ட பாரம்பரியத்தை கொண்டவையாகவே அமைய முடியும்.

மக்கள் எப்போதும் பிழைப்பைத் தேடி அலையும் கூட்டமாகவே இருந்தது. பிழைப்பு நிரந்தரமான இடத்தில் இருந்ததில்லை. இதனால் அலைதல் வாழ்வு இடம்பெற்றுக் கொண்டே இருந்தது.

பிழைப்புத் தேடிப் போன இடங்களில் அமைத்த கோயில்களை விட்டுவிட்டு வர முடியாத காரணத்தால் அதாவது பக்தி தடுத்த காரணத்தால் அவ்விடத்திலேயே ஆலயத்தின் அருகிலேயே மக்கள் தொடர்ந்து குடியிருக்க தலைப்பட்டனர்.

எனவே மக்களின் இருப்பை நிரந்தரமாக்கியவை ஆலயங்கள்தான் என்ற முடிவுக்கும் நாம் வரமுடியும்.

மக்கள் கோயில்களுடன் ஊடாடத் தொடங்கியபின் ஏற்படுத்தப்பட்ட பண்டிகை இந்த பொங்கல் விழாதான். தைப்பொங்கல், சித்திரைப் பொங்கல் எல்லாம் கோயிலில்தான் இடம்பெற்றிருக்க வேண்டும். பின்னர்தான் வீடுகளுக்கு மாறியிருக்க வேண்டும்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தற்போதும் சித்திரைப் பொங்கல் கோயிலில் பொங்கப்படுவதை அவதானிக்க முடியும்.

எனவே பொங்கல் குளிர்த்தி நீண்ட பாரம்பரியம் கொண்ட நிகழ்வாக இருந்து வருகின்றது. இன்றைய நாளில் பொங்கல், அன்று எம் மனதில் ஏற்படுத்திய குதூகலத்தை தொடர்ந்து ஏற்படுத்த தவறிவிட்டது. அதாவது நாம் அந்நியப்பட்டு போய்க் கொண்டு இருக்கிறோம் என்றே தோன்றுகின்றது. இதுதான் காரணம்.

பொங்கல் முடிய எட்டு நாள் கழித்து எட்டாம் மடை என்ற பூசை இடம்பெறுவது வழமை. பொங்கலுக்கு தெய்வத்துக்கு சாதம் மட்டுமே படைப்பார்கள், மோதகம் வைப்பதில்லை. இதனைத் தவிர்க்க எட்டாம் மடையில் பத்துக் கொத்து அரிசி மாவில் மோதகம் அவித்து தெய்வத்துக்கு படைத்துத் திருப்தி காண்பது எம்மவர் குணமாகும். 'விட்ட குறை தொட்ட குறை' இருக்கக் கூடாதல்லவா? தெய்வத்தின் கோபத்துக்கோ சாபத்துக்கோ ஆளாகக் கூடாது.

எட்டாம் மடை என்றதும் ஒரு கதை ஞாபகம் வருகின்றது. சாலை வைரவர் அல்லது மணல் வைரவர் கோயில் இரண்டில் ஒன்றாக இருக்கலாம்.

நான், முரளி, தீபன், மூவரும் போய் மோதகம் பிடித்ததாக ஞாபகம். ஆள்பற்றாக் குறை. பூசை தொடங்க தாமதமாகிவிட்டது. மோதகமும் 5 கொத்து மாவில் பிடித்துக் கொண்டிருந்ததால் சுணங்கி விட்டது.

பூசை இரவு ஏழரைக்குத் தொடங்கியது. 'வீட்டை தேடப் போகினம்' என்ற அவசரம் எங்களுக்கு.

கோயில் உயரமான மணல்பிட்டியில் இருந்தது. பூசை முடியும் தருவாயில் திடீரென்று ஒரு சுழல் காற்று வீசியது. யாரும் எதிர்பார்க்காத நேரம். கொளுத்திய விளக்குகள்,தீப்பந்தம் எல்லாம் சடாரென்று நூர்ந்து விட்டன. கும்மிருட்டு. ஒன்றைக் கவனியுங்கள். கோயில் ஒரு பதினைந்தடி கொட்டில்தான். மறைப்புக் கிடையாது. வெயில் என்றால் வைரவர் முன் மாடு படுத்திருக்கும். அந்த இருட்டில் என்ன செய்ய முடியும். பூசாரியார் கத்தினார்.

''நெருப்பெட்டி எங்கையடா''

''யாருக்குத் தெரியும். என்ன மடிக் கையா கிடக்கு'' யாரோ சொன்னார்கள்.

இருட்டில் தடவிக் கொண்டு இருந்தோம். காற்று தொடர்ந்து வீசுகின்றது. அப்போது கச்சான் விற்றுக் கொண்டிருந்த சரசக்கா தன்னுடைய காசுப்பெட்டியில் தேடி ஒரு நெருப்பு பெட்டியை எடுத்தார். தீப்பெட்டி எது தெரியுமா? யானைத் தீப்பெட்டி. தற்போது உள்ள மாதிரி மெழுகுகுச்சி கிடையாது. தடிக்குச்சியில் மருந்து போடப்பட்டிருக்கும். இரண்டு யானைகள் ஒன்றை ஒன்று பார்த்தபடி இருக்கு. (ஜீ.ஜீ.பொன்னம்பலம் வழக்குப் பேசிய இரண்டு யானைத் தீப்பெட்டி தான்)

அதனுள் ஒரு குச்சே இருந்தது. எப்படி கொளுத்துவது? கொளுத்தவேண்டும். இரண்டு தகரங்களை அணைத்து பனம் பன்னாடையை வைத்து மிகக் கவனமாக நெருப்பு மூட்டினோம். பிறகு பந்தத்தை கொளுத்தி பிறகு விளக்குகளுக்கு உயிரூட்டினோம்''

''அப்பாடா''

எங்கள் கூட நின்ற ஒருவர் சொன்னார்

''நெருப்பெட்டியும் ஒரு சாமான்தான்ராப்பா நெருப்புக் கொளுத்த''

தீபன் என்னிடம் மெதுவாக சொன்னான்.

''இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பு''

''பேசாமல் இர்ரா'' ஏனெனில் சொன்னவர் ஒருமுரட்டுப்பேர்வழி. அடித்தும்விடுவார்.

***(பொங்கல் இனியும்...)***




# சேற்றுப்புழுதியில் ஒரு நாற்று வயல்...

-தமிழிச்சி

எத்தனையோ வருடங்களுக்கு முன்பு
எந்தையரின் நிலத்தின் வாசம் தெரியாமலே
அகதியானது என் பறப்பு.

அடுத்தவன் வீட்டுத் திண்ணையில்-என்
வீரப் பிரசவம்.

சொந்த மண்ணை
கண்ணார ஒருமுறை காணும்
ஆகக்கடைசிப்பட்ச உரிமைக்குக் கூட
எனக்கு கரிசனை காட்டப்படவில்லை...

அப்பா சொல்லும்
அற்புதக் கதைகளோடு தான்
எனக்கு என் சொந்த முற்றச் சுகவாசம்.

முதன் முதலில் அப்பா
சைக்கிள் ஓடி விழுந்தடித்து
முன் பல் இரண்டு தெறித்துப் போன
மூக்கையா வீட்டுப் பெரியபுளி!

பனம்பழம் பொறுக்கப் போன சித்தப்பா
படுத்திருந்த பசுவை பேயென்று கத்தி
பக்கத்து வீட்டவரை எல்லாம் எழுப்ப
பகல் சோ காட்டிய பனைமரக்காடு!

மழைக்காலமொன்றில்
வயல்சென்று திரும்பும் போது
சேற்றில் மாட்டி மாமா தத்தளித்த நீர்மோட்டை!

மகாபாரதத்து திரௌபதை துகிலுரியும் காட்சியில்
வந்து காப்பாற்ற வேண்டிய நேரம்,
கண்ணன் முழு மப்பில் கிடக்க
சத்தியவான் கோபாலனான
சரித்திரச்சாதனை நடந்த ஆட்ட மேடை!

முடிமயிர் வைத்துப் பின்னி
முழுக்கப் பூ வைத்து மறைத்து
அம்மன் கோயில் திருவிழாவுக்குப்போன அம்மா,
அயல்வீட்டுத்தோழி ஒருத்தி
எதேச்சையாய் பிடித்து இழுத்ததில்

அடுத்த கணமே கீழேகிடந்த
பொய்முடியை ஒட்டிவிடச் சொல்லி
ஓலம் போட்டு ஏலம் கூவிய
பேய்ச்சி அம்மன் கோயில்!

வயற்காட்டில் வேலை செய்யும்
அத்தனை பேருக்காகவும்
சத்தாகச் சமைச்சு
அத்தாச்சி உருட்டிக்கொடுக்கும்
பிடிசோற்றுப் பாலைநிழல்!

அப்பப்பா எத்தனை
அழகான ஊர்.!

இப்போது திரும்பிய
சாதக நாட்களில்
கனவுகளை கண்களில்
[illegible] கொண்டு
[illegible]கிறேன்
காலா கால முதுசத்தைக் காண...

எல்லையைத் தொடுகிறேன்.
எங்கே அப்பா சொன்னபடி
எதையுமே காணவில்லையே...


பனைமரக்காடு.. பாலைமரமேடு...
நீர் மோட்டை.. ஆட்ட மேடை..
அம்மன் கோயில்..
ஒன்று கூடவா இல்லை....

கனவுகள் கலைய
இனியும் நடக்க
கால்கள் பின்னடித்தன.
கவலைகள் பறக்க
அணையை உடைக்க
கண்ணீர் அடம்பிடித்தது.

கலங்கும் கண்களில்
தூரத்தில் வெள்ளையாய் ஒரு புள்ளி.
என்னூருக்கு வரும் ஒரேயொரு
பேருந்தாக இருக்க வேண்டும்.....
திணறித் திரும்புவதற்கிடையில்,
அள்ளிவந்து முகத்தில் வீசிவிட்டுப் போன
தெருப்புழுதியில் தெறித்தது ஊர் வாசனை...!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீருக்கான சமர்கள்



■ மதுவிழி

தண்ணீர். மூன்றாம் உலகப்போர் ஒன்று ஏற்பட்டால் அதற்கான முதன்மைக் காரணி இதுவாகத்தான் இருக்கும் என்று கணிக்கும் அளவுக்கு காணப்படுகின்ற ஒரு அவசியப்பட்ட விவகாரம் தான் நீர்ப்பங்கீடும் பற்றாக்குறையும். உலகின் அத்தனை நாடுகளும் மண்டையைப் பிய்த்துக் கொள்கின்ற இந்த தண்ணீர் பற்றாக்குறையும் பங்கீடும் நாடுகளுக்கிடையில் போர்கள் மூளவும் முரண்பாடுகள் ஏற்படவும் காரணமாயமைகின்றன. இருபதாம் நூற்றாண்டுகளிலிருந்தே இதன் தீவிரம் உணரப்படுகிறது. இதனைத் தீர்க்க உலகளாவிய ரீதியில் தண்ணீர்தனியார் மயப்படுத்தல் ஏற்படுத்தப்படுகிறது. விளைவுவறிய மக்கள் நீரை விலைகொடுத்து வாங்க முடியாமல் திண்டாடுகிறார்கள்.

எங்கள் வீடுகளில் நீர்க்குழாய்களில் நீரை எத்தனை பேர் கவனமாகக் கையாள்கிறோம்? கிணற்று நீரை எத்தனை பேர் அளவோடு பாவிக்கிறோம்..? ஆனால் , இதே நீரைத்தேடித்தான் கென்யாவின் கப்ரா இன மக்கள் நாளொன்றுக்கு கிட்டத்தட்ட ஐந்து மணி நேரத்தை செலவிடுகிறார்கள். சீனாவின் தென்மேற்கு மாகாணமான குசாவுவின் கையாங் நகரத்தின் அருகே உள்ள குவாயியாங் கிராம மக்கள் அங்குள்ள 158 ஆண்டுகள் பழமையான கிணறு ஒன்றிலிருந்தே குடிப்பதற்கு நீரைப் பெற்றுக்கொள்கின்றனர். சூடானில் பள்ளங்களில் நீரைத்தேடும் சிறுவர்கள் பள்ளநீரிலிலுள்ள கினியாப்புழுக்கள் உட்செல்லா திருப்பதற்காக கார்ட்டர் மையம் வழங்கிய பாதுகாப்புக்குழாய்களைக் கொண்டு நீர்ப்பள்ளங்களைத் தேடித்திரிகிறார்கள். அங்கோலா ஊற்றுக் கிணறுகள் பலவும் 'ஆசனிக்' நஞ்சால்கெட்டுப்போயிருக்கின்றன.

இத்தகைய நெருக்குவாரங்களுக்கு மத்தியில் தண்ணீர் தனியார்மயப்படுத்தல் பல்வேறு விளைவுகளை சமுகத்தில் ஏற்படுத்தியிருக்கின்றன. 1989ல் பிரிட்டன் மற்றும் வேல்ஸ் முழுமைக்குமான நீர் தனியார்மயப்படுத்தல திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதனால் திடீரென இந்த இயற்கை வளம் தனியாருக்கு விற்கப்பட்டது. விளைவு சுமார் 50 ஆயிரம் தண்ணீர் குழாய் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதோடு நீரின் தரமும் சீர்கேடானது. நீருக்கான வரி இரட்டிப்பாகியது. 1990இல் சுமார் 12 நாடுகளில் சர்வதேச நீர் நிறுவனங்கள் செயற்படத் தொடங்கின. 1994-1998ஆம் ஆண்டுக்கிடையில் சுமார் 12 நாடுகளில் சர்வதேச நீர் நிறுவனங்கள் செயற்படத்தொடங்கின. குறித்த காலப்பகுதியில் மட்டும் 139 தண்ணீர் தனியார்மயம் தொடர்பான உடன்பாடுகள் எட்டப்பட்டன. எனினும் முதலாம் உலக நாடுகள் நீர்ப் பங்கீட்டை பொதுவான சேவையாகவே தொடர்ந்தும் வைத்திருக்க முயற்சித்தன. இதனால் அப்பங்கீட்டை வணிகமயமாக்கத்துடித்த பன்னாட்டு நீர் நிறுவனங்கள், பன்னாட்டு நிதி நிறுவனங்களோடு பங்குடமையை ஏற்படுத்திக் கொண்டன. இவற்றில் உலக தண்ணீர் பங்காண்மை [illegible] உலக தண்ணீர் அவையம் போன்றவற்றை சிறப்பாகக் குறிப்பிடலாம். ஒருபுறம் இவ்வாறு நன்னீர் தனியார்மயமாகி அதற்கேற்ப சட்டங்களும் வரையறைகளும் கூட வரையப்படுகின்ற அதே சமயம் மறுபுறம் பல்வேறு நாடுகள் நீரைக் காரணியாக்கி போருக்குத் தயாராகிக்கொண்டிருந்தன.

எகிப்தை மீண்டும் போருக்கு இழுக்கும் காரணியாக நீர் இருக்கும் என 1979இல் எதியோப்பியாவை நோக்கி மிரட்டல் அறிவிப்பை விடுகிறார் அன்வர் சதாக், அதே ஆண்டு ஜோர்தானின் குசைன் இதே வார்த்தைகளை இஸ்ரேல் நோக்கி வீசுகிறார். 1980 இல் அமெரிக்க உளவுத்துறை நீருக்கான போர் வெடிக்கும் பகுதிகளாக பத்து நாடுகளை அடையாளப்படுத்தியது. ஜோர்தான், இஸ்ரேல், அரேபியா, சைப்ரஸ், மால்டா, எகிப்து, அல்ஜீரியா, மொரக்கோ, ஏமன் மற்றும் டுனிசியா போன்றனவே இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டன. தவிர மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட பல்வேறு போர்களின் பின்னிருக்கும் காரணியாக தண்ணீரே இருந்தது என்பதும் இங்கு உண்மையாகும்.

சர்வதேச சட்டத்திற்கு புறம்பாக இஸ்ரேல் பல்வேறு அடாவடித்தனங்களுக்கு மத்தியில் தான் கைப்பற்றிய கோலான் கைட்ஸ் மற்றும் மேற்குக்கரை ஆகியவற்றிலிருந்தே தனக்கு தேவையான அதிகளவு நீரைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதற்கெதிராக ஜோர்டான் ,சிரியா போன்றன போராடின. ஆயினும் 1982இல் இஸ்ரேல் லெபனானை கைப்பற்றியதோடு ஜோர்டானுக்குள் பாயும் கஸ்பானி மற்றும் வஸானி ஆகிய நதிகளையும் அதோடு லிட்டானி நதியையும் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

எகிப்து முற்று முழுவதுமாக நீருக்காக நைல்நதியை நம்பியிருக்கும் பிரதேசம். நைல் நதியைச் சூழ எதியோப்பியா, கென்யா, சூடான், உகண்டா, ருவாண்டா, தன்சானியா, புருண்டி மற்றும் சயர் ஆகிய பகுதிகள் காணப்படுகின்றன. அவையும் இதே நைல் நதிநீரையே நம்பியிருக்கின்றன. ஆனாலும் எகிப்து நீர்ப் பங்கீடு தொடர்பான சர்வதேச சட்டங்களுக்கு புறம்பாகத் தானும் நைல்நதி நீரை சினாய் பாலைவன தரிசுநில மேம்பாட்டுத்தட்டத்திற்கு திருப்பிவிட்டது. இதனால் நாடுகளுக்குள் பல சிக்கல் நிலமைகள் தோன்றின.

துருக்கி நாடு 2004 இல் இஸ்ரேலுடன் உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டுள்ளது. மிக விசித்திரமான அதேநேரம் விவகாரமான ஒப்பந்தமாக இது அமைந்தது. அதாவது இஸ்ரேல் தான் வழங்கும் ஆயுதப்பொருள்களிற்குப் பதிலாக துருக்கியின் மானாங்கத் நதியிலிருந்து 20 ஆண்டுகளுக்கு சுமார் 50 மில்லியன் கனஅடி நீரை எடுத்துச் செல்லும் என்பதே அது. அதுமட்டுமன்றி துருக்கி யுப்பிரட்டிஸ், தைகிரிஸ் நதிகள் மீது பல இராட்சத அணைகளை அமைக்கத்தொடங்கியது. இதனால் யுப்பரட்டிஸ் தைகிரிஸ் நதிகளின் நீர் சிரியா மற்றும் ஈராக்குக்கு கிடைக்க வாய்ப்பில்லாமல் போகிறது.


உலகின் வல்லரசாக மாறிவரும் சீனா நீருக்காக சார்ந்திருக்கும் ஒரு நதியாக மீகொங் காணப்படுகிறது. திபெத்தில் உருவாகி சீனாவின் யுனான் மாகாணத்தினூடாக பர்மா, தாய்லாந்து ,கம்போடியா, லாவோஸ், வியட்நாம் ஆகிய நாடுகளுக்கும் பயனளிக்கிறது மீகொங். இந்த ஆற்றின் மேல் 1996 இல் சீனா கட்டிய மண்வான் அணையால் அடிக்கடி வெள்ளப்பெருக்குகள் ஏற்படுகின்றன. 2003 இல் கம்போடியா, லாவோஸ், பர்மா, போன்ற நாடுகளில் பெரிய அணைக் கட்டுமானங்களை மின்சார உற்பத்தித்திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி பரிந்துரை செய்தது. அதைவிட பல பாசனத்திட்டங்கள், மேலும் 100 புதிய அணைகள் என சிக்கல்மேல் சிக்கலோடு மிக மோசமான நிலையில் மீகொங் நதி. இவ்வாறான நிலையில் நதியின் கடைக்கோடியில் இருக்கும் வியட்நாமின் நிலை கவலைதருவதே.

அயல்நாடான இந்தியாவைப் பொறுத்தவரை அயல் நாடுகளோடும் சரி மாநிலங்களிற்குள்ளேயும் சரி மிகப் பெரிய சர்ச்சைகள் கிளம்புவது நதிநீர்ப்பங்கீட்டு விடயங்களினாலேயே.. அதிகம் ஏன் இலங்கையின் மூன்றாம் கட்ட ஈழப்போரின் தொடக்கமும் மாவிலாறிலிருந்தே தொடங்கியது இத்தகைய உயிரைத்தின்னும் பெரிய சவால்களுக்கு மத்தியில் எங்களிடம் உள்ள நீர்வளத்தை நாங்கள் சரியாகப் பயன்படுத்துகிறோமா? யாழ். மாவட்டத்தின் தரைக்கீழ் நீர்வளத்தை சிதைத்து விட்டு அல்லது வீணாக்கி விட்டு இன்று அயல் மாவட்டங்களிலிருந்து நீரை இரவல் பெறும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். அதையும் சரியான முறையில் திட்டமிடாததும் முறைப்படி பாவிக்காததுமே பிரச்சினைகள் தோன்றக் காரணமாகின்றன.

இனியொரு உலகப்போர் தோன்றின் அது நீருக்கானதாகவே இருக்கும் என்கின்ற இக்கட்டத்தில் உள்நாட்டு முரண்பாடுகளே நீரை மையப்படுத்தி தோன்றிவிட்ட பின்னணியில் இனி நாம் என்ன செய்யப்போகிறோம்? நாமும் மற்றவர்களைப் போல நீரை இரவல் கேட்கப்போகிறோமா..? அல்லது முரண்பட்டுக்கொள்ளப்போகிறோமா? அல்லது இனிமேலாவது திட்டங்களை சரியான முறையில் பின்பற்றி சரியான முறையில் செயற்படப்போகிறோமா..?

இந்த கேள்வியைக் கேட்கும் இதே தருணத்தில் யாழில் எங்கோ ஒரு வாளி அல்லது ஒரு சொட்டுநீர் வீணாக்கப்பட்டுக்கொண்டிருக்கும். ★






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பில் தொலைந்த கனவுகள்



ஊர் சுற்றும் இரண்டு இளைஞர்கள் அரசியலில் நுழைந்து கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதையே ஆயுட் கால லட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கனவு பலித்ததா இல்லையா என்பதுதான் கதை.



## கேடி பில்லா கில்லாடி ரங்கா

## ஒரு பார்வை

■ ஆதங்கன்

பசங்க, வம்சம், மெரீனா என்று வெவ்வேறு யதார்த்தமான தளங்களில் சுவாரஸ்யமான திரைக்கதையுடன், அழுத்தமான இயக்கத்துடன் நம்மைச் சந்தித்த இயக்குநர் பாண்டிராஜ், தற்போதைய தென்னிந்திய நகைச்சுவை அலைக்கு ஏற்றாற் போல, திசைதிரும்பி கேடி பில்லா கில்லாடி ரங்காவில் சிரிப்புக் கச்சேரியைக் கொடுத்திருக்கிறார்..!

• இரண்டு மணி 10 நிமிடங்கள் உங்களுக்காக.. அதையும் தாண்டிய கடைசி 10 நிமிடங்கள் எனக்காக இந்தப் படம் என்று பேட்டிகளில் கூறிய பாண்டிராஜின் கூற்று சரியானதுதான். என்றாலும், படத்தைக் கொடுத்திருக்கும் விதம் அந்தக் கடைசிப் பத்து நிமிடங்களையும் கூட நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு இருக்கிறது என்றுதான் நான் சொல்வேன்..!

ஊர் சுற்றும் இரண்டு இளைஞர்கள் அரசியலில் நுழைந்து கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதையே ஆயுட் கால லட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கனவு பலித்ததா இல்லையா என்பதுதான் கதை.

இன்றைய இளைஞர்களுக்கு ஏற்றாற் போல் அவர்களைப் பிரதிபலிக்கும் நாயகர்களாக சிவகார்த்திகேயன் மற்றும் விமல். சிவகார்த்திகேயனின் அப்பாவாக இயக்குநர் மனோஜ் குமார். விமலின் அப்பாவான டெல்லி கணேஷ் சொத்து சேர்த்து வைத்திருந்தாலும், தன் மகன் சொந்தக் காலில் நின்று வாழ்க்கையில் வென்று விடுவான் என்ற நம்பிக்கையுடன் இருப்பவர். இரண்டு அப்பாக்களின் அறிவுரைகளும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்க.. வாழ்க்கை கற்றுக் கொடுத்த பாடத்தின் மூலம் இவர்கள் உண்மையை உணர்ந்து வாழ்க்கையைத் துவங்கும்போது இருவரது குடும்பத்திலும் ஏற்படும் இழப்பையும், சோகத்தையும் மிக அழகாகப் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர்..!

இவர்களுக்குள் ஏற்படும் காதலைக்கூட மிக இயல்பாகச் சொல்கிறது படம்.

சிறந்த நடிகையாக தெரிய வேண்டுமெனில் சிறந்த இயக்குநரால் ஆட்டுவிக்கப்பட வேண்டும் என்பது சினிமா நியதி. 'கண்ட நாள் முதல்' படத்தில் கேட்பாரற்று கிடந்த ரெஜினாவை இப்போது தமிழ் ரசிகர்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுமளவுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் பாண்டிராஜ்.தர்மத்தின் தலைவன் ரஜினி ஸ்டைலில் சிவகார்த்திகேயன் செய்யும் அலட்டல்கள் மிக அதிகம். ஆனாலும் அவையெல்லாம் பார்வையாளர்களின் வயிற்றைப் பதம் பார்க்கும் நகைச்சுவையை சர்வநிச்சயமாக உண்டுபண்ணுகின்றன.

விமல்.. இனியும் முழித்துக் கொள்ளாவிட்டால் கஷ்டம்தான்.பிந்துமாதவியிடம் அடி உதை வாங்கிவிட்டு அதனை வெளியில் சொல்லாமல் நாகரிகமாகச் சொல்லிச் சமாளிக்கின்ற காட்சியில் மட்டுமே இவரை நடிகராகப் பார்க்க முடிந்தது. இறுதிக் காட்சியில் டெல்லி கணேஷிடம் பேசும்போதுகூடவா அப்படியே இருக்க வேண்டும்..? இதுபோன்ற பாத்திரங்களிலேயே தொடர்ந்தும் விமல் நடித்துக் கொண்டேயிருந்தால் போகப் போக ரசிகர்களுக்கு அலுத்துவிடும்..!

வீட்டோடு மாப்பிள்ளையாகி வேலை வெட்டியில்லாமல் ஊரைச் சுத்தும் 'பரோட்டா'சூரி போன்று நாட்டில் நிறையப் பேர் இருக்கத்தான் செய்கிறார்கள்.எப்போதெல்லாம் விமலும், சிவகார்த்திகேயனும் பார்வையாளர்களுக்கு கடுப்பேற்றத் தொடங்குகிறார்களோ அப்போதெல்லாம் சூரிதான் இடையில் புகுந்து நம்மையும் சமாளிக்கிறார்.அவர்களையும் சமாளிக்கிறார்.மனைவியிடம் 'வாடா' 'போடா' என்ற பேச்சையும் கேட்டுவிட்டு அப்படியும் கடைசியாய் பணத்தை வாங்கிக் கொண்டே வெளியேறும் அந்தப் ''பொறுப்புள்ள இளைஞன்' பாத்திரமாகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார் சூரி.

இவ்வளவு சிறந்த நகைச்சுவை வசனங்களை எழுதும் திறமையுள்ள பாண்டிராஜ் இதனைத் தேக்கி வைத்துவிடாமல் மீண்டும் தனது நகைச்சுவை ராஜபாட்டையை தொடர்ந்து நடத்த வேண்டும்.

அரசியல் காட்சிகளில் இத்தனை அழுத்தமாக கூட்டத்தைக் கூட்டி படத்தைக் கொடுத்திருக்கும் பாண்டிராஜின் சிரத்தையை பாராட்டத்தான் வேண்டும்..!

எல்லாம் சரிதான் ஆனால் இந்தப் படம் கொடுத்த ஒரு ஏமாற்றமும் மிகப் பெரியது. இன்றைய சூழலில் இப்படி நிமிடத்துக்கு நிமிடம் தண்ணியடிப்பது போன்ற காட்சிகளை வைத்திருக்கத்தான் வேண்டுமா..? அது அவசியம்தானா..? ஏதோ ஒரு காட்சி.. இரண்டு காட்சியென்றால் பரவாயில்லை.ஆனால் படம் முழுவதிலும் அப்படியே என்றால், படம் பார்க்கும் சிறார்களுக்கு இதெல்லாம் சகஜம்தானே என்ற எண்ணமும் வந்து விடாதா?

யதார்த்தங்களையும், கவலையையும் மறந்து விட்டு , சிரிக்க நினைப்பவர்கள் கண்டிப்பாக பார்க்கலாம் கேடி பில்லா. கில்லாடி ரங்காவை.







## பனிப்பானம் அருந்துகிறேன்

நான் மட்டும்
தனியே செல்கிறேன்
முற்கள் நிறைந்த
கானகப் பாதையில்
அடிக்கடி வீழ்கிறேன்
எழும்பி எத்தனிக்கும்
ஒவ்வொரு கணமும்
மாறி விடுகிறேன் முற்களாகவே
தாகம்
எடுக்கின்றது!
பனிப்பானம் அருந்துகிறேன்
பசி எடுக்கிறது
செல்லரிக்கப்பட்ட
நினைவுத் துண்டுகளை
உண்கின்றேன்
போசனமும்
புதிய சனமும்
பழுதடைந்து விட்டதால்

லிங்கேஸ்
நாயாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்டுபிடிக்கும் இலங்கை அரசு

■ அதிரன்



ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மான விடயத்தில் இலங்கை அரசின் நிலைப்பாடு இப்போது வெளிப்பட்டு வருகிறது. இலங்கை ஐ.நா.தீர்மானத்துக்கு சிறிதும் மதிப்பளிக்கப்போவதில்லை என்ற விடயம் இப்போது வெட்ட வெளிச்சமாகி இருக்கிறது. அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்ட கருத்து ஒன்று இலங்கை அரசியல் மட்டத்தில் மட்டுமல்ல, சர்வதேச ரீதியிலும் இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியை தோற்றுவித்திருக்கிறது.

அமைச்சரவையில் மிகப் பொறுப்பு வாய்ந்த வெளிவிவகார அமைச்சர் பதவியில் உள்ள பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிட்ட இந்தக் கருத்தினால் சர்வதேச ரீதியில் இலங்கை அரசின் மீதான நம்பிக்கைத் தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்பதில்லை என்ற நிலைப்பாட்டில் மாற்றம் கிடையாது என்று தெரிவித்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஆறு மாதத்துக்கு ஒரு தடவை சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க இலங்கை அரசு தயாராக இல்லை என்றும் வெளிப்படையாக கூறியிருந்தார். ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து இலங்கையிலோ, ஜெனிவாவிலோ அல்லது வேறு நாட்டிலோ பேச்சு நடத்தப்படவில்லை என்றும் எந்த நாட்டின் ஆலோசனைகளையும் நாம் ஏற்கத் தயார் இல்லை எனவும் இறுமாப்புடன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

உயர் சபையான நாடாளுமன்றத்திலேயே அவர் இந்தக் கருத்தினை வெளிப்படுத்தியிருந்தார். நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் வழங்கும் போதே பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அவரது இந்த உரை மூலம் ஜெனிவாத் தீர்மான விடயத்தில் இலங்கை அரசு என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்பது வெளிப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு எதிரான அழுத்தங்களும், குற்றச்சாட்டுக்களும் அதிகரித்து வருகின்ற நிலையில் அவை எதனையும் கருத்தில் கொள்ளாமல் இலங்கை அரசு தொடர்ந்தும் தான் நினைத்தவாறே செயற்பட்டு வருகின்றது.

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக எழுந்துள்ள அபகீர்த்தியை போக்குவதற்குப் பதிலாக நிலைமைகளை தொடர்ந்தும் சிக்கலுக்குள்ளாக்கும் வகையிலேயே அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

ஐ.நா.வில் தீர்மானம் நிறைவேற்றினாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்ற தோரணையில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் கருத்தும் இதனையே காட்டுகின்றது. ஜெனிவாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எதனையும் நடைமுறைப்படுத்தவே மாட்டோம் என ஜீ.எல்.பீரிஸ் கூறியமை குறித்து எதிர்க்கட்சிகளும் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

சர்வதேச நாடுகளை பகைத்துக்கொள்ளும் இலங்கை ஐ.நா. அங்கத்துவத்தில் இருந்தும் வெளியேறுவதற்கு முயற்சிக்கின்றதா என்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பி இருக்கின்றது.

ஐ.நா.வின் சிறப்புரிமைகளை பெறும் நாடு என்ற வகையில் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உள்ளது. ஐ.நா.வில் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிராகரிப்பதாக அரசு கூறுவது பேராபத்தில் போய் முடியும் என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் விஜேவர்த்தன கூறியிருக்கிறார்.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் அறிவிப்பு இலங்கை விடயத்தில் பாரதூரமான விளைவுகளைத் தோற்றுவிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஐ.நா.தீர்மானத்தை இலங்கை நிராகரிப்பதன் மூலம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும் அது நிராகரிக்கிறதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜெனிவாத் தீர்மானத்தைவெளிப்படையாக நிராகரித்ததன் மூலம் சர்வதேசத்தால் இலங்கை தொடர்ந்தும் புறந்தள்ளப்படக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இலங்கையின் மனித உரிமைகள், ஜனநாயகம், நீதித்துறை, சுயாதீனம் என்பவற்றை கேள்விக்குறியாக்கும் வகையிலேயே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் இந்தக் கூற்று அமைந்திருக்கின்றது.

சர்வதேச ரீதியில் நாட்டின் நற்பெயரை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் சர்வதேசத்தால் வழங்கப்படும் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் எடுத்தெறிந்துவிட்டு செயற்பட்டுவரும் இலங்கை அரசின் போக்கு சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக மேலும் பல தீர்மானங்களை கொண்டு வருவதற்கே வழிவகுக்கும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அடுத்த நகர்வு; ஆயத்தம்

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

தொடர இருக்கின்ற போராட்டங்கள் மாநில அளவோடு நின்றுவிடாது. பட்டிதொட்டியெங்கும் வியாபித்திருக்கும் ஈழ உணர்வையும், அறிவுமயமாதலையும், இந்தியா முழுமைக்கும் பரவலடையச் செய்யப் போவதாக கூறுகின்றனர். இதற்காக தாமாகவே ஊடகங்களை உருவாக்குகின்றனர். இணைய வழியிலான வானொலியும், இணையத்தளமும் உருவாக்கப்பட்டாயிற்று. அடுத்த கட்டமாக குறும்பட வடிவில் ஈழப்பிரச்சினையை பிரச்சாரப்படுத்த இருக்கின்றனர். அதற்கான தயார்படுத்தல் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பாடல்களாகவும், புகைப்பட கண்காட்சிகளாகவும், ஓவியங்களாவும், கருத்துச் சித்திர கதைகளாகவும் ஈழப்போராட்ட கதைகள் வடிவமெடுக்கின்றன. ஒவ்வொரு தமிழகத்தினனின் பார்வைக்கும் அவை சென்று சேரவுள்ளன.

**கற்பூலிஸ்ட்டுகளுக்கு வகுப்பெடுக்கின்றனர்**

இதுவே வட மாநிலக் கல்லூரிகளிற்கும் தமது சகோதரர்களுக்கும் கொண்டுசெல்லப்படவுள்ளதாக கருத்தொருமிக்கின்றனர். ஒவ்வொரு வடமாநில கல்லூரிக்கும் நேரில் பயணித்து தம் போராட்ட நோக்கத்தை எடுத்துரைக்கவுள்ளனர். இதன் ஊடாக அவர்களையும் இணைத்து இனி வரும் மாதங்களில் இந்தியா தழுவிய போராட்ட வெடிப்புகளுக்கு ஓரணியாகின்றனர். ஆகவே இந்தக் காலத்தில் அவர்கள் அமைதியாய் இல்லை. சுழுறியாடி தயாராகின்றனர்.

அமெரிக்க தீர்மானத்தை அவர்கள் ஒரு துரும்பென பிரச்சாரப்படுத்துகின்றனர். அதுவும் இல்லாதுவிட்டால் ஈழத்தமிழர் பிரச்சினை கேள்விகளற்ற மௌனப் பெருவெளியில் காணாமல் கரைந்திருக்கும் என்ற அறிவுரையை பலருக்கும் சொல்கின்றனர். அமெரிக்காவோடு இணைய வேண்டிய இடத்தில் இணைந்து பிரிய வேண்டிய இடத்தில் பிரிவோம் என்று கற்பூலிஸ்ட்டுகளுக்கு வகுப்பெடுக்கின்றனர்.

**அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள்**

ஈழப்பிரச்சினை மட்டும்தான் போராடும் துணிவைத் தருகின்றதா? தமிழகத்தில், உங்கள் சூழலில் நிகழும் பிரச்சினைகளுக்காக போராடமாட்டீர்களோ? என்ற குற்றச்சாட்டோடு இணைந்த கேள்வியை மாணவர்களை நோக்கி வீசியபடி தொலைக்காட்சி விவாத மேடைக்கு புத்தி ஜீவிகள் வருகின்றனர்.

எம்மிடம் இருக்கின்ற பிரதான பிரச்சினை அது. அதை திசைதிருப்ப முனைய வேண்டாம். பிரதான பிரச்சினைக்கு தீர்வு காண்பதும், ஓர் இன அழிப்பை தடுத்து நிறுத்துவதுமே கட்டாயமானது. அதை முடித்துக் கொள்ளும் காலத் தில், தமிழக பிரச்சினையின் பக்கம் எங்கள் குழந்தைகள் போராடத் தொடங்குவார்கள் என நம்பிக்கையோடு அவர்கள் புத்திஜீவிகளுக்குப் பதில் தரு கின்றனர்.

ஆக, அவர்கள் தம் தலை முறையை நம்புகின்றனர். ஈழத்தை அடுத்த தலைமுறை பிடமும் அநாதையாக கையளிக்க அவர்கள் தயாரில்லை.


★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சித்திரைப் புத்தாண்டே!

பாரிருள் அகன்று
பாவங்கள் தொலைந்து
இல்லங்கள் தோறும்
இன்பங்கள் பொங்கிட
வற்றாத நதியாகி
வாழும் மக்களுக்கு
வளங்களை அளித்திட
சித்திரைப் புத்தாண்டே!



ஜாதிகள் பேதங்கள்
மறைந்து போக
ஒற்றுமையை வளர்த்திட்டு
ஒன்றாக வாழ
ஒளி வெள்ளமாய்
வாழ்வை உணர்த்திட
உன் வரவை நல்வரவாக்க
விஜய புத்தாண்டே
வருக வருக!

சிந்த சிவதாஸ்
சுதுமலை தெற்கு

"விடியலைக் காண விலை போனவை ஏராளம். எண்ணிலடங்கா இழப்புகளைச் சுமந்து, துன்பத்தை மூடை மூடையாய்ச் சுமந்து, கண்ணீரால் காவியம் படைத்து நிற்கும் எம்மினம் மீட்சி பெறும் என நம்புவோம். தூரத்தே தெரியும் நம்பிக்கை ஒளிக்கீற்று சுவாலை விட்டெரிந்து விடிவைத் தரும். சிந்திய குருதியும், போன உயிர்களும், சிதறிய உடல்களும், மீளவும் வரவே வராது. இழந்தவற்றை மீளப்பெற அற வழி செல்வோம்."

# விஜய வருடமே விழவைத் தந்திடுவாய்...

■ கந்த தியாகராசா
கோண்டாவில்.

இன்று விஜய எனும் நல்லதொரு நாமம் பூண்டு புத்தாண்டு மலர்கின்றது. காலச் சக்கரத்தை அறுபது ஆண்டுகளாக வகுத்து ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒவ்வொரு பெயரோடு புலரும் புது வருடங்கள் அறுபது திருப்பெயர்களைக் கொண்டவை. 'பிரபவ' முதல் அட்சய ஈறாகவுள்ள அறுபது நாமங்களும் நாரத முனியின் திருக்குமாரர்களின் திருப்பெயர்கள் என அபிதான சிந்தாமணி என்னும் நூல் மூலம் அறிய முடிகின்றது. சுழற்சி முறையில் மாறி வரும் அறுபது வருடங்களுள் இருபத்தியேழாவதாக வுள்ள விஜய என்னும் இன்றைய புத்தாண்டை தேசம் செழித்து நேசம் வளர்ந்து நன்மைகள் ஓங்கி செந்தமிழும் வாழ வாழ்த்தி இன்முகத்துடன் வரவேற்போம்.

ஒப்புரவொழுகிய எம் முன்னோர்கள் தமது வழித்தோன்றல்கள் யாவரும் மண்ணில் என்றும் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்ற நற்சிந்தனையுடன் பண்டிகைத் திருநாள்களை உருவாக்கினர். மங்கலங்களைச் சுமந்து வருகின்ற பெருநாள் என்றும் பொன்னாள் என்றும், திருநாள் என்றும் காலம் காலமாய்ப் போற்றிக் குதூகலமாய் கூடிக் கொண்டாடி மேன்மை பெற்று வாழ்ந்து காட்டினர்.

அத்தகைய பண்டிகைகளுள் சித்திரைப் புத்தாண்டும் ஒன்று. சித்திரைப் புதுவருடம் புதுமையானது, புனிதம் நிறைந்தது. புது வருடக் கருமங்கள் யாவும் சீலமுடையவை. பல் வகை மூலிகை கொண்டு தயாரித்த மருத்து நீர், பிணிகளையும் தோஷங்களையும் நீக்க வல்லது. வைகறைத் துயிலெழுந்து புண்ணிய காலத்தில் இம்முறை சென்னியில் புங்கமில்லை வைத்து காலில் ஆலமிலையும் வைத்து சிரசில் மருத்து நீரை தேய்த்து நீராடி இவ் வருடத்துக்கு உகந்த நீலம், மஞ்சள் கரையுடைய புதிய ஆடைகளைப் புனைந்து, ஆபரணங்கள் அணிந்து கண்ணாடி மங்கலப் பொருள்களைத் தரிசித்து தெய்வப் படங்களைத் தொழுது பெற்றோரை வணங்கி பெரியாரின் ஆசிபெற்று இறையுறை கோயில் நாடி குல தெய்வ வழிபாடு செய்து புது வருடத்தைப் பூரிப்புடன் கொண்டாட வேண்டுமென பெரியோர் வகுத்துள்ளனர்.

புதிய வருடம் பிறந்த பின்பு வரும் சுபவேளையில் கைவிசேடம் பரிமாறும் வழக்கம் இன்னும் தொடரும் நற்கருமமொன்றாகும். இந்தப் பொன்னான பெரு நாளில் புதிய வேலைகளைத் தொடங்குதல், புதுக்கணக்கு ஆரம்பித்தல், வித்தியாரம்பம், களமேட்டில் ஏரோட்டல், கட்டுமரம் தோணிகளைச் செலுத்துதல்,நூல் வேலைகளைத் தொடங்குதல் போன்ற நற்கருமங்கள் ஆரம்பிக்கும் வழக்கம் தமிழர்களிடையே இன்று நிலவுகின்றது. இச் சித்திரை புத்தாண்டில் தொடங்கும் எக் கருமங்களும் சிறப்பாக நிறைவுறும் என்பது மக்களின் அசையாத நம்பிக்கை. இன் முகத்தோடு உறவினர், நண்பர்கள், அயலவர்களை வரவேற்று உபசரித்து விருந்தோம்பி இனிய பட்சணங்களைப் பகிர்ந்துண்டு மனமகிழ்வோடு புது வருடத்தைக் கொண்டாடும் வழக்கம் இன்றும் உள்ளது.

ஒவ்வொரு இனத்தவர்களும் தங்கள் தங்கள் புத்தாண்டுத் தினத்தை மலர் முகம் காட்டி வரவேற்பர். தேசத்துக்கு தேசம் இனத்துக்கினம் வேறுபடும் புது வருடத்தினமானது பெரும்பாலும் சமயங்களைச் சார்ந்தவையாகவும் இயற்கையின் அசைவுகளோடு ஒன்றியதாகவும், கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருப்பதைக் காணலாம்.

விடியலைக் காண விலை போனவை ஏராளம். எண்ணிலடங்கா இழப்புகளைச் சுமந்து, துன்பத்தை மூடை மூடையாய்ச் சுமந்து, கண்ணீரால் காவியம் படைத்து நிற்கும் எம்மினம் மீட்சி பெறும் என நம்புவோம். தூரத்தே தெரியும் நம்பிக்கை ஒளிக்கீற்று சுவாலை விட்டெரிந்து விடிவைத் தரும்.

சிந்திய குருதியும், போன உயிர்களும், சிதறிய உடல்களும், மீளவும் வரவே வராது. இழந்தவற்றை மீளப்பெற அறவழி செல்வோம். வலுவான சக்தியாய் விளங்கும் எமது இளைய சமுதாயம் நன்னெறியொழுக வேண்டும். வேண்டத்தகாத வெஞ்சினத்தை விட்டு, வேதனையூட்டும் வன்செயல்களை விட்டு குரோத விரோத எண்ணங்களை விட்டு, முட்டி மோதிக் கொள்ளும் ஈனத்தை விட்டு, பிறர்க்கு இன்னல் செய்யாது நற்குண சீலர்களாக நன்றே வாழ திடம் கொள்ள வேண்டும்.

மரத்துப் போன நெஞ்சோடு மௌனித்து வாழும் நம்மினம் நலம் பல பெற்று வாழ இப் புண்ணிய நாளில் வேண்டிக் கொள்வோம். மலரும் புத்தாண்டு நன்மைகள் ஓங்க வழி செய்து புதியவைகளை, [illegible] எல்லாம் [illegible] செய்யும் என நம்புவோம். "எங்கும் வேண்டும் இன்பம் அன்பு"



## விஜய சித்திரை நங்காய் வருக!

நந்தன நங்கை செல்கிறேன்
என்றிட
வந்தேனே என்று விஜய வனிதை
எம் எல்லோருடனும் கை
குலுக்கி மகிழ்கிறாள்
இம்..ம் எமக்கென்ன கசக்கிறதா?
மகிழ்வோ மகிழ்வு மட்டற்ற
மகிழ்வு
மாயன் நாள்காட்டியால் பயந்து
பயந்து நித்திரைதனைத்
தொலைத்தவர்களல்லவா?
வாழ வைக்க வருகின்றேன்
என்று விஜய வனிதை எம்
முன்னால் வந்தால்
யாருக்குத்தான் கசக்கும்
விஜய சித்திரை நங்காய்!
திக்கெங்கும் வெற்றிகள் குவிக்க
தேசமே உன்னைப் போற்றிட
எழுந்து வருக
வேற்றுமைகள் காட்டாது
யாவரையுமே
வாழ வைக்க அம்மா நீ வருக
பொங்கற் பூசைகளோடு
சங்கம் வளர்த்த செம்மொழியால்
பாமாலைகள் சூட்டி கரங்கள்
கூப்புகின்றோம்
விஜய நங்காய்! முத்திரை பதிக்க
வருகவே!

க.காமலாம்பிகை
மீசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உல்லாசம் விட்டு வருவாளா...?

வடதாரகை-II நெடுந்தீவு குறிகாட்டுவான் போக்குவரத்துச் சேவைக்கெனக் கொண்டுவரப்பட்டு பெரும் ஆரவாரத்துடன் கையளிக்கப்பட்ட ஒரு படகு.

இந்தப் படகு ஜனாதிபதியின் ஒத்துழைப்புடன் தருவிக்கப்பட்டது என்றும் பேசப்பட்டது. வடதாரகை-II நெடுந்தீவுச் சேவையில் இணைந்து கொண்டது உண்மை எனினும் அந்த மக்களுக்கு தனதுசேவையை வழங்கிய நாள்களை விரல்களிட்டு எண்ணிவிட முடியும்.

நெடுந்தீவு மக்கள் மழை வெயில்களில் அவதிப்பட்டு வாடித்திரிய தென்பகுதியில் இருந்துவரும் உல்லாசப் பயணிகள், படையினர்களின் உறவினர்கள் நெருக்கமானவர்கள் , உயரதிகாரிகள் என நெடுந்தீவுக்கு சுற்றுலா வருபவர்களை ஏற்றிக்கொண்டு உல்லாசமாக அவ்வப்போது குதூகலமாக ஓடித்திரிகிறது வடதாரகை-II.

நெடுந்தீவு மக்களை ஏற்றியிறக்க துறைமுகத்துள் வர மறுக்கும் வடதாரகையாள் நெடுந்தீவு மக்கள் தவிர ஏனையவர்கள் வரும்போது மட்டும் மகிழ்வுடன் துறைமுகத்துக்குள் புகுந்து விளையாடித் திரும்புகிறது. இதன் மர்மம் என்னவென்று இதுவரை நெடுந்தீவு வாசிகளுக்குப் புரியவில்லை.

இந்தப் படகு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கானது எனப் பேசப்பட்டாலும் கடற்படையினர் அது தங்களது எனக்கூறி அடம்பிடித்து தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்துள்ளனர். வீதி அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த ஊழியர்கள் இரண்டொருவர் பெயருக்கு அதில் பணியாளர்களாக உள்ள போதும் கடற்படையைச் சேர்ந்தவர்களே அதில் பணி புரிகின்றார்கள்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு அந்தப் படகின் இயக்கங்கள் செயற்பாடுகள் குறித்த பயிற்சிகள் வழங்கப்படவேண்டியிருந்ததால் கடற்படையினர் அதற்கான பயிற்சி வழங்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டனர். எனினும் குரங்கு அப்பம் பிரித்த கதையாக வடதாரகையின் உரிமையையும் படிப்படியாக அவர்களே தமதாக்கிக் கொண்டனர்.

வடதாரகை-II வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டு சேவையைத் தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டபோதெல்லாம் படகு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்படும் எனப் பேசப்பட்டதேயன்றி அதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் கூட கையேற்க சில திகதிகள் குறிக்கப்பட்டிருந்ததாக ஒப்புக் கொண்டிருந்தனர். ஆனால் அவை நடக்கவில்லை.

மக்கள் சேவைக்குப் பயன்படுத்துவதை விட தமது தேவைக்குப் பயன்படுத்தவே வடதாரகைப் படகு கட்டப்பட்டது என்கிற பாணியிலேயே கடற்படையினரின் நடவடிக்கைகள் இருந்துவருகின்றன.

வடதாரகை பயணிகளை ஏற்றிச் சென்ற காலங்களில் கூட உல்லாசப் பயணிகளுக்கும் தென்பகுதியில் இருந்து வருபவர்கள் என்பதற்காக விசேட சலுகைகள் வழங்கி அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வந்தது இந்தப் படகு. பிரதேச மக்களைக் குறிப்பாக முதியவர்களை நோயாளர்களைக்கூட கீழ் தளத்துக்கு இறங்கிய அதேநேரம் உல்லாசப் பயணிகள் வசதியாக மேல் தளத்தில் பயணிக்க அனுமதிக்கப்பட்டனர்.

பெரிய அளவில் சேவையில் ஈடுபடாது குறிகாட்டுவானில் ஒரு காட்சிப் பொருளாக நங்கூரமிடப்பட்டிருந்த இந்தப் படகு எப்படியோ இயந்திரக்கோளாறுக்கும் இப்போது உள்ளாகிவிட்டது. அது பழுதடைந்திருக்கும் விடயம்கூட இரகசியமாகவே இருந்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குத் தெரிந்திருக்குமோ என்பதுகூட சந்தேகம்தான். ஏனெனில் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் வடதாரகை இன்னமும் தம்வசம் ஒப்படைக்கப்படவில்லை என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர். ஊற்காவற்றுறை பிரதேச சபையில் சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட படகு சம்பந்தப்பட்ட திணைக்களத்திடம் கையளிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உறுதியளித்திருந்தார். உடனிருந்த மற்றும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டினும் கடற்படையினரும் கூட்டத்தில் அதற்குச் சம்மதமளித்த போதும் ,அது நடக்காத காரியம் என்ற கடற்படையினரின் தகவலும் அரசல் புரசலாக சில மணிநேரத்திலேயே கசியத் தொடங்கிவிட்டது.

கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி இடம்பெற்ற கச்சதீவு திருநாளையொட்டி வடதாரகை படகு சேவைக்கு விடப்பட்டது. குறிகாட்டுவானில் பழுதடைந்து நின்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையின் படகான வடதாரகையைத் திருத்தியமைத்து இந்தச் சேவையை மேற்கொண்டதாக கடற்படையினர் தெரிவித்த செய்தியும் வெளியாகி இருந்தது.

அதாவது கடற்படையினர் இப்பொழுதாவது வடதாரகை II வீதி அபிவிருத்தி அதிகார சபையின் படகு என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். கச்சதீவு திருவிழா தொடர்பாக கடற்படையினர் தெரிவித்த செய்தியிலேயே இது கூறப்பட்டுள்ளது. எனவே உண்மையை ஒப்புக் கொண்ட கடற்படையினர் குறிப்பிட்ட படகை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளித்து நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவை சீராக நடக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே அந்தப் பகுதி மக்களது எதிர்பார்ப்பாகும். 8 மில்லியன் ரூபா மக்கள் வரிப்பணம் செலவிடப்பட்டே வடதாரகை-II கட்டப்பட்டது. ஆனால் அந்தப் படகால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை. இதைக்கூட செய்துதர முடியாத அமைச்சர்டக்ளஸால் எப்படி அரசுடன் சேர்ந்து தீர்வைப் பெற முடியும் என்று கேட்கிறார்கள் நெடுந்தீவு மக்கள். இத்தனை காலம் நடத்திய இணக்க அரசியல் மூலம் ஆகக் குறைந்தது வடதாரகை-II படகையாவது நெடுந்தீவு மக்களின் சேவைக்குப் பெற்றுத்தர முடிந்தால் நல்லதுதான் என்பதே அவர்களின் கருத்து.

■ வந்தியத்தேவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெங்கன்

> வடகொரியா அதன் எதிரி நாடுகள் என்று கருதும் தென் கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்க நிலைகள் மீது ஒரு குண்டை தானும் வீசுமானால் இந்தநாடுகள் அனைத்துமே அதன்மீது எதிர்த்தாக்குதல் நடத்தும் நிலைமை இருந்து வருகின்றது.

# உலகை அச்சுறுத்தும் வடகொரியா

உலக நடப்புகள் ஒரு பார்வை



வடகொரியாவின் இப்போதைய தலைவர் கிம் ஜொங்-உன், ஆளும் தொழிலாளர் கட்சியின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட முதலாவது ஆண்டு தினத்தை கடந்த வியாழக்கிழமை ஏப்ரல் 11 ஆம் திகதியும், நாட்டின் நிறுவுநர் அமரர் கிம் இல் சுங்கின் பிறந்தநாளை நாளை 15 ஆம் திகதியும் அந் நாடு விமரிசையாகக் கொண்டாடுகின்ற இந்த தருணத்தில் உலகம் முழுவதுமே அந்த நாடு அதிர்ச்சியூட்டும் நடவடிக்கை எதனையும் மேற்கொண்டு விடலாம் என்ற அச்சத்தின் உச்சத்தில் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றன.

சமீபகாலமாக வடகொரியா விடுத்துவரும் எச்சரிக்கைகள் மற்றும் செயற்பாடுகளால் அமெரிக்கா மட்டுமன்றி அதன் நேசநாடான சீனாவும் கூட எரிச்சலுற்று வடகொரியாவுக்கு எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இராணுவ பரபரப்பு செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் இறங்க வேண்டாம் என்று சீனா அந்நாட்டை எச்சரித்திருக்கிறது. என்றாலும் அதனை வடகொரியா பொருட்படுத்தாமல் அதன் கிழக்குப் பிரதேசத்திலிருந்து ஏவுகணை வீச்சு பரிசோதனை ஒன்றுக்கு ஆயத்தமாகி வருகின்றது.

இதேவேளை அமெரிக்க அரசு வெளியிட்டுள்ள எச்சரிக்கையில், வடகொரியா அபாயகரமான தொரு எல்லைக்கோட்டை மீறி விளையாடிக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளது. தென்கொரியாவைப் பொறுத்தவரை தமது நிலைகளை நோக்கி ஏவுகணை சோதனை நடத்தப்படலாம் என்ற அச்சத்தில் மிகுந்த பரபரப்பான விழிப்போடு இருந்து வருகின்றது.

வடகொரியா இப்பொழுது விபரீதமாக அணு யுத்தம் ஒன்றை ஆரம்பிக்க துடித்துக் கொண்டிருப்பதாகவே அங்கிருந்து கிடைக்கும் செய்திகளை வைத்து பிறநாடுகள் முடிவு கட்டிக் கொண்டிருக்கின்றது.

அணுகுண்டு மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் தொலைதூர ஏவுகணைகளையும் உருவாக்கி பரிசோதிப்பது அவைகளை தன் சேமிப்பு கிடங்குகளில் வைத்திருப்பதும் தனக்குள்ள உரிமை என்று வடகொரியா பலகாலமாகவே வாதிட்டு வருகின்றது.

இந்த உரிமைக்கு மாறாக அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் குறிப்பாக தென்கொரியா, செயற்படுவதாக வடகொரியா ஆத்திரம் கொண்டுள்ளது.

வடகொரியாவின் இந்த முயற்சிகளை அமெரிக்கா மட்டுமன்றி ஐ.நா. உறுப்பு நாடுகளும் எதிர்த்து வருகின்றன. வடகொரியாவின் நேச நாடுகளும் கூட வடகொரியாவின் அணு சோதனையை ஆதரிப்பதாக இல்லை.

ஐ.நா. கோரிக்கையையும் புறந்தள்ளி விட்டு வடகொரியா செயற்படத் தொடங்கியதால் அதன்மீது ஐ.நா.வும் அமெரிக்காவும் பொருளாதாரத் தடைகளை இறுக்கத் தொடங்கின. அதன் விளைவாக இப்போது வடகொரியா அணுகுண்டு வீசும் அளவுக்குத் தன் நிலைப்பாட்டை உக்கிரமடையச் செய்துகொண்டிருக்கிறது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென்கொரிய நாடுகளை குறிவைப்பதாக அறிவித்துள்ள வடகொரியா நிச்சயமாக அந்த நாடுகளும் எதிர்த்திட்டங்களை வைத்திருக்கும் என்பதை அறியாமல் இருக்க முடியாது.

வடகொரியா அண்மையிலேயே அணு குண்டு வல்லமையை எட்டியது. மூன்று தடவைகள் நடத்திய சோதனைகளின் பின்னர் அணுவல்லமையை அடைந்துவிட்டதாக அறிவித்தது. இப்போது நான்காவது சோதனையையும் நடத்துவதற்கு ஆயத்தமாகி வருவதாக அறிவித்துள்ளது.

தனது அணு மற்றும் ஏவுகணை சோதனைகள் அமெரிக்க நிலைகளை நோக்கியதாகவே இருக்கும் என்றும் அறிவித்திருந்தது.

அமெரிக்காவின் அணு மற்றும் ஏவுகணை வல்லமையானது நீண்டகாலத்துக்கு முன்பே எட்டப்பட்டதாகும். அமெரிக்காவிடம் தன்னை மட்டுமல்ல தனது நேச நாடுகளையும் தற்காத்துக்கொள்ளும் வல்லமையைக் குறைத்து கணித்து விட முடியாது. இந்த நிலையில் வடகொரியா தொடர்ந்து விடுத்து வரும் அச்சுறுத்தலானது வெறும் உளவியல் நடவடிக்கையா அல்லது உண்மையாகவே எதிர்விளைவுகள் எதுவானாலும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் தான் இந்தச் செயற்பாட்டில் இறங்கியுள்ளதாக என்பது தெரியவில்லை.

வடகொரியாவில் பொது மக்கள் மத்தியில் பலத்த வறுமை நிலை இருந்து வருவதாகவும் அந்நாட்டு அரசு இராணுவ செயற்பாடுகளுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

அதனால் இப்போது ஐ.நா. மற்றும் நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடையானது அந்நாட்டைப் பெரும் இக்கட்டில் வீழ்த்தியிருக்க முடியும் என்ற கருத்தும் நிலவுகின்றது. எனவே தான் போர் ஒன்றை தானே முயன்று உருவாக்கும் நிலைக்கு வடகொரியா ஏன் சென்றுள்ளது என்பது மர்மமாகவே உள்ளது.

வடகொரியா அதன் எதிரி நாடுகள் என்று கருதும் தென்கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்க நிலைகள் மீது ஒரு குண்டை தானும் வீசுமானால் இந்தநாடுகள் அனைத்துமே அதன்மீது எதிர்த்தாக்குதல் நடத்தும் நிலைமை இருந்து வருகின்றது.

இதன் விளைவு என்னவாக இருக்கும் என்று இப்போதைக்கு எதிர்வு கூற முடியாவிட்டாலும் பேரழிவு ஒன்றுக்கு இது இட்டுச் செல்லும் என்பதை கூறத் தேவையில்லை. அது மட்டுமல்ல அதுவே [illegible] அந்த இடமுண்டு.

## அமெரிக்க தென்கொரிய ஒருங்கிணைந்த ஏற்பாடு

வடகொரியா எந்த நேரத்திலும் மத்தியரக ஏவுகணைத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் அமெரிக்காவும் தென்கொரியாவும் தமது ஒருங்கிணைந்த இராணுவ விழிப்புணர்வு ஏற்பாடுகள் திட்டத்தின் வலுவினை மேல் நிலைக்கு உயர்த்தியுள்ளன.

இரு தரப்பு ஒருங்கிணைப்பு கண்காணிப்பு அந்தஸ்து நிலையானது மூன்றிலிருந்து இரண்டுக்கு உயர்த்தப்பட்டிருப்பதாகவும் இது முக்கிய அச்சுறுத்தல் ஒன்று இருப்பதை குறிப்பதாகும் என்றும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வோச்கொன்-4 என்ற கண்காணிப்பு நிலை அமைதி நிலவும் காலத்திலும் வொச் கொன்-3 நிலையானது மிக முக்கிய அச்சுறுத்தலை குறிக்கும் என்றும் வொச்கொன்-1 என்பது போர் நடைபெறும் காலத்தில் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கடந்த வாரம் வடகொரியா தனது இரண்டு முசடான் ஏவுகணைகளை அதன் கிழக்குக் கரைப்பகுதிக்கு அவைகளின் நகர்த்தும் செலுத்திகளில் வைத்து ரயில் மூலம் கொண்டு சென்றுள்ளதாக தென் கொரிய புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடகொரியாவின் நிறுவுநர் கிம் இல் சுங் பிறந்தநாள் ஏப்ரல் 15 ஆம் திகதி வருவதால் ஏவுகணை சோதனையை அத்தினத்தில் நடத்துவதற்கு வடகொரியாத் திட்டமிட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

## ஜப்பான் தற்காப்பு ஏற்பாடு

வடகொரியா டோக்கியோ மீது தாக்குதல் ஏதும் நடத்தும் பட்சத்தில் அந்நகரில் வாழும் 30 மில்லியன் மக்களின் உயிர்களை பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை ஜப்பான் செய்து வருகின்றது. அதன் காரணமாக தனது பேட்ரியோட்டிக் ஏவுகணைகளை நகரின் முக்கிய இடங்களில் அது நிலை கொள்ளச் செய்துள்ளது.

இது குறித்து ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இற்ஸர்னோரி ஒனோதெரா கூறுகையில்;

நாங்கள் விழிப்போடு இருக்கிறோம். பேட்ரியோட்டிக் ஏவுகணைகளை நிலைநிறுத்துவது உட்பட பலபாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்று கூறினார்.

எமது மக்களின் உயிர்களைப் பாதுகாக்க எமது அரசு மிக முக்கிய நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுத்து வருகின்றது என்று ஜப்பானிய பிரதம மந்திரி ஷின்ஸோ அபே தெரிவித்துள்ளார்.

வடகொரியா தொடர்ந்தும் ஆத்திரமூட்டும் கருத்துக்களைக் கூறிவருகின்றது. ஜப்பான் சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளுடனும் ஒத்துழைத்து என்ன செய்யவேண்டுமோ அதை நிறைவேற்றுவோம் என்றார் ஜப்பானிய பிரதமர்.

நாளை ஏப்ரல் 15 ஆம் திகதி வடகொரியாவின் நிறுவுநர் கிம் இல் சுன் பிறந்தார். இன்றைய தினத்தை முக்கியப்படுத்துவதற்காக அந்நாடு ஏதாவிலும் நடவடிக்கையில் இறங்கலாம் என்று உலக நாடுகள் எதிர்பார்க்கின்றன. ஏற்கனவே தொலைதூர ஏவுகணை பரிசோதனையொன்றை நாளைய தினம் நடத்துவதற்கு வடகொரியா ஏற்பாடுகளைச் செய்து வருவதாக செய்திகள் கிடைத்துள்ளன. அதுமட்டுமன்றி சமீபகாலமாக அது அச்சுறுத்திவருவது போல் அணுகுண்டு தாக்குதல் ஒன்றை நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார்கள் விமர்சகர்கள்.

## கிளின்டனின் மகளும் அரசியலுக்கு

அடுத்துவரும் அமெரிக்க அதிபர் தேர்தலில் ஹிலாரி கிளின்டன் போட்டியிடக் கூடும் என்ற செய்தி வெகுவாக பரவி வரும் அதேநேரம் அவர்களின் மகள் செல்சியும் அரசியலில் இறங்கக்கூடும் என்று தெரிய வந்துள்ளது. இதுபற்றிய செல்சி சூசகமாக கருத்துவெளியிட்டுள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் அவரிடம் எதிர்காலத்தில் அரசியலில் இறங்கும் நோக்கம் ஏதும் உண்டா என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் இப்போது நான் ஒரு நகரத்தில் வாழ்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இங்கு எமது மேயரை பெரிதும் ஆதரிக்கிறேன். எமது ஆளுநர் எமது அதிபர், எமது செனேட்டர்கள் மற்றும் பிரதிநிதிகளை ஆதரிக்கிறேன். ஒருகட்டத்தில் என்னால் பெரிதாக அர்த்தமுள்ள ஒருதாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்ற நிலை வந்தால் அந்த நேரம் என்னையே கேட்டு அதற்கு விடை கண்டுபிடிப்பேன் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய வருட புத்தாண்டு சிறப்பு மலர் 14.04.2013

## நன்மைகள் பல செய்தால் இறையருள் நம்மோடு நிற்கும்



இனிய புத்தாண்டை மகிழ்வுடன் வரவேற்போம். எல்லோரும் இன்புற்று இனிதாய் வாழ இறைவனைப் பிரார்த்திப்போம். மனித வாழ்வு மகத்தானது.

இறைவன் எமக்குத் தந்த அரிய பிறவியை புனிதமாகப் பேணுவோம். புதிய ஆண்டு பிறக்கும் வேளை புதிய நல்ல எண்ணங்களோடு இறைவனை மன்றாடுவோம். பிரியாவிடை பெறும் ஆண்டில் நாம் செய்த நல்ல காரியங்களை நினைத்துத் திருப்தி அடைவோம். கடந்து செல்லும் ஆண்டில் நாம் விட்ட தவறுகளை நினைத்து கடவுளிடம் மன்னிப்பு கேட்போம். புதிய ஆண்டில் நல்ல விடயங்களை வெற்றிகரமாகச் சாதிக்க வேண்டுமெனத் திடசங்கற்பம் கொள்வோம்.

நல்ல மனிதர்களின் தொடர்பை வலுப்படுத்துவோம். காலத்தின் பெறுமதியை உணர்ந்து ஒவ்வொரு நிமிடத்தையும் தவப்பொழுதாகக் கருதி நல்ல காரியங்களுக்குச் செலவு செய்வோம். எம் மண்ணில் மக்கள் படும் அல்லலை அனைவரும் உணர்வுபூர்வமாகத் தெரிந்து கொள்வோம்.

எமக்குக் கிடைத்த உணவு, உடை, உறையுள், உறவு, உழைப்பு போன்ற அனைத்துக்கும் புத்தாண்டில் இறைவனுக்கு நன்றி கூறி வாழ்த்துவோம். அல்லற்படும் மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு எம்மால் இயன்றவரை சிறிதளவேனும் உதவ முன்வருவோம்.

தாய், தந்தை, எமக்கு வழிகாட்டிய குரு, மூத்தோர் இவர்களை மன நிறைவோடு நேசிப்போம். இளைய தலைமுறையினரை இனிய வழிகாட்டி ஆற்றுப்படுத்துவோம். பிறரைக் குறை கூறுவதை விடுத்து நாம் ஏதாவது நன்மை செய்தோமா? என எம்மையே வினா எழுப்பி நல்வழிசமைப்போம்.

எவர் எமக்கு உதவி செய்தாலும் அந்த உதவியை எப்பொழுதும் மறவாதிருக்கக் கற்றுக்கொள்வோம். பிறருக்கு என்ன தீமை செய்யலாம் என்பதை எண்ணத்தில் வளர்க்காமல் என்ன நன்மை செய்யலாம் என்பதை வளர்த்துக் கொள்வோம்.

அன்பு நிறைந்த உறவுகளை இனிய புத்தாண்டு நன் நாளில் தூயசிந்தனையோடு திருக்கோயிலுக்கு சென்று குடும்பம் குடும்பமாக வழிபாடு செய்ய வேண்டும். எம்மை வளர்த்து ஆளாக்கிய தாய், தந்தையை மன நிறைவோடு பிரார்த்தியுங்கள். மூத்தோரை நாடி நல்லாசி பெற்றுக் கொள்ளுங்கள். உறவினர், நண்பர்கள் வீடுகளுக்கு சென்று உறவை வலுப்படுத்துங்கள். நாள், கோள், கிரகம் எமக்கு நலன் தருமா? என்று ஏங்கித் தவிப்பதை விடுத்து நாம் நன்மைகள் செய்தால் நம்மோடு இறையருள் நிற்கும் என்ற உண்மையை உணருங்கள். அச்சத்தைத் தவிருங்கள். அனைவருக்கும் இதயபூர்வமான இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிறேன்.

*கலாநிதி ஆறு.திருமுருகன்*
*தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி*
*தேவஸ்தானம், தெல்லிப்பழை.*
*தலைவர், சிவபூமி அறக்கட்டளை.*

வறுமையின் பிடியிலே வாடிடும்
ஏழைகள்
வாழ்வு சிறக்க வழி ஒன்று காட்டு
சீதனச் சிறையிலே வாடிடும்
பெண்களின்
வேதனை தீர்த்திட வேள்வித் தீ மூட்டு
போதையின் பிடியிலே சிக்கிப்
பாதை தவறிய மாந்தர் தம்மை
நேர்வழி திருப்பி நல்நெறி காட்டு
ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர்
கூட்டத்தை
எட்டிப்பிடித்து உதைத்திட வழிகாட்டு
காணாமற் போனவர்களை எல்லாம்...
கண்டுபிடித்துத் தந்திட பாதைகாட்டு
காத்திருந்து களைத்தப் போன-எமக்கு
காதினிலே தேன்பாய வேண்டும்
ஆயிரமாயிரம் கனவுகளோடும்...
பல்லாயிரம் ஆசைகளோடும்....
அலைந்து திரியும் எமக்கு
ஆறுதலான ஒரு வார்த்தை
சொல்லு
அமைதிப் படுத்திட வேண்டும்
எம்மை
இத்தனை காலம்
பட்டதுன்பம்-அத்தனையும்
நீ நீக்கி அருள வேண்டும்
குண்டுச் சத்தங்கள் கேட்ட
காதினிலே
இனி இனிய சத்தங்கள் கேட்டிட
வேண்டும்!
இத்தனை மட்டுமா? எத்தனை
சோகங்கள்...
எத்தனை கொடுஞ் செயல்கள்....!
அத்தனையும் அழித்தொரு
புதுயுகம்காண-வேண்டும்
இத்தனையும் நீ தந்தால் இனிய
ஆண்டே!
இப்பொழுதே நீ எம்மிடம் வா! வா!




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உளமார்ந்த இனிய விஜய வருட
தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்
Midea
PC Show Room
Authorized Dealer for Abans Ltd.
Midea
Electro Mart
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன் இலவச
விநியோக சேவையைப் பெற்றிட
No:1-1, 1-H, STANLEY ROAD,
JAFFNA.
Tel:021-2224566
Fax:021-2221646
No.4,, NEW MARKET,
CHAVAKACHCHERI
Tel:021-2270268
Fax:021-2270129
e-mail:midea21@gmail.com
www.mideamart.com
(C/5570)(10.6.7)

எமது இனிய
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
நவீன அடிக்கிய 22 கரட் தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்
வினோ நகைப் பூங்கா
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
Vino Nakai Poonka Gold & Jewel Merchant
குறிப்பு:
அதி நவீன
டிஜிற்றல் கருவி மூலம்
நகைகள் தரம்
பரிசோதித்து தரச்
சான்றிதழ்கள்வழங்கப்
படும் என்பதை
அறியத்
தருகின்றோம்.
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5394 / 021 222 9494 பக்ஸ்: 021 222 2824.
(C/5575)(10.6.7)

எமது உளம்கனிந்த விஜய வருட சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்
V.S.P
SPECIAL LUNCH OIL
V.S.P
Special
V.S.P
Gingelly Oil
சுகாதார முறையில் உணவிற்கும், வைத்தியத்திற்கும், விஷேடமாக தயாரிக்கப்பட்டது, சுத்தமான வி.எஸ்.பி நல்லெண்ணெய்.
தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்:
பரிமளா ஸ்ரோஸ்
இல.26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4135 / 9165
R/No:11505 உரிமையாளர் : திரு. பொ.பாஸ்கரன்.
(C/5571)(10.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய வருட புத்தாண்டு சிறப்பு மலர் 14.04.2013

## ஈழ மக்களுக்கு மங்கல வாழ்வு கிட்டட்டும்

இன்று புதுவருடப்பிறப்பு. இது ஒரு பொன்னான நன்னாள். இன்று பிறந்திருக்கும் விஜய வருடமானது ஈழம் வாழ் மக்கள் எல்லோருக்கும் இனிய மங்கள நல் வாழ்க்கையையளித்து அனைவருமே சுகமான வாழ்வில் நலமே வாழ வகை செய்ய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறையருளை வேண்டிப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.'

உலகம் சிறக்க ஒளியூட்டும் உதயன் நற்கதிர்களைப் பரப்பி நாட்டு மக்கள் மனதில் நம்பிக்கையூற்றுக்களை உருவாக்கி இன்று முதல் சிறப்பான வாழ்க்கையைச் சீரோடும் சிறப்போடுமளித்து சுகமே வாழ ஆசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

" ஒற்றுமையே பலம் " என்றபடி எமது ஈழவள நாட்டில் வாழ்கின்ற அத்தனை மக்களும் அன்பு, பண்பு, பாசம், மகிழ்ச்சியுடன் அனைத்து நலன்களும் அடையப் பெற்று ஆனந்தமாக வாழ்ந்திட இன்றைய புத்தாண்டு வழிகாட்ட வேண்டுமென நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து,



நல்லைக் கந்தப்பெருமானின் பத்மமலர்ப்பாத கமலங்களை வாழ்த்தி வணங்கி உளம் மிக மகிழ்ந்து அகமும் முகமும் மலர வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர்**
**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்**

## தர்மத்தை வெல்லும் காலம் வெகுதூரத்தில் இல்லை



ஈழத் தமிழினத்தின் வாழ்வுதனை சூது கௌவிய வரலாற்றில் துவண்டனம் நம்மினம். இன்று தர்மம் மறுபடியும் வெல்லும் எனும் இயற்கையின் மர்மத்தை நம்மாலேயே உலகம் கற்கும் காலம் கனிந்துவிட்டது. நம் தமிழினம் தர்மத்தை வெல்லும் காலமே புதிய வரலாற்றின் விடியலாகும். காலச் சக்கரத்தில் புத்தாண்டாம் விஜயவருஷம் இன்றைய விடியலாகின்றது. நாம் தர்மத்தை வெல்லும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

எல்லோரும் இன்புற்றிருக்க விரும்புவதல்லால் வேறொன்றறியோம் என நன்றே செய்வோம், நன்றே எண்ணுவம். விஜயவருஷம் எந்தமிழருக்கு எல்லாம் ஜெயமே ஆகும். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளலாய் கல்வி, கலாசார, சமூக வாழ்வு என அனைத்து பரிமாணங்களிலும் மிளிரட்டும் நம்மினம் அதற்காக உழைப்போம்.

இன்று பிறக்கும் விஜயவருடம் நந்தமிழருக்கு ஒவ்வொருவர் வாழ்விலும் வளம்கொழிக்கும் ஆண்டாக அரசியல் தீர்வு காணும் ஆண்டாக அமையும் என்பது திண்ணம்.

**ந.குமரகுருபரன், மேல்மாகாண சபை உறுப்பினர்**
**கொழும்பு மாவட்டம்**

## சொந்த ஊரில் மகிழ்வுடன் வாழ விஜய வருடம் வழிவிடட்டும்



இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களினதும் உரிமைகள் மதிக்கப்பட்டு, ஜனநாயக அடிப்படையில் வாழக் கூடிய சூழல் உறுதி செய்யப்பட்டு, சிறந்த ஒரு வாழ்க்கை முறையை வாழ்வதற்கும், சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்பட்டு சகலரும் சம அந்தஸ்துடன் வாழக் கூடிய ஒரு சூழல் உருவாக வேண்டும் என்பதே பிறக்கும் தமிழ் - சிங்கள புத்தாண்டில் எம் பிரார்த்தனையாக இருக்க வேண்டும். 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்த போர் முடிவடைந்து 3 வருடங்கள் கழிந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்த்த நிம்மதியும் சந்தோஷமும் இன்னும் அவர்களைக் கிட்டவில்லை. இது மிகவும் துரதிர்ஷ்டவசமான செயலாகும்.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கெடுபிடிகளும், இன்னல்களும் தினந்தோறும் அதிகரித்துக் கொண்டிருக்கும் ஒரு சூழலிலேயே புத்தாண்டை சந்திக்கின்றோம்.

மக்கள் சேவை ஆட்சி கொள்ளக் கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட்டு தமிழ் மக்கள் தமது சொந்த பிரதேசங்களில் குடியமர்ந்து நிம்மதியாக புதுவருடத்தைக் கொண்டாடக் கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறான ஒரு சூழலை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டு, எதிர் காலத்தில் எமது சொந்த கிராமத்தில் உறவினர்களுடன் புத்தாண்டை கொண்டாடக் கூடிய ஒரு சூழலை உருவாக்குவதற்கு முயற்சிப்போம்.

இவ்வாறான ஓர் எதிர்காலத்தை வேண்டியவனாக பிறக்கும் விஜய வருடப் புத்தாண்டு எம் அனைவருக்கும் சிறந்த ஒரு விஜய வருடப் புத்தாண்டாக அமைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**சிரேஷ்ட சட்டத்தரணி டீ.எம். சுவாமிநாதன்**
**[நா.உ.] தர்மகர்த்தா-**
**ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில்.**




சிறி சிவாஞ்சனா நகையகம்
விஜய புது வருட நல்வாழ்த்துக்கள்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்
இல.149 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், தொ.பே: 021 222 9227.
(C/5572) (10.6.7)

ABI BABY MART and BABY CARE CENTER
உங்கள் ஆதரவு எங்களின் உயர்வு



வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய விஜய வருட தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள்



267, Brown Road, Jaffna. (கலட்டிச் சந்திக்கு அருகில்) 0212229836, 0755058982
(C/5567)(10.6)

மனம் போல் என்றும் வாழ்வாங்கு வாழ இனிய விஜய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
சகல விதமான மின்சார இலத்திரனியல் உபகரணங்களை
உத்தரவாதத்துடனும் இலவச விநியோக சேவையுடனும் பெற்றுக்கொள்ள

LG No 1 Dealer in SriLanka



LG JAFFNA ELECTRICAL
(Abans Dealer Show Room)
141, Power House Road, Jaffna. T.P: 021 222 8378, 5766.
No.135, A-9 Road, Kilinochchi. T.P: 021 228 0008
Authorized Dealer for Abans
(C/5573)(10.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய வருட புத்தாண்டு சிறப்பு மலர் 14.04.2013


வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது இனிய
விஜய வருட சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

SFS

## தங்க அதிர்ஷ்டம்

ரூபா 30,000/= நிலையான வைப்புக்களை ஆரம்பித்து

பெறுமதிமிக்க தங்க நாணயக்குற்றி ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

